உ

சிவமயம்.



தினசரி

உபதேச மொழிகள்.

இஃது

தினசரி பாடரூபமாக

வைத்துக்கோஜா

மா. வ. செல்லையாபிள்ளை அவர்களால்

தொகுக்கப்பட்டு

சண்டிலிப்பாய், நடுக்குறிச்சி

ப. மு. சிகராசசிங்கம் அவர்களால்

யாழ்ப்பாணம்

நாவலர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1929. விலைரூபா 1-50.

170
செல்லை
ட L/PR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகத்திற்கு
சிவமயம்.
வயிரவபிள்ளை
அன்பளிப்பாக அளித்தது
12/10/04
திகதி தினசரி

உபதேச மொழிகள்.

இஃது

தினசரி பாடரூபமாக

வத்துக்காஜா

மா. வ. செல்லையாபிள்ளை அவர்களால்

தொகுக்கப்பட்டு

சண்டிலிப்பாய், வடக்குதிச்சி

ப. மு. செகராசசிங்கம் அவர்களால்

யாழ்ப்பாணம்,

சாவலர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1929.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
34099
நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

பாயிரம்.

யாழ்ப்பாணத்திலே ஒல்லாந்தர் காலத்திலிருந்த தமிழ்ப்புலவர்களுள்ளும் சிவபத்தர்களுள்ளும் வில்லவராசமுதலியார் என்பவரும் அவர்மகன் சின்னத்தம்பிப்புலவர் என்பவரும் திலகம்போன்றவர்களென்பது எல்லாரும் அறிவர். சின்னத்தம்பிப்புலவரியற்றிய மதுரைசயந்தாதிக்கு அக்காலத்திற் கொடுக்கப்பட்ட சிறப்புப்பாயிரம் இது:—

"செந்தாதியன்மணிப் பூண்புலியூரற்குச் சேர்ந்தளித்த
சிந்தாத்தியானஞ் செய்வில்லவராசன் திருப்புதல்வன்
நந்தாவளந்திகழ் நல்லூர்சின்னத்தம்பி நாவலன்சீர்
அந்தாதிமாலையை வேதாடவீசற் கணிந்தனனே."

இந்த அந்தாதியைப் புகழ்ந்து அச்சிட்டவர்கள் ஆறுமுக நாவலரவர்கள். பின் உரை எழுதினவர் சிவசம்புப்புலவர் முதலாஞ்சேர். இத்தண்மை வாய்ந்த புலவர்பெருமானுடைய வழியிற்பிறந்த பராசசிங்க முதலியாருடைய மகன் சேகராசசிங்கம் என்பவர்.

இவர், கீரிமலையிலே 1735-ம் ஆண்டிலையிற் கட்டப்பட்டு வாலியார்மடமெனஇப்போது வழங்கும்தண்டிகைக்கனகராயமுதலியார் மடமும் அதைச்சேர்ந்தசில கட்டடங்களும் மிகவும்சிலமாயிருப்பதைக்கண்டு அவைகளைத் திருத்த விரும்புகின்றார். இம்மடம் இப்போது இவர் பராமரிப்பில் இருக்கின்றது.

"ஆவிற்கு நீரென்றிரப்பினு நாவிற்— கிரவினிவி வந்தநில்" என்ற திருவாக்கின்படி எல்லாரும் தருமத்துக்கு என்றுதானும் இரக்க உடன்படார்கள். இவர் இந்தமடத்தைத் திருத்துவதற்கு எவையாவது வருத்திப் பொருள்வாங்க விரும்பாமல் அதுவுமொரு புண்ணியவழியாற் பெற விரும்பி இந்தத் தீனசரி உபதேசமொழிகள் என்னும் நூலை இவர்மைத்துனரும் மலாய்நாட்டைச் சேர்ந்த வத்துக்காஜா நீதிமன்றத்துத் துபாஷுகருமாகிய மாலைமுதலியார் வைத்தியலிங்கம் செல்லையாவைக் கொண்டு இயற்றுவித்து அச்சிட்டிருக்கிறார். இந்தநூலிலிற்று அதனால் வரும்பொருளைக்கொண்டு இப்பணியை நிறைவேற்ற நினைக்கின்றார்.

இந்தநூல் வருஷத்திலுள்ள 365 நாளைக்கும் நாளொன்றுக்கு ஒரு பாடமாக 365 பாடங்களை யுடையதாயிருக்கின்றது. இதற்காகத் தெரியப்பட்ட 365 செய்யுள்களும் அருமையான நூல்களிலின்றும் எடுக்கப்பட்டன. யாவரும் இந்நூலைவாங்கி ஒவ்வொருநாளும் காலைகளில் தங்கள் தங்கள் தொழில்களுக்குப் போவதற்குமுன் ஒவ்வொருபாடமாக வாசித்து மனனம் பண்ணிக்கொண்டால், அக்நாள்முழுதும் அதை நினைத்து நினைத்து அதேதியானமாயிருக்கலாம் அதலைற் பெருநன்மைகள் உண்டாகும், அறிவு வளரும். ஆதலால் இந்தநூலை அதற்குரிய விலையைக்கொடுத்து வாங்கி வாசிப்பது எல்லா வகையாலும் நல்லது. பொருள் கட்டம் இல்லை. புண்ணியமுண்டு.

நல்லூர்

சுக்கிலவரு ஆடிமீ

இங்ஙனம்

த. கைலாசபிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழை திருத்தம்.

பக்கம்	மூ-	தேதி	இடம்	வரி	பிழை	திருத்தம்
உஅ	பங்குனி	கஉ	க-ரை	1	புகலாதார்	புகல்வார்
சுக	ஆனி	எ	க-ரை	3	செய்யார்	செய்வார்
ககடி	கார்த்திகை	உ	முகப்பு	–	Irdustry	Industry
ககக	,,	கடி	முகப்பு	–	Grieffor the dead	Grief for the dead

இலபிரதிகளில் சுடி ம் பக்கத்தில் ஆனிமீ உ0ஊ கருத்துரையில் முத லரம் வரியில் சடரூபமாகிய என்றதைச 'சடரூபமாகிய' என்றும், சுசு ம் பக்கத்தில் ஆனிமீ உஙஊ முகப்பு Obstinence from Meat-eating என்றதை Abstinence from Meat-eating என்று வாசிக்கவும்.

கூ

கணபதிதுணை.

தினசரி உபதேச மொழிகள்.

காப்பு.

உலகினிலுயிர்க்கு முன்னே யூழ்வினைப் பயங் கடம்மை
விலகிடும்படிக்குச் செய்வான் விக்கின விருளைப்போக்க
நிலவிய ஞானபானு நிதந வங்கரத்தன் பாத
மலர்களை வணங்கி வாழ்த்திமன மிசையிருத்துவாமே.

தைமீ கூ

ஈசுவரன்—God.

அவனவளதுவெனு மவைமூவினமையிற்
றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதா
மந்தமாதி யென்மனர் புலவர்.

—சிவஞானபோதம்.

(க-ரை) அவனென்றும், அவளென்றும், அதுவென்றும் இவ்வாறு பகுத்துப் பலவாய்ச் சுட்டியுணரப்படுஞ் சொல்லும் பொருளுமாய் இருகூற்றுப் பிரபஞ்சத் தொகுதி, தோற்றம், நிலை, இறுதி, என்னும் முத்தொழில் உடைமையால், ஒருவனல் தோற்றப்பட்டதாகிய உட்பொருளேயாம். அது தோன்றுங் கால் தான் ஒடுங்குதற்கு எதிர்வாய் நின்ற கடவுளினின்றும் சகசமல நீங்காமையால், அது நீங்குதற் பொருட்டு மீளத் தோன்றுவதாம். ஆகையால் சங்காரத்தொழிலைச் செய்யுங் கடவுளே உலகிற்கு முதல் கடவுள்.

தைமீ உஉ

ஈசுவரன்—God.

இராத்திரியில் ஆகாயத்தில் அநேக நக்ஷத்திரங்களைக் காண்கிறாய். ஆனால் சூரியோதயமானதும் அவைகள் தென் படுவதில்லை. ஆகலால் பகற்போதில் ஆகாயத்தில் நக்ஷத்திரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களே இல்லையென்று சொல்லலாமா? மனிதனே! உனது அஞ் ஞான காலத்தில் நீ ஈசுவரனைக்காண முடியாததனால் ஈசுவரனே இல்லையென்று சாதிக்காதே.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ கூ

ஈசுவர தோற்றம்—Divine Manifestation.

கெருப்புக்கு அதற்கென்றே ஒரு ஸ்திரமான உருவம் இல்லை. ஆனல் தணல்விட்டு எரியும்போது அதற்கு வெவ்வேறு ரூபங்கள் உண்டாகின்றன. ஆதலால் நிராகார கெருப்புக்கு ரூபங்கள் தோன்றுகின்றன. அதைப்போலவே நிராகாரனான ஈசுவரன் சிற்சிலவேளைகளில் ஏதேனுமொரு ரூபத்தை எடுக் கின்றன்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ சஉ

சர்வ வியாபகர்—Omnipresent God.

கடிக்கும் பாம்பும் அக்கடியைக் குணப்படுத்தும் வைத்தி யனும் நானே. தண்டனை விதிக்கும் நியாயாதிபதியும் அத்தண் டனையை நிறைவேற்றும் வேலைக்காரனும் நானேனன்று ஈசுவரன் சொல்லுகிறன்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ நிஉ

மாயை—Ignorance (Maya)

மப்பு மந்தாரமே இல்லாத ஆகாயத்தில் திடீரென்று ஒரு மேகம் தோன்றி விண் முழுவதையும் மறைக்கலாம். பிறகு அம் மேகம் திடீரெனக் காற்றினல் துரத்தப்பட்டு அப்பால் போகவும் கூடும். அதைப் போன்றதுதான் மாயையும். அது திடீரென்று ஞானத்தை மறைத்துத் திருஷ்டிக்குப் புலப்படும் ஜகத்தை யுண்டாக்கிப் பின் ஈசுவரனுடைய மூச்சுக்காற்றினல் அகன்று ஒழிகின்றது.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ கூஉ

மாயை—Ignorance (Maya.)

ஈசுவரன் எங்கும் இருப்பவரானல் நம்மால் என் அவரைப் பார்க்க முடியவில்லை? பாசியும் நாணலும் மிகுந்திருக்கும் குளத்தின கரையில் நின்று கொண்டால் அக்குளத்தில் ஜலமே இல்லையென்றுதான் நீ சொல்லுவாய். ஜலத்தைக்காண வேண்டு மானல் குளத்தின் மேற்பரப்பிலிருந்து பாசியை அகற்ற வேண்டும். மாயையாகிற திரையால் மூடப்பட்ட கண்களை யுடைய நீ ஈசுவரனைக்காண முடியவில்லை என்று குறை கூறு கிறாய். அவனைக்காண வேண்டுமானல் உனது கண்களினின் றும் மாயையாகிய திரையை அகற்று.

ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ எஉ

மாயை—Ignorance Maya.

மேகம் சூரியனை மறைப்பது போல மாயையும் ஈசுவரனை மறைக்கின்றது. மேகம் அப்பால் அகன்று போனதும் சூரியன் காணப்படுகிறது. அதுபோல மாயை அகன்றதும் ஈசுவரன் கண்ணுக்குத் தென்படுவான்.

ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ அஉ

ஈசுவரனும் மாயையும்—God and Maya.

பாம்புக்குப் பல்லில்லாவிடமிருந்தபோதிலும் அவ்விடத்தால் அது நிர்மலனை அடைவதில்லை. ஆனல் அது பிறரைக் கடித் தால் அவ்விடம்கடியுண்டவனுக்கு மரணத்தைத்தரும். இதைப் போல ஈசுவரனிடத்திலும் மாயை உள்ளது. ஆனல் அது அவரைப் பந்தப்படுத்தாமல் ஜகம் முழுவதையும் தனக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கிறது.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைமீ கூஉ

பக்தனும் மாயையும்—The devotee and Maya.

பூனையானது தனது குட்டிகளைப் பற்களால் பிடிக்கும் போது அக்குட்டிகளுக்குத் தீங்குண்டாவதில்லை. ஆனல் அது ஒரு எலியை அப்படிப் பிடிக்குமானல் அவ்வெலி உடனே இறக்கின்றது. இதைப் போலவே மாயையானது மற்றவர்களை நாசமாக்குமானலும் பக்தனை ஒருபோதும் கொல்லாது.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ கஅஉ

ஈசுவர பக்தி—Piety.

வெறுங் கண்ணாடியில் யாதொரு உருவமும் பதிவதில்லை. ஆனல் தகுந்த வஸ்துக்களை அக்கண்ணாடியின் மேல் பூசிய பிறகு படங்களை எழுதலாம். அதுபோலபக்தியாகியவஸ்துவை மானிட இருதயத்தின் மீது தடவினல் அந்த ஈசுவரனுடைய ரூபத்தைப் பதியச் செய்யலாம்.

ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ சஉ

ஈசுவர பக்தி—(Piety)

சாரணமின்றியும் ஈசுவரனிடம் பக்தி கொள்வதென்ப தொன்றுண்டு. இந்த நிலையை அடைந்துவிட்டால் அப்பால் விரும்பிப் பெறக்கூடிய பொருள் ஒன்றுமே இராது. அப்படிப் பட்ட பக்தியுடையவன் ஈசுவரனே! "எனக்குச் செல்வம் வேண் டாம்; புகழ் வேண்டாம்; ஆரோக்கியம் வேண்டாம்; சந்தோ ஷம் முதலிய மற்றெதுவும் வேண்டாம்; உனது பாதாரவிந்தங் களில் கலப்பற்ற பக்திமட்டும் இருக்கும்படி கிருபைபுரிய வேண்டும்" என்பான்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ கஉஉ

பக்தி வகை—Stages of Piety.

பக்தி, வைதிக பக்தி என்றும் ராகபக்தி என்றும் இரு வகைப்படும். வைதிக பக்தி என்பது சாஸ்திரங்கள் விதிக்கிற படி பக்தி பண்ணுதலாம். பகவந்நாமத்தைப் பலதடவை உச் சாரணம் பண்ணுதல், உபவாசமிருத்தல், தீர்த்தயாத்திரை போதல், வேண்டிய சாமக்கிரியைகளைக்கொண்டு பூசைசெய்தல் முதலியன. இப்படி நெடுங்காலம் பக்தி செய்தால் ஈசுவர பக்தியில் இன்னும் உயர்ந்தநிலைமையான ராகபக்தியைப் பெறக் கூடும். எல்லாவற்றிற்கும் ப்ரேமைதான்முக்கியம். உலகப்பற்று முற்றிலும் அகலவேண்டும். அப்போது தான் அவனை அடைய முடியும். ராகபக்தி இல்லாமல் அவனை அடைய முடியாது.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

தைமீ கஙஉ

ஈசுவரப் பிரமை—Devotion of God.

மாயையின் கைகளினின்றும் விடுபடுவதற்கு நாம் செய்ய வேண்டிய உபாயங்கள் எவை? அதன் கைகளினின்றும் விடுபட வேண்டுமென்ற ஆவலுள்ளவனுக்கு ஈசுவரனே வழியைக்காட்டி அருள்கிறான். இடைவிடாதஆவல்தான் அவசியமானது, ஈசுவர னைப்பற்றி சதா ஆவலுடன் சிந்திப்பவனுக்கு பானம் ஆகாரம் முதலிய சில்லரை விஷயங்களில் மனம் செல்வதில்லை.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ கசஉ

ஈசுவரப் பிரமை—Devotion of God.

இயேசு கிறிஸ்து ஒருநாள் கடற்கரை ஓரமாய் உலாவிக் கொண்டிருக்கும்போது ஒரு பக்தன் அவரிடம் வந்து, "கர்த் தரே! ஈசுவரனை ஒருவன் எப்படி அடையக்கூடும்?" என்று கேட்டான். இயேசுகிறிஸ்து அப்படிக் கேட்டவனைப் சமுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரத்தில் இறங்கி அவனைத் தண்ணீரில் அமிழ்த்தினர். கொஞ்ச நேரத்திற்கெலாம் அவனை விடுவித்துக் கைகளைப்பிடித்துத் தூக்கி "உனக்கு எப்படி இருந்தது?" என்றார். பக்தன், "எனது ஸ்திதி வெகு பரிதாபமாக விருந்தது. எனக்கு அந்தியகாலமே வந்துவிட்டது போலத்தோன்றியது" என்று பதில் சொன்னன். இதைக்கேட்ட இயேசுகிறிஸ்து, "இப்போது தண்ணிருக்குள் இருக்கும்போது மூச்சு விடுவதற்கு உனக்கு இருந்த ஆவலைப் போன்ற ஆவல் ஈசுவரனைக் காண வேண்டியதற்கு இருக்குமானால் நீ ஈசுவரனை நிச்சயமாகத் தரிசிப்பாய்" என்றார்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ கஙஉ

ஈசுவர வைராக்கியம்—Divine Zeal.

இவ்வுலகத்திலிருக்கையில் நீ என்ன செய்ய வேண்டும்? எல்லாவற்றையும் ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்துவிடு. நீயும் அவனைச் சரணமடை. அப்பால் உனக்குத் துன்பமே இராது. எல்லாக்காரியங்களும் அவனுடைய ஆஞ்ஞைப் பிரகாரமே நடக்கின்றதென்பதை நீ தெரிந்து கொள்வாய்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ கசூஉ

ஈசுவர வைராக்கியம்—Divine Zeal.

உலர்ந்த இலைகள் காற்றினால் அங்குமிங்கும் அடிக்கப்படுகின்றன. அவைகளுக்குச் சுயேச்சையே கிடையாது. தாமாக ஓரிடத்துக்குப் போகவேண்டுமென்று பிரயத்தனப்படுவதில்லை. அதுபோல ஈசுவரனைச் சார்ந்திருப்பவர்கள் அவனுடைய இச்சையின்படியே நடந்து தமக்கென்று சுயேச்சையும் சுயமுயற்சியும் இல்லாதவராய் இருக்கின்றனர்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ கஙஉ

ஈசுவர வைராக்கியம்—Divine Zeal.

உனது சம்சார விஷயங்களெல்லாம் உன்னுடையன அல்லவென்றும், அவை ஈசுவரனுடையவை என்றும், நீ அவனுடைய கட்டளைப்படி நடக்கவேண்டியதாச னென்றும் எப்போதும் நினைத்துக்கொண்டிரு. இந்த அபிப்பிராயம் உன் மனத்தில் நிலைத்துப் போகும்போது உனது என்று சொல்லக்கூடிய பொருள் ஒன்றுமே உனக்கு இராது.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ கஅஉ

ஈசுவர வைராக்கியம்—Divine Zeal.

எண்ணெய் ஊறிய கடதாசியில் ஒன்றும் எழுத முடியாது. அதுபோல நிலையும் பெருமித வாழ்க்கையுமாகிற எண்ணெய்ப் பசையால் கெட்டுப்போன ஆன்மா ஆத்ம பக்திக்கு உதவாது. எண்ணெய்க் கடதாசியின் மீது சுண்ணாம்புப் பொடியைப் பரப்பினால் அது எழுதுவதற்கு உபயோகப்படும். அதுபோல வைராக்கியம் என்னும் சுண்ணாம்புப் பொடியை ஆத்மாவின் மீது பரப்பினால் அது மறுபடியும் ஆத்மாபிவிருத்திக்கு உபயோகமாகும்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

தைமீ சஙஉ

ஈசுவர விசுவாசம்—Divine Faith.

கல்லானது தண்ணீரில் அநேக வருஷங்கள் கிடந்தாலும் அத்தண்ணீர் அதனுள் நுழையாது. ஆனால் களிமண்ணை ஜலசம்பந்தத்தால் வெகு சிக்கிரத்தில், மிருதுவாகி விடுகிறது. அதுபோல பக்தனுடைய நிடமான மனம் இம்சையாலும் சோதனையாலும் தடுமாற்றம் அடைவதில்லை. திடபக்தியில்லாதவனுடைய மனமோ வெகு அற்பமான காரணத்தைக்கொண்டும் சலனமடையும்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைமீ ஊ0உ

ஈசுவர விசுவாசம்—Divine Faith.

சிக்கிமுக்கிக்கல் கற்பகோடி காலம் வரையிலும் தண்ணீரில் கிடந்தாலும் தன் உள் நெருப்பை ஒருபோதும் இழப்பதில்லை. எப்போது வேண்டுமானாலும் சரி அதை இரும்பால் தட்டினால் நெருப்புப்பொறி பறக்கும். அதுபோலத்தான் திடசித்தமுள்ள பக்தனும் அவன் உலக பாசங்களினிடையே கலந்திருந்தாலும் அவனுடைய பக்தியும் ப்ரேமையும் குறைவுபடா. ஈசுவரனுடைய நாமத்தைக்கேட்ட மாத்திரத்திலேயே அவன் தன்னை மறந்தவனாய் விடுகிறான்,

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ உகஉ

விக்கிரகாராதனை—Image worship.

முதன் முதலில் பெரிய எழுத்துக்களை எழுதத் தெரிந்து கொண்ட பிறகு சிறிய எழுத்துக்களை எழுத ஒருவன் கற்றுக் கொள்வதைப்போல உருவமுள்ள வஸ்துவின்மீது மனத்தைச் செலுத்தி ஏகாக்கிரசக்தியை ஒருவன் அடையவேண்டும். அதில் அவனுக்கு அனுபவம் உண்டான பிறகு உருவமற்ற வஸ்துவினிடம் மனத்தைச் சுலபமாகச் செலுத்தலாம்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

தைமீ உஉஉ

விக்கிரகாராதனை—Image worship.

குறிபார்த்துச் சுடுபவன் முதலில் பெரிய பொருள்களைக் குறியாகக்கொண்டு சுடக் கற்றுக் கொள்ளுகிறான். அனுபவம் பெறப்பெற சிறுகுறிகளை நோக்கிச் சுடுகிறான். அதுபோல உருவமுள்ள விக்கிரகத்தினிடம் மனம் நிற்கும்படியான பயிற்சி உண்டான பிறகு உருவமே இராத வஸ்துவினிடம் அது நிலைத்திருப்பது சுலபமாகும்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ உகஉ

விக்கிரகாராதனை—Image worship.

"பசுவினிடமுள்ள பாலானது வாஸ்தவத்தில் அதின் சரீரமுழுவதிலும் இரத்தரூபமாய்ப் பரவியுள்ளது என்றாலும் அப்பசுவின் காதுகளையோ கொம்புகளையோ பிசைந்தால் பால் வராது" அதற்கு அதன்முலைக்காம்புகளைப்பிடித்துக்கறக்கவேண்டும். அதுபோல் ஈசுவரன் இவ்வுலகத்தில் எல்லா இடங்களிலும் பரவியிருக்கிறான். ஆயினும் எல்லாவிடத்தும் அவனை உன்னல் காணமுடியாது. பூர்வபக்தர்களுடைய குணவிசேஷம் நிரம்பிய புனணிய ஸ்தலங்களாகிய கோவில்களில்தான் அவன் சுலபமாகத் தென்படுகிறான்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

தைமீ உசஉ

நிலையாமை—Transitoriness.

மருவினிய சுற்றமும் வான்பொருளுநல்ல
உருவு முயர்குலமு மெல்லாங் திருமடந்தை
யாம்போ தவளோடு மாகு மவள்பிரிந்து
போம்போது அவளோடு போம்.

—மூதுரை.

(கு-ரை) தழுவிய இனிய உறவும், மேலாகிய பொருளும் நல்ல அழகும், உயர்வாகிய குலமும், என்னும் இவைகளெல்லாம் சீதேவி வந்து கூடும்பொழுது அவளுடனே வந்துகூடும். அவள் நீங்கிப் போம்பொழுது அவளுடனே நீங்கிப்போகும்.

தைமீ உறிஉ

நிலையாமை—Transitoriness.

ஊருஞ்சதமல்ல உற்றூர்சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர்சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேயத்திலே
யாருஞ்சதமல்ல நின்றூள்சதங்கச்சி யேகம்பனே.

—பட்டினத்தடிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) ஊரும் நிலையல்ல. உறவினரும் நிலையல்ல. பல வகையாக விரதங்காத்தல் முதலிய தவங்களை அடைந்து பெற்றோர்களாகிய தாய்தந்தையரும் நிலையல்ல. மாதர்களும் நிலையல்ல. மக்களும்சிறப்பும் நிலையல்ல. ஐசுவரியமும் நிலையல்ல. நாட்டிலுள்ள யாவரும் நிலையல்ல. சச்சிதேகம்பனே? உன்திரு வடியே நிலையுடைய பொருள்.

தைமீ உசூஉ

செல்வநிலையாமை—Transitoriness of wealth.

அறுசுவை யுண்டி அமர்ந்தில்லா ளூட்ட
மறுகிகை நீக்கியுண்டாரும் - வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற் பாற்றன்று.

—நாலடியார்.

(க-ரை) அறுவகை ருசிகளுடைய உணவை அன்போடு பொருந்தி மனைவி எடுத்தெடுத்து உண்பிக்க மற்றொரு கவளத்தை வேண்டாவென்று தள்ளிப் புசித்த பெருஞ் செல்வமுடையோரும், அச்செல்வமழிந்து தரித்திரர்களாய் வேறோரிடத்தில் போய்க் கூழைப் பிச்சை எடுப்பார்களென்றால், செல்வம் நிலையாயுள்ளதாக வைத்து எண்ணத்தக்க தன்மையுடையதன்று.

தைமீ உஎஉ

செல்வ நிலையாமை—Transitoriness of wealth.

செல்வர் யாமென்று தாஞ்செல்வழி யெண்ணுத
புல்லறிவாளர் பெருஞ்செல்வ—மெல்லிற்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி
மருங்கறக் கெட்டுவிடும்.

—நாலடியார்.

(க-ரை) இப்பொழுது நாம் செல்வமுடையோம் என்று எண்ணித் தம்மைத்தாமே மதித்துத் தாம்போகுமிடங்களிற் பிறரை மதியாத அற்ப புத்தியுடையவர்களது மிக்க செல்வம்

இராத்திரியில் கருநிறமுடைய மேகம் வெளிவிட்ட மின்னல் போல் மிகச்சிறிது பொழுது காணப்பட்டு நின்று, உடனே இருந்த இடமும் தெரியாமல் அழிந்துபோம்.

தைமீ உஅஉ

செல்வ நிலையாமை—Transitoriness of wealth

தெய்வச் சிதம்பரதேவா
வன்சித்தந் திரும்பிவிட்டால்
பொய்வைத்த சொற்பன மாமன்னர்
வாழ்வும் புவியுமெங்கே
மெய்வைத்த செல்வ மெங்கே
மண்ட லீகர்தம் மேடையெங்கே
கைவைத்த நாடகசாலை யெங்கே
பிதற்கண்மயக்கே.

—பட்டினத்தடிகள்

(க-ரை) தெய்விகமானசிதாகாயத்தில்நடிக்கின்றகடவுளே! உன்திருவுள்ளம் மாறுபடின் பொய்த்தன்மையுள்ள கனவை நிகர்த்த அரசரது வாழ்க்கையும் பூமியும் எங்கே? மெய்த் தன்மை யமைத்து வைக்கப்பட்ட செல்வம் எங்கே? மண்ட லாதிபதிகளுடைய மேடை எங்கே? ஒப்பனையமைந்த நாடக சாலை யெங்கே? இதுவெல்லாம் கண்மயக்கமேயாம்.

தைமீ உசூஉ

செல்வ நிலையாமை—Transitoriness of wealth.

ஆறிடு மேடு மடுவும்போ லாஞ் செல்வ
மாறிடு மேறிடு மாநிலத்தீர் - சோறிடுந்
தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக
வுண்ணீர்மை வீறுமுயர்ந்து.

—நல்வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) பெரியபூமியில் உள்ளவர்களே! ஆற்றவெள்ளத் தினால் உண்டாக்கப்படும் மேடும் பள்ளமும் போல செல்வம் வளர்வதும் தேய்வதுமாய் இருக்கும். ஆதலினால் நிலையில்லாத செல்வம் உள்ளபொழுதே இரப்பவர்களுக்கு அன்னபானீயங் களைக் கொடுக்கிற சித்த சத்தியுண்டாகும்.

———

தைமீ ஈ0உ

செல்வநிலையாமை—Transitoriness of wealth.

நில்லாதவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மைகடை.

—குறள்.

(க-ரை) நிலையில்லாத செல்வத்தை நிலையுடைய தென்று நினைக்கின்ற அற்பபுத்தியை யுடையவராயிருக்கை இழிவு.

———

தைமீ ஈகஉ

செல்வநிலையாமை—Transitoriness of wealth.

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதனினிற் றற்று.

— குறள்.

(க-ரை) கூத்தாடுதல் செய்கின்ற சபையினிடத்தே கூண் போர் கூட்டம் வருதல்போலவும் கூத்தாட்டு முடிந்தவிடத்தே அக்கூட்டம் போகுதல் போலவும் பெருஞ் செல்வம்வரும்; போம்.

———

மாசிமீ கஉ

செல்வநிலையாமை—Transitoriness of wealth.

அற்கா வியல்பிற்றச் செல்வ மதுபெற்று
லற்குப வாங்கே செயல்.

—குறள்.

(க-ரை) செல்வமானது நிலையாத இயல்பை உடைய தாகும். அச்செல்வத்தைப் பெற்றால் அதனாலே செய்யப்படும் அறங்களைப் பெற்றபொழுதே செய்யக்கடவன்.

———

மாசிமீ உஉ

இளமை நிலையாமை—Transitoriness of youth.

நட்புஞா ரற்றன கல்லாரு மஃகினை
ரற்புத் தலையு மவிழ்ந்தன—வுட்கணுய்
வாழ்தலி னூதிய மென்னுண்டாம் வந்ததே
யாழ்கலத் தன்ன கலுழ்

—நாலடியார்.

(க-ரை) சினேகங்களாகிய பாசங்கள் உனது நண்பர்க்கு உன்னிடத்து அற்றுப்போயின. உன்னில் அன்பு கொண்ட மாதர்களும் அன்பு குறைந்தார்கள். உன்சுற்றத்தார்க்கு உன்னிடத்திலிருந்த அன்புகளாகியகட்டுக்களும்தளர்ந்து போயின. மனத்திலே ஊன்றி ஆலோசித்துப்பார். இளமையைப் பொருளென மதித்து மகிழ்ந்து வாழ்ந்ததனால் என்னபயன் உண்டாயிற்று. கடலில் மூழ்குகின்ற மரக்கலத்திலுள்ளவர்க்கு வந்தது போன்ற துன்பம் வந்துவிட்டதே.

———

மாசிமீ ஈஉ

இளமை நிலையாமை—Transitoriness of youth.

பனிபடு சோலைப் பயன்மர மெல்லாங்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—நனிபெரிதுங்
வேற்கண்ண ளென்றிவளோ வெஃகண்மின் மற்றிவளும்
கோற்கண்ண ளாகுங் குணிந்து.

—நாலடியார்.

(க-ரை) இளமைப்பருவமானது குளிர்ச்சி பொருந்திய சோலையிலுள்ள பலன்படுகிற மரங்களெல்லாம் பழங்கள் உதிர்ந்து, விழப்பெற்றுப் போன்ற நிலையில்லாத தன்மையை யுடையது. ஆதலால் இப்பொழுது வேல்போற் கூர்மையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களையுடையவளென்று எண்ணி இவளை (இளமைப்பருவத்தை) மிகவும் அதிகமாக விரும்பாதீர்கள். இவளும் பின்பு குளிர்ந்து உடம்பு கூனடைந்து வழிதெரிந்து நடப்பதற்கு ஊன்று கோலையே கண்ணாக உடையவளாவாள்.

———

மாசிமீ சஉ

யாக்கைநிலையாமை—Transitoriness of body.

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பலாய் வெந்து மண்ணுவதும் கண்டுபின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவ
ரடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே அறிவாரில்லையே.

—பட்டினத்தடிகள்.

(க-ரை) முடிபொறுத்த வேந்தரும் மற்றுமுள்ளோரும் முடிவுகாலத்தில் ஒருபிடி சாம்பலாக வெந்து மண்ணுவதையும் பாற்று மேலுமிந்த பிரபஞ்சத்தைச் சேர்ந்த நிலையற்ற வாழ்க்கையை எண்ணுவதே யன்றி பொன்னம்பலவாணரது திருவடிகளை சரணடைந்து நாம் பிழைக்கவேண்டுமென்று உணர்வோர் இவ்வுலகத்தில் இல்லை

———

மாசிமீ நுஉ

யாக்கை நிலையாமை—Transitoriness of body.

எரியெனக்கென்னும் புழுவோ வெனக்கென்னுமிந்த மண்ணும்
சரியெனக்கென்னும் பருந்தோவெனக்கென்னுந் தான்புசிக்க
நரியெனக்கென்னும் புன்னையெனக்கென்னு மிந்நாறுடலைப்
பிரியமுடன் வளர்த்தே னிதனுலென்ன பேறெனக்கே.

-பட்டினத்தடிகள்.

(க-ரை) தீதனக்குரியது என்றும், புழுதனக்குரியதென்றும், இந்த பூமியும் தனக்கு ஒத்ததென்றும், பருந்தோ தனக்குரியதென்றும், தான் உண்ணுகிறதற்கு நரி தனக்குரியதென்றும், இழிந்த நாய் தனக்குரியதென்றும், கருதுகின்ற இப்படிப்பட்ட நாறுகின்ற உடலை இஷ்டத்தோடு காப்பாற்றினேன். இதனால் எனக்கு என்ன பயன்?

மாசிமீ கூஉ

யாக்கை நிலையாமை—Transitoriness of body.

வருந்து முயிரொன்பான் வாயி லுடம்பிற்
பொருந்துத லுனே புதுமை—திருந்திழாய்
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு.

—நன்னெறி.

(க-ரை) திருந்திய ஆபரணத்தை யுடையவளே வருந்துகின்ற உயிரானது ஒன்பது துவாரங்களையுடைய உடம்பிலே தங்குதலே ஆச்சரியம். நீங்குதல் ஆச்சரியமன்று. குளிர்ச்சியாகிய நீரானது பொள்ளல்களையுடைய சிறிய குடத்திலே நில்லாது ஒழுகிப் போதலோ நிற்றலோ ஆச்சரியமாகும்.

———

மாசிமீ எஉ

யாக்கை நிலையாமை—Transitoriness of body.

மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்—நிலைமிசைத்
தஞ்சினு ரென்றெடுத்துத் தூற்றப்பட்டா ரல்லா
லெஞ்சினு ரிவ்வுலகத் தில்.

—நாலடியார்.

(க-ரை) மலையின்மேல் காணப்படுகின்ற பூரண சந்திரன் போல் பட்டத்து யானையினது தலையின்மேல் கொள்ளப்பட்ட வெண்கொற்றக் குடையையுடையராய்ச் சென்ற அரசர்களும் இப்பூமியிலே இறந்தார்களென்று பிறர் அறிய எடுத்துச் சொல்லிப் பலராலும் இகழப்பட்டார்களே யல்லாமல் அவ்வித்தலினின்று ஒழிந்து நிலையாக நின்றவர்கள் இந்த உலகத்தில் எவரும் இல்லை.

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசிமீ அவ

யாக்கை நிலையாமை—Transitoriness of body.

கார்த்தொடுத் தீர்க்கிலெ னன்றுய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
றேற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூற்றன் புறப்பட்டக் கால்.

—நாலடியார்.

(க-ரை) தோலினுலமைந்த பைபோன்ற உடம்பில் நின்று தொழில்களை மிகுதியாகச் செய்து உண்பித்துவந்த உயிராகிய கூற்றாடி வெளிப்பட்டுச் சென்றுவிட்டால் அந்த உயிர் நீங்கிய உடம்பைக் கயிற்றினுல் கட்டி இழுத்துக்கொண்டு போனு லென்ன? நன்றுகச் சுத்தஞ்செய்து அடக்கஞ் செய்தாலென்ன? கண்டவிடத்துப் போட்டுவிட்டாலென்ன? பலருங்கண்டு பழித் தாலென்ன?

மாசிமீ கூவ

அடக்க முடைமை—Self Restraint.

எல்லார்க்கு நன்றும் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

—குறள்.

(க-ரை) பெருமைப் பாடில்லாது அடங்குதல்யாவருக்கும் நன்றுகும். ஆயினும் அவருள்ளும் செல்வருக்கே வேறு ஒரு செல்வமாய்த் தோன்றுஞ் சிறப்பினையுடையதாம்.

மாசிமீ கஅவ

அடக்க முடைமை—Self Restraint.

தீயினுற் சுட்டபுண் ணுள்ளாறு மாறுதே
நாவினுற் சுட்ட வடு.

—குறள்.

(க-ரை) ஒருவனை யொருவன் நெருப்பால் சுட்ட புண் ணுனது உடம்பினிடத்தே யிருந்தாலும் மனத்தினிடத்தே

அப்பொழுதே ஆறும் அப்படியல்லாமல் நியசொற்களை யுடைய நாவினுலே சுட்டவடுவானது எப்பொழுதும் ஆறாது.

மாசிமீ கஉவ

அடக்க முடைமை—Self Restraint.

அடக்க முடையா ரறிவில ரென்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீ னோட வுறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு.

—மூதுரை.

(க-ரை) நீர்மடையினிடத்து ஓடும் சிறு மீன்கள். எல்லாம் ஓடவிட்டுப் பெருமீன் வரும் வரையும் கொக்கானது அடங்கி இருக்கும். அதுபோல அடங்கி இருக்கும் குணமுடையவரை அறிவில்லாதவரென்று கருதி வெல்ல நினைப்பவனுக்குத் தப் பாது கேடுவரும்.

மாசிமீ கஉவ

பொறை—Patience.

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்த லரிதோ தடங்கரை தான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு.

—நன்னெறி.

(க-ரை) பெருகிவருகின்ற வெள்ளத்தைத் தடுத்தல் அரிது. அதை விடுத்தல் அரிதல்ல. அதுபோல் கோபத்தைச் செய்தல் எளிது. அடக்கல் அரிது. அரியதைச் செய்தலே பெருமை.

மாசிமீ கஙவ

பொறை—Patience.

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—யிற்பிடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சானரோர் சினம்.

—மூதுரை.

(க-ரை) சீலோர் கடுங்கோபத்தினால் வேறுபட்டால் கல்லினுடைய பிளவுகளைப்போல திரும்பிக்கூடார். அப்படி வேறுபட்டபோது பொண்ணினுடையபிளவுகளைப்போல்ஒருவர் கூட்டக் கூடுவர். சிறப்புமிக்க அறிவுடையோருடைய கோபம் அம்பினுலே சலம்பிளக்க எய்த பிளவுகள் போல அப்போதே நீங்கும்.

மாசிமீ கசஉ

பொறை—Patience.

கேரல்லார் நீரல்ல சொல்லியக்கான் மற்றது
தாரித் திருத்தறகுதிமற்—ரோரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலஞ்
சமழ்மையாக் கொண்டு விடும்.

—நாலடியார்.

(க-ரை) தமக்குக் கீழ்ப்பட்டவர் நற்குணத்தை யுடை யவராகாத சொற்களைச் சொன்னுல் அவ்வாறு சொன்னதைப் பொறுத்திருத்தலே மேலோருக்குத் தக்கதாம். பொறாது தாமும் தகுதியில்சொற்களுறினுல்அது கீழ்மையின்பாற்பட்டுப் பழிப்புக்கு இடமாகும்.

மாசிமீ கருஉ

பொறை—Patience.

ஒறுத்தார்க் கொருநாளையின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

—குறள்.

(க-ரை) பிறர் குற்றம் கண்டு தண்டித்தவருக்கு ஒரு நாளை யின்பம். அதைப் பொறுத்தவர்களுக்கு உலகம் அழியுமளவும் புகழ் உண்டு.

மாசிமீ கசஉ

பொறை—Patience.

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.

—குறள்

(க-ரை) தண்ணீ வெட்டுவோரை விரோமற் சுமப்பதாகிய நிலத்தைப் போலத் தம்மை நிந்திப்பவரைப் பொறுத்தல் முதலான அறமாம்.

மாசிமீ களஉ

நட்பு—Friendship.

கல்லார் செயுங் கேண்மை காடோறு நன்றுகும்
அல்லார் செயுங் கேண்மை ஆகாதே—நல்லாய்கேள்
காய்முற்றிற்றின் றீங்கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி னெண்ணுகிப் போம்.

—நன்னெறி

(க-ரை) நல்லோர் செய்யுஞ் சிநேகமானது தினந்தோ றும் நன்றுகி வளரும். தீயார் செய்யுஞ் சிநேகமானது நல்ல தாகாது. காயானது முற்றினுல் தின்னுதற்குரிய மதுரமாகிய கனியாகும். இளந்தளிரானது நாள்சென்று முற்றினுல் யாதா கிப போகும்? அதாவது நல்லோர் நட்பு நாள் செல்லச் செல்ல இனிதாகும். தீயோர் நட்பு அங்ஙனமாகாது கெடும்.

மாசிமீ கஅஉ

நட்பு—Friendship.

கற்றறியார் செய்யுங் கடுநட்புத் தாங்கூடி
உற்றழியுந் தீமைநிகழ் வுள்ளதே - பொற்றொடி
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
அன்றே மணமுடைய தாப்.

[க-ரை] கற்றறியாதவர்கள் செய்கின்ற மிகுதியாகிய சிநேகமும் நெடுங்காலம்தாங்கள் கூடியிருந்தவிடத்தும் நீங்கு

கொழும்பு தமிழ்ச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைத்தலே உள்ளதாகும். படர்ந்த செழுமையாகிய கொடியி னது பிருதுவாகிய பூவானது மலர்ந்த அன்றைக்கு மாத்திரமே வாசனையுடையதாகும். அதாவதுமூடருடையநட்புத் தொடக் கத்திலே நன்றாயினும் பின்பு தீங்கு விளைவிக்கும்.

———

மாசிமீ ககூ

நட்பாராய்தல்—Discriminating Friendship.

யாஅ யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்-யானை
யறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேல்
பெய்யதா வால்குழைக்கு நாய்.

-நாலடியார்.

[க-ரை] யானையைப் போன்றவர்களது சிநேகத்தைவிட்டு நாயைப்போன்றவர்களது சிநேகத்தைச் சேர்த்துக் கொள்ளு தல் தகுதி. யானை தனக்கு உணவு முதலியன கொடுத்துக் காத்திடும் பாகனையேகொல்லும். நாயானதுதன்னையுடையவன் தன்மேற் சினந்து எறிந்த ஆயுதம் தன் உடம்பில் தைத்துள்ள தாயிருக்கையிலும் வாலைக்குழைய வைத்து ஆட்டிக்கொண்டு தன் எளிமையையும் அன்புடைமையையும் காட்டி நிற்கும்.

———

மாசிமீ உ0ஙூ

நட்பு—Friendship.

கிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

-குறள்.

[ச-ரை] அறிவுடையவரது நட்பு பிறைபோல் காள்தோ றும் நிறையும தன்மையினதாம். அறிவில்லாதவரது நட்பு நிறைந்த சந்திரன்போல் பின்னைநாடோறும் குறையும் தன்மை யனதாம்.

மாசிமீ உசஙூ

நட்பு—Friendship.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

-குறள்.

[க-ரை) கண்டவிடத்து முகமாத்திரமே மலரும் சிநேக மானது சிநேகமன்று. அன்பால் உள்ளம் மலர்ச் சிநேகிப்பதே சிநேகமாம்.

———

மாசிமீ உஉஙூ

நட்பு—Friendship.

குடிப்பிறந்து தன்கட் பழிநாணுவானைக்
கொடுத்துங் கொளல் வேண்டு நட்பு.

-குறள்.

[க-ரை] உயர்ந்த குடியிற்பிறந்து தன்னிடத்து உலகோர் சொல்லும் பழிக்கு அஞ்சுவானைப் பொருள் கொடுத்தாயினும் சிநேகம் கொள்ள வேண்டும்.

———

மாசிமீ உநஙூ

நட்பு—Friendship.

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்ரு
இனனு மறிந்தியாக்க நட்பு. -குறள்.

[க-ரை] குணத்தையுங் குடிப் பிறப்பையுங் குற்றத்தை யுங் சுற்றத்தையு மறிந்து நட்புச் செய்யக் கடவன்.

———

மாசிமீ உசஙூ

நட்பு—Friendship.

அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோ
லுற்றுழித் தீர்வா ருறவல்லர்-அக்குளத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே
யொட்டியுறுவா ருறவு.

-மூதுரை.

[க-ரை] நீர் வற்றிய குளத்தினின்றும் நீங்கிப் போகின்ற நீர்வாழ் பறவைகள் போல ஒருவனுக்கு வறுமை வந்தபொழுது நீங்குவோர் உறவாகார். அந்தக் குளத்திலே கொட்டியும் அல்லியும் நெய்தலும் போலவே தாமும் வருத்தத்தை அனுபவித்துக்கொண்டு அவனை விட்டு நீங்காதவரே உறவாவார்.

மாசிமீ உடுவ

நட்பு – Friendship.

கோட்டுப் பூப்போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி–தோட்ட
கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
கயப்பாரு நட்பாரு மில்.

—நாலடியார்.

(க-ரை) மரக்கிளைகளில் உண்டாகின்ற மலர்போல முன்னே முகமலர்ச்சி பெற்றுப்பின்பு அம்மலர்ச்சி குலியாமல் ஒருவரோடு ஒருவர் விருப்பம் கொண்டதுவே விருப்பமாயிருப்பது சிறந்த தருமத்தைக் காத்தலாகும். தோண்டப்பட்ட நீர் நிலையில் உண்டாகிற மலர்போல முதலில் முகமலர்ச்சி காட்டிப் பின்பு அம்மலர்ச்சி ஒழிந்து முகம் சுருங்குபவர்களை விரும்புபவர்களும் சிநேகிப்பவர்களும் இல்லை.

மாசிமீ உகூ

நட்பிற் பிழை பொறுத்தல்—
Forbearance in Friendship.

நலலாரெனத்தா னினிதுரும்பிக் கொண்டாரை
யல்லா ரெனினு மடக்கிக் கொளல்வேண்டு
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு.

-நாலடியார்.

(க-ரை) நற்குண நற்செய்கை யுடையாரென்று ஆராய்ந்து தெரிந்து தெளிந்து தம்மால் மிக விரும்பிச் சிநேகஞ் செய்து கொள்ளப்பட்டவரை நற்குண நற்செய்கை யுடையவ ரல்லாத வரென்று கண்டாலும் அவர் குற்றங்களைப் பிறர் அறியக் கூறி வெளிப்படுத்தாமல் தம் மனத்திலேயே அடக்கி வைத்துக் கொள்ளுதலே தகுதி. எனெனில் நெல்லுக்கும் பயனற்ற அதன் உமியாகிய குற்றம் உள்ளது. யாவராலும் பானத்தின் பொருட்டு மிக விரும்பி நாடி யடையப்படுகின்ற நீருக்கும் நுரையாகிய குற்றம் உள்ளது. சிறப்புடைய மலருக்கும் அதன் மேல் தழுவியுள்ள புறவிதழாகிய குற்றம் உள்ளது.

மாசிமீ உஎ

கூடா நட்பு—False Friendship.

நுண்ணுணர்வி னொருரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்கு-ணுண்ணூ
ணுணர்வில ராகிய வூதிய மில்லார்ப்
புணர்ந்த நிரயத்து ளொன்று. நாலடியார்.

[க-ரை] நட்பமான அறிவை யுடையவர்களுடனே சேர்ந்து அவர்கள் சேர்க்கையா லுண்டாகும் இன்பங்களை அனுபவிக்கும் தன்மையுடையவரா யிருத்தல் தேவலோக வின்பத்தையே ஒத்திருக்கின்ற விரும்பப்படும் மேன்மையுடையது. நுட்பமான சாஸ்திரங்களை அறியும் அறிவில்லாதவரான பயன் இல்லாதவர்களைச் சேர்தல் நரகத் துன்பங்களுள் ஒன்றாகும்.

மாசிமீ உஅ

பகை—Hatred.

இகலே மதித்தின்ஞமை பிழையியற்றினார்க்கும் புரியாயேற்
பகையுமுறவாம் பெருஞ்செல்வம்பலிக்குங்கெடாத புகழுண்டா
மிகலின் மிகுந்தின்ஞங்கியற்றினியதமரு மேதிலராய்ப்
பகைமைவளரும்வலிதோலியும்பாழ்க்கும்பாழா வாழ்க்கையுமே

-விநாயகபுராணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[க-ரை] பகையை நினைத்து உனக்குக் குற்றம் செய்தவர்களுக்கும் நீ இன்னு செய்யாமல் இருந்தால், பகையும் நட்பாம் பெரிய செல்வம் உண்டாம். அழியாத புகழுமுண்டாம். அதிக பகையினால், இன்னு செய்வாயானால் இனிய சுற்றத்தவரும் அன்னியராவர், பகைவளரும், வலிகெடும், வாழ்வும்பாழாகும்.

பங்குனிமீ கூ

பகை—Hatred.

பகையென்னும் பண்பி லதனை யொருவன்
நகையெயும் வேண்டற்பாற் றன்று.

—குறள்.

[க-ரை] ஒருவன் பகையென்று சொல்லப்படும் தீமையுண்டாக்குவதான விளையாட்டிடத்தே யாயினும் விரும்பாதிருக்கக் கடவன்.

பங்குனிமீ உ

பகை—Hatred.

வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சக
கேள்போல் பகைவர் தொடர்பு.

—குறள்.

[க-ரை] வெட்டுவோவென்னும் பகைவர்க் சஞ்சாதிருக்கக் கடவர். உறவினர் போலிருக்கும் பகைவர்க்கு அஞ்சக்கடவர்.

பங்குனிமீ கூ

அறம்—Charity.

அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும் பயனுமாற்றவே கொள்க—தருமம்பூர்த்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி பற்றதன்
கோதுபோற் போகுமுடம்பு.

—நாலடியார்.

[க-ரை] பெறுதற்கரிதாகியமானிடசரீரத்தை அடைந்த பயனால் பெரிய பயனை தருமத்தையும் மிதுதியாகவேசெய்து

வைத்துக்கொள்ளக்கடவர். மனிதசரீரம் கரும்பானதுதன்னைப் பக்குவமாக ஆலையில் வைத்து ஆட்டினவர்கட்குத் தன்னிடத்துப் பொருந்திய சாற்றைக் கொடுப்பதுபோல மறுமைக்கு வேண்டிய அறமாகிய பயனை தனை நல்வழியில் உபயோகப்படுத்தியவர்கட்குக் கொடுத்துப்பின்பு அக்கரும்பினது சக்கைபோல நீங்கிப்போம்.

பங்குனிமீ சஉ

அறம்—Charity.

இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளமிய வான்பெருஞ் செல்வமு நில்லா
புத்தேளுலகம் புதல்வருந் தாராரா
மிக்கவறமே விழுத்துணை யாவது.

—மணிமேகலை.

[க-ரை] இளமை நிலையாது இவ்வுடம்பு நிலையாது. வான்போல உயர்ந்திருக்கும் பெரும் செல்வமும் நில்லாது. பெற்ற புதல்வர்களும் சுவர்க்கலோகத்திற்குப் போவதற்கு நமக்கு உதவமாட்டார்கள். பெரிய தருமமே நமக்குப் பெரிய துணையானது.

பங்குனிமீ நுஉ

அறம்—Charity.

கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந் தறஞ்செய் துய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்கண் ணென்செய்வார் பேசு.

—நன்னெறி.

(க-ரை) உயிரைக்கொண்டு செல்கின்ற கொடுமையாகிய இயமனுனவன் கொல்லும்படி அணுகுதற்கு முன்னே மனங்கரைந்து தருமங்களைச் செய்து பிழைக்கக் கடவாய். வெள்ளம் வருவதற்கு முன்னே கரையைக் கட்டி வையாதவர் அது பெருகி வருபொழுது யாது செய்வார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனிமீ சுஉ

அறம்—Charity.

சிறப்பீனுஞ் செல்வமும் மீனுமறத்தினூஉங்
காக்க மெவனே வுயிர்க்கு.

—குறள்.

(க-ரை) மோட்சத்தையும்கொடுக்கும். சுவர்க்க முதலாகிய செல்வத்தையும் கொடுக்கும். ஆதலால் மனிதருயிர்க்குத் தரு மத்தின் மேற்பட்ட பெருக்கத்தைத் தருவது யாது?

பங்குனிமீ எஉ

அறம்—Charity.

செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

—குறள்.

(க-ரை) ஒருவனுக்குச் செய்யத்தக்கது நல்வினை. செய்யத் தகாதது தீவினை.

பங்குனிமீ அஉ

பொய்மை—Falsehood.

மறைமுழு துணர்ந்தாரேனு மகம்பல புரிந்தாரேனுங்
குறைவறு தானமெல்லாங் கொடுத்தறங் கூர்ந்தாரேனு
நிறைபெருந் தீர்த்தமெல்லா நிரம்புறத் தூளைந்தாரேனுங்
கறையுறு மொருபொய் கூறிற் கடுநரகழுந்துவாரே.

—காசி இரகசியம்.

(க-ரை) வேதங்களை முற்றும் அறிந்தவராயினும் யாகங் கள்பல செய்தவராயினும் குற்றமற்ற தானங்கள் எல்லாம் செய்தவராயினும் விசேஷ தீர்த்தங்கள் எல்லாவற்றிலும் பூரண ஸ்னானம் செய்தாராயினும் குற்றம் பொருந்திய ஒரு பொய் யைச் சொல்லுவாராகில் அவர்கள் கொடிய நரகத்துக்கு ஆளாவர்.

பங்குனிமீ கூஉ

பொய்மை—Falsehood.

பொய்மையோ பாவமெல்லாம் விளைதரு பூமியாகும்
பொய்மையே பிறவியெல்லாம் புகப்புரிவித்துமாகும்
பொய்மையே வறுமையெல்லாம் போதரப்புரிவதாகும்
பொய்மையே நரகமெல்லாம் புகுதரப் புகுந்தா நிற்கும்

—காசி இரகசியம்.

(க-ரை) பொய்யானது பாவங்களுக்கெல்லாம் விளைநில மாகும். பிறவிக்குக காரணமாகும். வறுமை யனுபவிக்கச் செய்யும். நரகங்களெல்லாவற்றிலும் தள்ளும்.

பங்குனிமீ கஉஉ

பொய்மை—Falsehood.

தான்கெடினுந் தக்கார் கேடெண்ணற்க தன்னுடம்பி
னூன்கெடினு முண்ணீர் கைத்துண்ணற்க— வான் கவிந்த
வையக மெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்.

—நாலடியார்.

(க-ரை) தான் அழிய நேர்ந்தாலும், மேலோரது கெடுதலை நினையாதிருக்கக் கடவன். தன் உடம்பிலுள்ள தனு பசியால் மெலிந்து அழிவதாயினும் உண்ணத் தகாதவரது கையினால் வரும் உணவை உண்ணுதிருக்க. ஆகாயத்தாற் கவியப்பட்ட பூமி முழுவதையும் பெறுவதாயிருந்தாலும் தன் வறுமையைப் பொறுக்க மாட்டாமை பற்றி இடையிலே பொய்யோடு கலந்த சொல்லைச் சொல்லாதிருக்க.

பங்குனிமீ கஉஎ

பொய்மை—Falsehood.

தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்.

—குறள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) தனது நெஞ்சினுலே பொய் என்று தான் அறிந்ததைப் பிறர் அறிந்திலரென்று எண்ணிச் சொல்லாதிருக்கக் கடவர்-அப்படிச் சொல்வானுயில் அவனது மனம் அப்பாவத்துக்குச் சாட்சியாய் நின்று அதண்பயனுயதுன்பத்தை அடைவிக்கும்.

பங்குனிமீ கஉஉ

வாய்மை—Truthfulness.

வாய்மை தப்பினுர்க ளிந்த மானிலத்தி லீனராய்த்
தீமையுற்று மேலுளோர் பழிக்கவே திரிந்துபின்
றாய்மையற்ற கும்பியுட்டுனைந் தழுங்குவாரென
வாய்மனுப்பகர்ந்த வேத சாகை முற்று மறையுமே.

-பிரமோத்தர காண்டம்.

(க-ரை) இப்பூவுலகின்கண்ணே, பொய்மொழி புகலாதார், இழிந்தவர்களாய் தீமையுடையவர்களாய், பெரியோர்கள் நிந்திக்கும்படி திரிந்து, மறு பிறப்பில் பரிசுத்தமற்றமாக்கும்பியுள் புழுவாகப் பிறந்து அழுந்துவார்கள் என்று மனுதரும சாஸ்திர மறையும்.

பங்குனிமீ கநஉ

வாய்மை—Truthfulness.

மெய்யே சிறந்த பெருநலமா மெய்யே யெவையு நிலைபெறுத்து
மெய்யாலழல்கால் கதிர் பிறவுந் தத்தந்தொழிலின் விலகாவா
மெய்யே யெவைக்கு மிருப்பிடமா மெய்யே மெய்யே சிவமாகு
மெய்யே பிரமபதமு மெனப்புகன்றுன் விஞ்சைதீர் காசிபனே.

—காஞ்சிப்புராணம்.

(க-ரை) மெய்சொல்லுவதே சிறந்த பெரிய நன்மையுடையது; மெய்யே எல்லாவற்றையும்அழியாமல் இருக்கச்செய்யும்; வாய்மையினல், சூரிய சந்திரர் முதலியவைகள் தத்தம் தொழில்களில் நின்றும் விலகா; மெய்யே எல்லாவற்றிற்கும் இருப்பிடம்; மெய்யே சிவம், மெய்யே பிரமனது திருவடியைக்

கொடுக்கும் என்றும் குற்றமற்ற காசிப முனிவர் திருவாய் மலர்ந்தருளினர்.

பங்குனிமீ கசஉ

வாய்மை—Truthfulness.

அண்ணிய கிளையுமில்லு மருப்பெருமகவு மன்புந்
திண்ணிய சிருமிக்க செல்வமுந் திறலுந்தேசு
பெண்ணிய பொருள்கள் யாவுமியற்றிய தவமுமேனைப்
புண்ணிய மீனத்துஞ் சேரப் பொய்மையாற் பொன்றுமன்றே.

—வில்லிபாரதம்.

(க-ரை) நெருங்கிய சுற்றத்தினரும், வீடும், அரிய பெரிய புதல்வர்களும், அன்பும், பெரிய கீர்த்தியும் செல்வமும், தைரியமும் அழகும், ஈட்டிய பொருளும் இயற்றிய தவமும் மற்றும் செய்த புண்ணியங்கள் அனைத்தும்பொய்பேசுவதனுல் அழியும்.

பங்குனிமீ கநஉ

வாய்மை—Truthfulness.

வாய்மை யெைப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல். —குறள்.

(க-ரை] மெய்மை யென்று சிறப்பித்துச் சொல்வது யாதெனில் பிறிதோருயிருக்குச் சிறிதாயினும் தீமையைத்தராத சொற்களைச் சொல்லுதல். இதுவே சத்தியம் என்பதாம்.

பங்குனிமீ கசுஉ

வாய்மை—Truthfulness.

மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை.

—குறள்.

[க-ரை] ஒருவன் தன் மனத்தோடு பொருந்த உண்மையைச் சொல்லுவானுயின் அவன் தவத்துடனே தானத்தை ஒருமிக்கச் செய்வாரினும் சிறப்புடையவனுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை சொல்வோன் தவம் தானஞ் செய்பவரினும் மேலானவன்.

பங்குனிமீ களஉ

அருள்—Grace.

எவ்வுயிரு மெண்ணுயிர் போலெண்ணி யிரக்கவுகின்
றெய்வவருட் கருணை செய்யாய் பராபரமே.

—தாயுமானவர்.

(கரை) உயிர் பெற்று வாழும் எதையும் என்னுடைய உயிரைப்போல் நினைத்து அதற்கு இரங்கி நடக்க ஈசுவரனே! எனக்கு உன் திரு அருளைக் கொடுப்பாயாக.

பங்குனிமீ சஅஉ

அருள்—Grace.

தம்முயிர்போ லெவ்வுயிருந் தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவலென்று செய்வேன் பராபரமே

—தாயுமானவர்

(கரை) பராபரமே! எவ்வித உயிர்களும் தம்முடைய உயிர் என்று எண்ணி சூளர்மையாகிய அருளுடைய பெரியோருக்கு நான்எந்தக்காலத்தில்பணிவிடை செய்யப்போகின்றேன்.

பங்குனிமீ சகூஉ

அருள்—Grace.

தங்குறை தீர்வள்ளார் தளர்ந்து பிறர்க்கு றாஉம்
வெங்குறைதீர்க்கிற்பார் விழுமியோர்—இங்கள்
கரை இருளை நீக்கக் கருதாதுலகில்
னிரையிருளை நீக்குமே னின்று.

(கரை) மேலோர் தமது குறை நீங்குதலே நினையாராகி பிறருக்கு வந்த வெவ்விய குறையை மனந்தளர்ந்து நீக்குவார். சந்திரனவன் தனது களங்கமாகிய இருளை நீக்குதற்கு நினையாமல் ஆகாயத்திலே நின்று உலகத்து நிறைந்த இருளை நீக்குவான்.

பங்குனிமீ உ0உ

அருள்—Grace.

பெரியவர் தங்நோய்போற் பிறர் நோய் கண்டுள்ள
மெரியினுழுதாவரென்க—தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமேகண். —நன்னெறி.

(கரை) அறிவொழுக்கங்களிற் பெரியவர் பிறருக்கு வந்த நோயைக்கண்டு தமக்கு வந்த நோய்போல நினைத்து மனம் அக்கினியிலே பட்ட நெய்போல உருகுவார். கண்களானவை நெருங்கிய வியாதியினால் வருந்துகின்ற மற்றை அவயவங்களைக் கண்டு அழும்.

பங்குனிமீ உகஉ

அருள்—Grace.

பேரறிஞர் தாக்கும் பிறர் துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்-நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது. —நன்னெறி.

(கரை) அறிவுடையவர் வருந்துகின்ற பிறருடைய துன்பத்தை வீரத்தோடு தாம் ஏற்றுக்கொண்டு அவரைப் பாதுகாத்தற்கு விரைந்து போவார் உடம்பிலே போய்த்தாக்குகின்ற பெரிய கோலினுடைய அடியை கையானது சீக்கிரம் போய் தன் மேலேபடும்படி ஏற்றுக் கொள்ளும்.

—பங்குனிமீ உஉஉ

அருள்—Grace.

கலியெலா மூணர்ந்தானேனுங்கரிசறத் தெளிந்தானேனு
மலியென வுயர்ந்தானேனு மனமயலகன்றானேனு
முலகெலாம் புகழப்பல்லோர்க் குதவிய கையனேனு
மிலகிய விரக்கமின்றே லெழுநரகடைவ னன்றே.

—பதிபசு பாச விளக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) சாஸ்திரங்களெல்லாவற்றையும் கற்றறிந்தவனனு லும், குற்றமற்ற அறிவுடையவனனுலும், மலைபோல கீர்த்தி படைத்தவனனுலும், மனத்தின்கண் உன்மத்தம் அற்றவனனு லும், உலகத்திலுள்ளவர்கள்எல்லாரும்புகழும்படியாஉபலருக்கு கேட்டதைக் கொடுக்கிற தன்மையுடையவனனுலும், பிரகாசிக் கின்ற அருளுடைமை இல்லாவிடின்எழுநரகங்களுக்குமுடையவ னுவன்.

பங்குனிமீ உங்உ

அருள்—Grace.

அருட் செல்வஞ் செல்வத்துட் செல்வம்-பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள. —குறள்.

(க-ரை) பொருளால் வரும் செல்வங்கள் இழிந்தவரிடத் தும் இருக்கின்றன. ஆதலால் செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்து எடுக்கப்பட்ட செல்வமாவது அருளால் வரும் செல் வமாம்.

பங்குனிமீ உசஉ

அருள்—Grace.

அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொரு ளில்லார்க் இவ்வுல கில்லா தியாங்கு. —குறள்.

(க-ரை) பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்தின் இன்பம் இல்லாத தன்மையைப் போல உயிர்களின் மேல் அருளில்லாத வர்க்கு மேலுலகத்தின் இன்பம் இல்லை.

பங்குனிமீ உஞஉ

அருள்—Grace.

பொருளற்றூர் பூப்ப தொருகா லருளற்றூர் அற்றூர்மற் றூதல ரரிது. —குறள்.

(க-ரை) வறுமை அடைந்தவர் பின்னொரு காலத்தில் செல்வத்தினுல் பொலிவர். அருளில்லாதவர் பாவம் நீங்காமை யால் அழிந்தவரே. பின்னொரு காலத்திலும் ஆகுதலரிது.

பங்குனிமீ உகஉ

அன்பு—Love.

இடனும் பொருளு மேவலரு மிருக்கும் பயனெண்ணே வந்த வுடலின் பயனுகிய வண்பையுறுத லிடத்து தொதுமலரும் படர்செய் பகையு முறவாக்கும் பற்று மனிக்கு மனமைமந்தர் தொடர்பின் வளர்க்கு மன்பதனுற் சோர்ந்து மண்பின்வழுவற்க. —விநாயகபுராணம்.

(க-ரை) இடமும் பொருளும் எவ்வளவும் இருந்தும் அன்பிலாதாரிடத்து பயனற்றதாகும். அன்பு இருக்கும் இடத்தில் அயலோரும் பகைவரும் உறவாவர். மனையாளுடை யவும் மக்களுடையவும் தொடர்பை வளர்க்கும் ஆனபடியால் அன்பின் வழியில் இருந்து விலகாதிருப்பாயாக.

பங்குனிமீ உஎஉ

அன்பு—Love.

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார் என்பு மூரியர் பிறர்க்கு. —குறள்.

(க-ரை) அன்பிலாதவர் பிறர்க்குப் பயன்படாமையால் எல்லாப் பொருள்களாலும்தமக்கே யுரியவராவர். அன்புடைய வர் எல்லாப் பொருள்களாலும் மாத்திரம் அல்லாமல் தம் உடம்பாலும் பிறருக்கு உரியவராவர்.

பங்குனிமீ உஅஉ

அன்பு—Love.

என்பி லதனை வெயில்போலக் காயுமே அன்பி லதனை யறம். —குறள்.

(க-ரை) எலும்பில்லாத உடம்பையுடைய புழுக்களை சூரியன் அடுதல்போல அன்பில்லாத உயிரை அறக்கடவுள் சுடுவான்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனிமீ உகூஉ

அன்பு—Love.

என்புதோலுடையார்க்கு மீலார்க்குந்தம்
வன்பகைப் புலன் மாசற மாய்ப்பதென்
முன்பு பின் பின்றி மூவுலகத்தினு
மன்பினல்லதோராக்க முண்டாகுமோ.

—இராமாயணம்.

(க-ரை) எவ்வகை சிவராசிகளுக்கும் அன்பே பகையை அறச் செய்யும் யாதொரு வித்தியாசமின்றி அன்பில்லாதவர் களுக்கு மூவுலகங்களிலும் யாதொரு செல்வமுண்டோ இல்லை.

பங்குனிமீ நஉஉ

இல்லறம்—Matrimony.

இல்லாளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
யில்லாளு மில்லாளே யாமாயி—னில்லாள்
வலிகிடந்த மாற்ற மூரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறுய் விடும். —மூதுரை.

(க-ரை) நற்குண நற்செய்கைகளையுடைய மனையாள் வீட்டில் இருப்பாளாயின் அவ்வீட்டிலே இல்லாத பொருள் ஒன்றும் இல்லை. மனையாள் இல்லாமற் போனாலாயினும் மனை யாள் கடுமை பொருந்திய சொற்களைச் சொல்வாளாயினும் அவ்வீடு புலி தங்கிய புதற்போல் ஆய்விடும்.

பங்குனிமீ நகஉ

இல்லறம்—Matrimony.

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக்கழகுபாழ்—மாறில்
உடற்பிறப்பில்லா வுடம்பு பாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை. —நல்வழி.

(க-ரை) விபூதியில்லாத நெற்றி பாழாகும். நெய்யில்லாத போசனம் பாழாகும். நதியில்லாத ஊருக்கு அழகு பாழாகும மாறுபடாத சகோதரர் இல்லாத உடம்பு பாழாகும். இல்லறத் திற்குத்தக்க மனைவியில்லாத வீடு பாழேயாகும்.

சித்திரைமீ கூஉ

இல்லறம்—Matrimony.

காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதிலொருகருமஞ் செய்யவே—யோதுகலை
வெண்ணிரண்டுமொன்று மதியென் முகத்தாய்நோக்கருன்
கண்ணிரண்டு மொன்றையே காண்.

—நன்னெறி.

(க-ரை) புகழப்பட்ட பதினாறு கலைகளையும் சேர்ந்த சந்தி ரன் என்று சொல்லப்படும்முகத்தையுடையவளே! அன்புடைய மனைவியும் கணவனும் தம்முள்ளே மாறுபாடில்லாமல் ஒத்துக் குற்றமில்லாதவொருகருமத்தையேசெய்வர். நம்முடைய இரண்டு கண்களும் தம்முள்ளே மாறுபடாமல் ஒத்து ஒரு பொருளையே பார்த்தலை நீபார்.

சித்திரைமீ உஉ

இல்லறம்—Matrimony.

மழை நிலைக்கு மாடமாம் மாண்பமைந்த காப்பா
யிழை விளக்கு நின்றிமைப்பி னென்னுகும்—விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதா னில்லகங்
காண்டற் கரியதோர் காடு.

—நாலடியார்.

(க-ரை) மேகம் தவழும்படியான உப்பரிகையுடையதான வும், சிறப்புப் பொருந்திய காலையுடையதும், ஆபரணங்கள் விளக்குமாபோல நிலைபெற்று விளங்கினாலும் இவ்வண்ண வீடு இருந்தும விரும்பத்தக்க நற்குணங்களினால் மாட்சிமைப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணவினையைப் பெற்றில்லாதவனது வீடானது என்னபயனுடைய தாய்? அது கண்களாற் காண்பதற்கும் கூடாத மிகக் கொடிய காடு போலும்.

சித்திரைமீ நஉ

இல்லறம்—Matrimony.

இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று சாலும்
ஒழுக்க முயர்குலத்தி னன்று—வழுக்குடைய
வீரத்தி னன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி. —நல்வழி.

(க—ரை) இலக்கண வழுக்களையுடைய செய்யுளினும் இசை நல்லது. உயர்வாகிய குலத்தினும் மாட்சிமைப்பட்ட ஒழுக்கம் நல்லது. தவறுதலையுடைய வீரத்தினும் நீராவிராதி நல்லது. பழிச்சொல்லுக்கு அஞ்சாத மனைவியோடு கூடிவாழ்தலினும் தனியே இருத்தல் நல்லது.

சித்திரைமீ சஉ

இல்லறம்—Matrimony.

இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை. —குறள்.

(க-ரை) இல்லறத்தோடு கூடி வாழ்பவன்என்று சொல்லப் படுவோன் பிரமசாரி, வானப்பிரஸ்தன், சன்னியாசி இம்மூவர்க் கும் துணையாவான்.

சித்திரைமீ நுஉ

இல்லறம்—Matrimony

துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் றுணை. —குறள்.

(க-ரை) துறந்தவருக்கும் வறுமைப்பட்டவருக்கும் ஒரு வருமில்லாமல் வந்து இறந்தவருக்கும் இல்வாழ்வானென்று சொல்லப்படுவோனே துணையானவன்.

சித்திரைமீ கூஉ

இல்லறம்—Matrimony.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க நுன்னென்றும்
கைம்புலத்தா றோம்ப றலை. —குறள்

(க-ரை) பிதிரர்க்கும் தெய்வத்திற்கும்விருந்திற்கும் இனத் திற்கும் தனக்கும் தருமஞ் செய்தல் தலைமையான தருமமாம்.

சித்திரைமீ ஏஉ

இல்லறம்—Matrimony.

இத்தகைய நல்வர்களின் மூவருக்கு மிறந்தார்க்கு
மத்தமுத லற்றார்க்கு மாதார மாதலினு
லுத்தமமா யில்லறமே வாழ்வினுக்கு முயர்கதிக்கும்
வித்தமாந் துறவறதநின் வேருமா மெனனும் வேதம்.

—திருக்குற்றாலப்புராணம்.

(க-ரை) பிரமசாரி, வானப்பிரஸ்தன், சன்னியாசி இம் மூவருக்கும், பிதிரார்களுக்கும், பொருளின்றி வறுமையடைந்த வர்களுக்கும் துணையாயிருப்பதினாலும் வாழ்க்கைக்கும் உயர் வாகிய மோட்சத்திற்கும் வித்தமாயிருத்தலாலும் துறவறதினை யும் அடைவிக்கும் வேருமாயிருப்பதினாலும் இல்லறமே எல்லா வற்றிலும் உத்தமமானது.

சித்திரைமீ அஉ

இல்லறம்—Matrimony.

பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில். குறள்.

(க-ரை) பாவத்திற்குப் பயந்து பொருளைத்தேடி பங்கிட் டுண்ணு மொருவன் சந்ததியானது குறைதலில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரைமீ கூடை

இல்லறம்—Matrimony

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒப்ப் பெறுவ தெவன். —குறள்.

(க-ரை) ஒருவன் இல்வாழ்க்கையைத்தருமத்தின் வழியில் செலுத்துவானுயின் துறவறத்துக்குப் போய்ப் பெறும் பயன் என்ன?

சித்திரைமீ கo஬

இல்லறம்—Matrimony.

இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவனென்பான்
முயல்வா ருளெல்லாந் தலை. -குறள்.

(க-ரை) இல்வாழ்க்கையிலேநின்று அதற்குரிய இயல்போடு கூடி வாழ்பவன் என்று சொல்லப்படுவோன் தவஞ் செய்வார்க் கெல்லாந் தலையாவான்.

சித்திரைமீ ககஉ

இன்சொல்—Polite speech.

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனியவர்
பேசுற்ற வின்சொற் பிறிதென்க-ஈசற்கு
நல்லோ னெறிகிலேயோ நண்ணுதலாலொண் கரும்பு
வில்லோன் மலரோ விருப்பு? -நன்னெறி.

(க-ரை) நல்ல நெற்றியை உடையவளே! குற்றந்தீர்ந்த மனத்தை யுடையவரது கடுஞ்சொல்லும்இனியதாகும். குற்றம் பொருந்திய மனத்தை யுடையவராகிய பிறர் சொல்லிய இன் சொல்லும் கொடியதாகுமென்றறிவாயாக. சிவபெருமானுக்கு விருப்பத்தைக் கொடுத்தது நற்குணமுடையவராகிய சாக்கிய நாயனர் அன்போடு எறிந்த கல்லோ? ஒள்ளிய கரும்பு வில்லை யுடைய மன்மதன் அன்பின்றி எறிந்த பூவோ?

சித்திரைமீ கஉ஬

இன்சொல்—Polite speech.

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங்கோல் பஞ்சிற் பாயாது-நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். -நல்வழி

(க-ரை) வலிய யானையின் மேலே பட்டுருவும் அம்பானது மெல்லிய பஞ்சின் மேலே பாயாது. அதுபோல வலிய சொற் கள் மெல்லிய சொற்களை வெல்ல மாட்டா. நெடுமையாகிய இருப்புப் பாரைக்குப் பிளவாதகருங்கற் பாறையானது பச்சை மரத்தின் வேருக்குப் பிளந்துபோம்.

சித்திரைமீ கஉ஬

இன்சொல்—Polite speech.

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழ்தே—பொன்செய்
அதிர் வலையாய் பொங்காதழற் கதிராற் றண்ணன்
கதிர்வரவாற் பொங்குங் கடல்.—நன்னெறி

(க-ரை) பொன்னாலே செய்யப்பட்ட ஒலிக்கின்ற வலையல் களையுடையவளே! பெரிய கடல்சூழ்ந்த பரந்த உலகத்தி லுள்ளவர் இன்சொல்லினுல்லாமற் கடுஞ்சொல்லினால் என் னாலும் மகிழ்ச்சியடையார். கடலானது குளிர்ச்சி பொருந்திய கிரணங்களையுடைய சந்திரன் வருகையினாலே பொங்கும். அது வன்றி சூடு பொருந்தியகிரணங்களையுடைய சூரியன் வருகையி னாலே பொங்காது.

சித்திரைமீ கசஉ

இன்சொல்—Polite speech.

துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉ மின்சொ லவர்க்கு. —குறள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-கை) எல்லாவிடத்தும் இன்பத்தைமிகுவிக்கும் இனிய சொற்களை உடையவர்க்குத் துன்பத்தை மிகுவிக்கும் வறுமை யானது இல்லை.

சித்திரைமீ கருவ

இன்சொல்—Polite speech.

அல்லவை தேய அறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்.
—குறள்.

(க-கை) பிறர்க்கு நன்மையைத் தருஞ் சொற்களை மனத் தால் ஆராய்ந்த இனிமையுள்ளனவாக ஒருவன் சொல்லுவா னாயின் அவனுக்குப் பாவங்கள் தேய தருமமானது வளரும்.

சித்திரைமீ கசுவ

அவா—Avarice.

உடைகோளுண் மூன்றிறங்கப்புறந்திண்ணெயுண்டுணவிங்
கடைகா யிலையுடைருந்தித் தண்ணீருண்டருந்துணைக்கே
விடையேறு மீசர் திருநாமமுண்டிந்த மேதினியில்
வடசோயிர்தென்னனதென்கோடுசாய்ந்தென்னவான்பிறைக்கே
—பட்டினத்தடிகள்.

(க-ரை) இவ்வுப் பூமியில் உடுக்க கௌபினமுண்டு. நித்தி ரைசெய்யத் திண்ணைப்புறங்கள் உண்டு. உண்ண இளந்தளிரும் காயும் கீரையும் உண்டு. குடிக்க சாதாரண நீர்உண்டு. பிரியாது நின்று துணையாவதற்கு சந்தியென்னும்ரிஷபத்தின் மேல் ஏறும் பரமசிவனுடைய திருநாமங்களுண்டு. அந்தவானத்தில் தோன்று கின்ற பிறைச் சந்திரனுக்கு வடமூலை உயர்ந்திருந்தால் ஆவது என்ன தென்மூலை தாழ்ந்திருந்தால் ஆவது என்ன?

—சித்திரைமீ கஎவ

அவா—Avarice.

ஆசைபெரும்பெருங்காற்றடிலவம்பஞ்செனவுமனதலையுங்கால
மோசம்வருமிதனுலேகற்றதுங்கேட்டதுந் தூர்ந்தமுத்திக்கான

நேசமூல்வாசமும்பொய்ப்புலனுயிற்கொடுமைபற்றிநிற்பரன்தோ
தேசுபழுத்தருள் பழுத்த பராபரமே நிராசையின்றேல் தெய்வ
(மூண்டோ?
—தாயுமானவர்.

(க-ரை) மனமானது ஆசையிற்சிக்குண்டு பெருங்காற்றி னுலே இலவம்பஞ்சு சுவ்விதமாக அலைகின்றதோ அத்தன்மை யாய் அலையும். ஆசையினுல் தெரிவரும்-கற்றதும் கேட்டது மாகிய அறிவு தேய்ந்துபோய் முத்திக்குரிய அன்பும் நல்வாச மும்போய் புலன்களின கொடுமையில் சிக்குண்டு வருத்தப்படு வர். அந்தோ பூரண அருளையுடைய பராபரமே ஆசையில்லா மல் இருக்கும் வரைக்கும் தெய்வம் பிரத்தியட்சமாகா.

சித்திரைமீ கஅவ

அவா—Avarice.

மைந்தர்கள் தம்மைப்போற்ற வளநிதி வேண்டுமென்றுய்
நந்திய பறவை காணம் நயந்துறை விலங்கு முன்னு
வந்த பல்லுயிர்க்குச் சேம வைப்புண்டோ வருவாயுண்டோ
வெந்திடத் தேனும் போயொன்றிரப்பது தானுமுண்டோ.
—குசேலோபாக்கியானம்.

(க-ரை) மக்களைக் காப்பாற்றுவதற்குப் பெருஞ்செல்வம் வேண்டுமென்கின்றுய். பறவைகளுக்கும் காணகத்தை விரும்பி வாழுகின்ற விலங்குகளுக்கும் உலகில் இருக்கும்பலவுயிர்க்கும் யாராவது பொருளைச் சேமித்து வைத்தலுண்டோ? அல்லது வரும்படி உண்டோ? அவைகள் வேறு எந்த இடத்திலாவது போய் யாசித்தது உண்டோ?

சித்திரைமீ கசுவ

அவா—Avarice.

வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்பதில்.
—குறள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) ஒரு பொருளையும் விரும்பாமை போலும் மேலா யெ செல்வமானது காணப்படுகிற இவ்வுலகத்திலும் இல்லை கேட்கப்படுகிற அவ்வுலகத்திலும் இல்லை.

சித்திரைமீ உ0உ

அவா—Avarice.

இன்ப மிடையறு தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின். -குறள்.

(க-ரை) அவாவென்று சொல்லப்படுகிறதுன்பங்களுள்ளே மிகுந்த துன்பமானது ஒருவனுக்குக் கெடுமாயின் அவனுக்கு முத்தி உலகில் மாத்திரமல்ல அவ்வுலகத்தும் ஆனந்தமானது இடையறாது.

சித்திரைமீ உகஉ

அவா—Avarice.

அவாவென்ப வெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து. —குறள்.

(க-ரை) சகல உயிர்களுக்கும் எக்காலத்திலும் கெடாது வருகின்ற பிறவியை விளைபயதாகிய விதை அவாவாகும் என்று சொல்லுவர் பெரியோர்.

சித்திரைமீ உஉஉ

அவா—Avarice.

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். —குறள்.

(க-ரை) பிறப்புத் துன்பமாயிருக்கையை அறிந்தவன் ஒன்றை இச்சித்தால் பிறவாதிருக்கையையே இச்சிக்கவேண்டும் அப்பிறவாமையானது தான் ஒரு பொருளையும் இச்சிக்காதிருக்க அவனுக்குத்தானே உண்டாம்.

சித்திரைமீ உஅஉ

அவாவறுத்தல்--Overcoming Avarice.

மெய்வாய் கண்மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
வைவாய வேட்கை யவாவினைச்—கைவாய்க்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடுபெறும். --நாலடியார்.

(க-ரை) உடம்பும் வாயும் கண்ணும் மூக்கும் காதும் எனப் பெயர்கொண்ட ஐந்து வழிகளையுடையதாகிய வேட்கை யாலாகிய அவாவை மனங்கலங்காதபடி தடுத்துத் துறவொழுக் கத்தில் மனத்தைச் செலுத்துகின்ற வலிமையை யுடையவன் தவறாமல் முத்தியைப் பெறுவான்.

சித்திரைமீ உசஉ

அவாவறுத்தல்—Overcoming Avarice.

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தானிரந்து
தஞ்சுவதே மாந்தர் தொழில். —நல்வழி.

(க-ரை) தமக்கு வாராதவைகள் வருந்தி அழைத்தாலும் வாரவாம். தனக்கு வருபவைகள் போமின் என்று வெறுத்தாலும் போகாவாம். இவ்வுண்மையை அறியாமல் இருந்து கொண்டு ஏக்கமுற்று மனம் புண்ணாகும்படி கவலையுற்று வாழ்நாளை வீணாக்குதல் மனிதர் தொழிலாம்.

சித்திரைமீ உருஉ

ஈகை—Liberality.

வைத்துப் பொருளைத்தானுகான் வழங்கானிருந்துஞ் செத்
தெத்தபின்னரென்செய்வான்றியார்கொள்வீட்டுதலான் (தானே
மெத்தும் வருத்தமேயன்றி வேறுன்றில்லை யாதலினாற்
பொத்தும் வெறுங்கை நன்றியுறல் புசித்துவழங்கலே யாகும்.
—விநாயகபுராணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க–ரை) செல்வத்தை வைத்து இருந்தும் தானும் அனுபவியாமல் அதை மற்றவர்களுக்கும் கொடாமல் வைத்து இருப்பவன் இருந்தும் இறந்தவனுக்குச் சமானம். இறந்த பின்பு இவன் என்ன செய்வான்? நீபவர்கள் இவனது செல்வத்தை அனுபவிப்பார்கள். இதனால் மிகவுங் கண்பமே யன்றிச் சுகம் இல்லை. இதனால் குற்றம் பொருந்திய செல்வத்தைத் தானும் அனுபவித்துப் பிறருக்குங் கொடுத்தலே நன்று.

சித்திரைமீ உசூ

ஈகை—Liberality.

சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்–மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. –நல்வழி.

(க–ரை) யோசிக்குமிடத்து பூமியிலே உயர்வாகிய சாதி என்றும் இழிவாகிய சாதியென்றும் சாதி இரண்டேயல்லாமல் வேறில்லை. நீதி தவறுத நல்லவழியிலே நின்று கொண்டு முறைமையோடு சற்பாத்திரங்களாய் உள்ளவருக்குக் கொடுத்தலரே உயர்வாகிய சாதியார் கொடாதவரே இழிவாகிய சாதியார்.

சித்திரைமீ உஎஉ

ஈகை—Liberality.

கல்லா ரொருவருக்குச் செய்த வுபகாரங்
கன்மே லெழுத்துப் போற் காணுமே–பல்லாத
வீரமில்லா நெஞ்சத் தார்க்கியற்ற வுபகாரம்
நீர்மே லெழுத்துக்கு நேர். –மூதுரை.

(க–ரை) கற்குணமுடையவராகிய ஒருவருக்குச் செய்த உபகாரமானது கல்லின்மேல் எழுதப்பட்ட எழுத்தைப்போல் விளங்கும் மற்ற அன்பில்லாத மனமுடையவருக்குச் செய்த உபகாரமானது சலத்தின் மேல் எழுதப்பட்ட எழுத்துக்கு ஒப்பாகும்.

சித்திரைமீ உஅஉ

ஈகை—Liberality.

பிறர்க்குதவி செய்யார் பெருஞ் செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேரும்–பிறர்க்குதவி
செய்யாக் கருங்கட னீர் சென்று புயன் முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. –நன்னெறி.

(க–ரை) பிறருக்கு உபகாரஞ் செய்யாதவருடைய பெரிய செல்வமானது பிறருக்கு உபகாரஞ் செய்பவருடைய செல்வமாகும். பிறருக்கு உபகாரஞ் செய்யாத கரிய சமுத்திரத்திலுள்ள நீரை மேகமானது போய் மொண்டுவந்து பிறருக்குப் பெய்து கொடுக்கும்.

சித்திரைமீ உகஉ

ஈகை—Liberality.

பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை பிறந்தமண்மேல்
இறக்கும்பொழுது கொடு போவதில்லை யிடைநடுவிற்
குறிகு மிச்செல்வஞ் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக்கென் சொல்லுவேன் கச்சியேகம்பனே,
—பட்டினத்தடிகள்.

(க–ரை) பிறக்கும்பொழுது கொண்டு வந்ததில்லை. இறக்கும்போது கொண்டு போவதுமில்லை. இடையிலே கிடைத்ததாகிய இந்தச் செல்வத்தைச் சிவபெருமானுக்கு ருபை செய்யப்பட்ட தென்று அறிந்து வறியவர் முதலானோர்க்குக் கொடுக்க வறியாமல் இறந்து போகின்றகீழ்மக்களுக்கு என்ன இதத்தைச் சொல்லுவேன் கச்சி யேகம்பனே.

சித்திரைமீ ஈ0உ

ஈகை – Liberality.

முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள–கொன்னே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவன்மின் பற்றன் மின் பாத்துண்மின் யாதுங்
காவன் மின் கைத்துண்டாம் போழ்து.

—நாலடியார்.

(க—ரை) உங்கள் முன்னனே இறக்குங் காலமும் வெறுத் தற்குத் தக்க கிழத்தனமும் உள்ளன. மேலும் வலிமையைக் குலைக்கும்படியான வியாதிகளும் உள்ளன. ஆதலால் கைப் பொருள் உண்டாயிருக்குங் காலத்தில் வீணாக மேலும் சம்பா தித்தற்கு அலையாதிருங்கள். உள்ள பொருளை உலோபத்தால் இறுக்கிப் பிடியாதிருங்கள். யாவருக்கும் சோறு முதலியவற் றைப் பகுத்துக் கொடுத்து மிகுதியை உண்ணுங்கள். பிறரால் இரக்கப்பட்டவற்றுள் எதையும் ஒழியாதிருங்கள்.

வைகாசிமீ கஉ

ஈகை—Liberality.

நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று. —குறள்.

(க—ரை) மேலுலகத்துக்கு நல்ல வழியென்பவர் உண்டா யினும் இரத்சல் குற்றமாம். மேலுலகத்தை யடைதல் இல்லை யென்பவர் உண்டாயினும் கொடுத்தலே நல்லதாம்.

வைகாசிமீ உஉ

ஈகை—Liberality.

வறியார்க் கொன்றீவதே யீகை மற்றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. —குறள்.

(க—ரை) தரித்திரருக்குக் கொடுத்தலே கொடையாகும் மற்றவர்களுக்குக் கொடுத்தல் பின் வாங்கிக் கொள்ளும் பய னுகும்.

வைகாசிமீ ஈஉ

ஈயாமை—Niggardlness.

எறிநீர்ப் பெருங் கடலெய்தி யிருந்து
மறுநீர்ச் சிறுகிணற் றூறல் பார்த்துண்பர்
மறுமை யறியாதா ராக்கத்திற் சான்றோர்
கழிகல் குரவே தலை —நாலடியார்.

(க—ரை) அலைகளை விசுகிற மிக்க நீரையுடைய பெரிய சமுத்திரத்தைத் தாம் அடைந்திருந்தாலும் அது உவர்ப்பினுற் பயன்படாமையால் எல்லோரும் இடை இடையே அற்று அற்றச் சுரக்கிற நீரையுடைய சிறிய கிணற்றின் ஊற்றைத் தேடிக்கண்டு அந்நீரைக் குடிப்பார்கள். ஆதலால் மறுமைப் பயனை யறியாத உலோபிகளுடைய பெருஞ் செல்வதனினும் மறுமைப்பயனை யறிந்த மிக்க நற்குணங்களால் நிறைந்த பெரி யோரது மிக்க வறுமையே மேலானது.

வைகாசிமீ சஉ

ஈயாமை—Niggardliness.

நாயாய்ப் பிறந்திடி னல்வேட்டை யாடி நயம்புரியுந்
தாயார் வயிற்றி னராய்ப் பிறந்து பின் சம்பந்நராய்க்
காயா மரமும் வறளாங் குளமுங்கல் லாவுமென்ன
வீயா மனிதரை யேன்படைத்தாய்கச்சி யேகம்பனே.

—பட்டினத்தடிகள்.

(க—ரை) நாயாகப் பிறந்தாலும் நல்ல வேட்டையாடித் தன்னை வளர்ப்பவனுக்குப் பிரயோசனத்தைச்செய்யும். அன்னை வயிற்றில் மானிட சன்மமாகிப் பிறந்து பிறகு செல்வமுள்ளவர் களாகிக் காயாமரத்தையும் நீர்வறண்டு போன குளத்தையும் கற்பாறையையும் போலத் தமக்கும் பிறர்க்கும் யாதொன்றையும் கொடாத மானிடரை இவ்வுலகத்தில் என்ன காரியத்துக்காகப் படைத்தனை? கச்சியேகம்பனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசிமீ நுஉ

ஈயாமை—Niggardliness.

இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல் —குறள்.

(க-ரை) பிறர்க்குக் கொடாமல் தாமே உண்ணுதல் யாசிப் பதினும் துன்பம்.

வைகாசிமீ சுஉ

ஊழ்—Destiny.

தீங்குவந் தடையு மாறு நன்மைதான் சேரு மாறுந்
தாங்கள் செய் வினையி னூலே தத்தமக் காயவல்லா
லாங்கவை பிறரால் வாரா வழுதநஞ் சிரண்டினுக்கு
மோங்கிய சுவையின் பேத முதவினர் சிலருமுண்டோ.

-கந்தபுராணம்.

(க-ரை) இவ்வுலகில் ஒருவனுக்கு நன்மை வந்து சேருவ தும் அவன் அவன் செய்த வினைப்பயனல் அன்றி வேறு ஒருவ ரால் அன்று. அமிர்தத்துக்கும் நஞ்சுக்கும் உள்ள சுவையின் வித்தியாசத்தைக் கொடுத்தவர்கள் ஆரும் உண்டா? இல்லை.

வைகாசிமீ எஉ

ஊழ்—Destiny.

அழுதாற் பயனென்ன கொந்தாற் பயனென்ன வாவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னை யொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோன்
எழுதாப்படி வருமோ சலியாதிரென் னேழை நெஞ்சே.

பட்டினத்தடிகள்.

(க-ரை) நேர்ந்த இடுக்கண்ணுக்கு அழுதால்என்னபயன்? உன்னை நொந்து கொண்டால் என்ன பயன்? ஆகும் பயனில்லை. உன்னைப் பிறர் தொழுதால் என்னபயன்? ஒருவர் மீ வருந்தும்

படி நிந்தித்த நிந்தையினல் என்ன பயன்? நன்மையும் தீமையும் பிரமன் எழுதாவகை சம்பவிக்குமா? என் அறியாமையாகிய மனமே நடுங்காமல் இரு.

வைகாசிமீ அஉ

ஊழ்—Destiny.

பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லாதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு. —நாலடியார்.

(க-ரை) இளங்கன்றானது பலபசுக்களின் நடுவிலே செலுத் தப்பட்டாலும் தனது தாயைத்தானேதேடி அடைதலில் வல்லமை யுடையதாம். அதுபோல் மிகவும் பழமையாகிய கரு மமும் பலஜீவகோடிகளுள்ளும் தன்னைச் செய்த உரிமையுடை யவனைத் தேடி அடைதலில் வலிமையை உடையதாம்.

வைகாசிமீ கூஉ

ஊழ்—Destiny.

வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
யளந்தன போக மவரவ ராற்றுன்
விளங்காய் திரட்டினு நில்லைக் களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்.

—நாலடியார்

(க-ரை) செல்வ முதலியவற்றுல் சிறப்பைப்பெற விரும் பாதவர் உலகத்தில் யாருமில்லை. ஆயினும் அவரவரது சுகா னுபவங்கள் அவரவரது ஊழ்வினையினுல் முன்னமே அளவு செய்யப்பட்டுள்ளன. விளங்காயைத் திரண்ட உருவினதாகச் செய்து வைத்தவர் இல்லை. களாப்பழத்தைக் கரிய உருவின தாகச் செய்து வைத்தவரும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசிமீ கo

ஊழ்—Destiny.

ஈண்டுநீர் வையத்து ளெல்லாரு மெத்துணையும்
வேண்டார்மற் றீய விழைபய னல்லவை
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது. —நாலடியார்.

(க—ரை) தெருங்கிய கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்தில் யாவரும் மிகச்சிறிதும் கொடியவையாகியதுன்பங்களைப் பெற விரும்பார். யாவரும் விரும்பும் பயன் நல்லவையாகிய இன்பங்களேயாகும். விரும்பினலும் விரும்பாவிட்டாலும் பழவினையால் வந்து அடைதற்குரியவையாகிய இன்பங்களும் துன்பங்களும் அவரை அடையாமல் விடுவது இல்லை.

———

வைகாசிமீ கக

ஊழ்—Destiny.

ஆழ வழுக்கி முகக்கினு மாழ்கடலில்
நாழி முகவாது நாணுழி—தோழி
நீதியுங் கணவனு நேர்படினுந் தத்தம்
விதியின் பயனே பயன். —மூதுரை.

(க—ரை) ஆழமாகிய சமுத்திரத்தினுள்ளே முழுக அமுக்கி மொண்டாலும் ஒரு நாழியானது நாலு நாழி சலத்தை மொள்ளாது. அது போலப் பெண்களுக்கு திரவியமும் நாயகனும் நேர்பட்டாலும் அவர் அவருடைய ஊழினளவாகிய பயனே அன்றி அதிகமாக அனுபவித்தல் முடியாது.

———

வைகாசிமீ கஉ

ஊழ்—Destiny.

எழுதிய வாறேகா ணிரங்கு மடநெஞ்சே
கருதியவா றுமோ கருமங்—கருதிப்போய்க்

கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்க யிந்தேன்
முற்பவதற் செய்த வினை. —மூதுரை.

(க—ரை) வருந்துகின்ற அறியாமை பொருந்திய மனமே நல்ல பலனைப் பெறலாமென்று நினைத்துக் கற்பக தருவைப் போய் அடைந்தவருக்கு அது எட்டிக் காயைக் கொடுத்த தாயின் அதற்குக் காரணம் அவர் முற்பிறப்பிற் செய்த தீவினையாகும். செய்தொழில்கள் நினைத்தபடி ஆகாது கடவுள் விதித்தபடியே ஆகும் என்று அறிவாயாக.

———

வைகாசிமீ கங

ஊழ்—Destiny.

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றுற் போகா—விருந்தோங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தானினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். —நல்வழி.

(க—ரை) தமக்கு வாராதவைகள் வருந்தி அழைத்தாலும் வராவாம். தமக்கு வருமவைகள் வெறுத்தாலும் போகாவாம். இவ்வுண்மையை அறியாமல் இருந்து கொண்டு ஏக்கமுற்று மனம் புண்ணாகும்படி அவைகளைத் தாங்கள் நெடுந்தூரம் நினைத்து மாண்டு போவதே மனிதருடைய தொழிலாகும்.

———

வைகாசிமீ கச

ஊழ்—Destiny.

ஒன்றை நினைக்கின தொழிந்திட் டொன்றுகு
மன்றி யதுவரினும் வந்தெய்து—மொன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாழு மீசன் செயல். —நல்வழி.

(க—ரை) ஒரு பொருளைப் பெற நினைத்தால் அப்பொருள் கிடையாமல் வேறு ஒரு பொருள் கிடைத்தாலாக கிடைக்கும் அப்படியல்லாமல் அபபொருளே வந்துகிடைத்தலும் கிடைக்கும் இன்னும் ஒருபொருளை நினையாது இருக்கு முன்னே அது

கொழும்பு தமிழ்ச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்

தானே வந்து நின்றாலும் நிற்கும். இவைகளெல்லாம் எண்ணி ஆண்டருளும் கடவுளுடைய செய்கைகளாகும்.

வைகாசிமீ கநிஉ

ஊழ்—Destiny.

தாந்தாமுற் செய்தவினை தாமே யனுபவிப்பார்
பூங்கா மறையோன் பொறிவழியே—வேந்தே
யொறுத்தாரை யெண்செயலா மூரெல்லா மொன்று
வெறுத்தாலும் போமோ விதி. —நல்வழி.

(க—ரை) முற்பிறப்பிலே தாம் தாம் செய்த நல்வினை தீவினைகளாகிய தாமரை மலரில் இருக்கின்ற பிரமாவிதிப்படியே தாமே அனுபவிப்பார்கள். தீவினையினாலே தீண்டப்பட்டுத் தீங்கு செய்தவரை நாம் யாது செய்யலாம்? ஊரில்உள்ளார் எல்லாருந் துணையாகத் திரண்டு வெறுத்தாலும் விதிபோகுமோபோகாது.

வைகாசிமீ கசஉ

ஊழ் - Destiny.

நுண்ணிய நூல்பல கற்பினு மற்றந்த
னுண்மை யறிவே மிகும். -குறள்.

(க—ரை) அறியாமை யாக்குவதாகிய ஊழ் உடையவன் ஒருவன் நுட்பமான பொருள்களையுடைய பல நூல்களையும் கற்றாலும் அவனுக்குப் பின்னும் தனது ஊழினாலாகிய அறிவே மிகும். (மேற்படும்)

வைகாசிமீ களஉ

ஊழ்—Destiny.

பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
செரியினும் போகா தம. -குறள்.

(க-ரை) ஊழினாலே தம்முடையவை யாகாத பொருள்கள் வருந்திக் காப்பாற்றினாலும் தம்மிடத்து நில்லாமற் போகும்

தம்முடையவையாகிய பொருள்கள் புறத்தே கொண்டு போய்ப் பெய்து விட்டாலும் தம்மை விட்டுப் போகாவாம்.

வைகாசிமீ கஅஉ

ஊழ்—Destiny

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். -குறள்.

(க-ரை) ஊழை விலக்க நினைக்கின் அதுவே முன்னிற்கும். ஆதலால் அவ் ஊழினும் வலியவை இல்லை என்பதாம்.

வைகாசிமீ ககஉ

ஒழுக்கம்—Good manners.

தாழ்ந்த வருணத தாதித்தவருந் தக்கோராவொழுக்கத்தால்
வீழ்ந்த வொழுக்கத்தாலிழிவர் மேலாமவருணத்துதித்திடினுஞ்
சூழ்ந்த துணையாஞ் சிறப்பின்பஞ் சுரக்குமதனையுயிர்தனினும்
வாழ்நத வொழுக்க மோம்பிடுக வழுக்கி னிடும்பையேதருமே.

—விநாயகபுராணம்.

(க-ரை) தாழ்ந்த வருணத்துப் பிறந்தவராயினும் நல்லொழுக்கத்தினால் மேலோராவர். உயர்ந்த வருணத்துப் பிறந்தவராயினும் நீச ஒழுக்கத்தினால் இழிந்தவராவர். நல்லொழுக்கமானது நெருங்கிய துணையாகும். சிறப்பையும் இன்பத்தையும் தரும். ஆகையால் உயிரினும் நல்லொழுக்கம் மேன்மையுடையது தீயொழுக்கம் இடைஞ்சலை வருவிக்கும்.

வைகாசிமீ உ0உ

ஒழுக்கம்—Good manners.

பொறைகொடைகருணைதானம்பொய்ம்மொழிஒழுக்காறின்மை
யுறையுமுட் கரணங் காத்தல் பயில்புறக் கரண மோம்பல்
குறளை சொல்லாமை நாளு முனிவின்மை யுயிர்கொல்லாமை
பிறர்மனை நயத்தலின்மை நன்மொழி பிறழா வாய்மை.

—கூர்மபுராணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) பொறையும், கொடையும், கருணையும், தானமும் வாய்மையும், அழுக்காறின்மையும், ஐம்புலன் ஐம்பொறி காத்தலும், கோள் சொல்லாமையும், எக்காலும் கோபமின்மையும், உயிர் கொல்லாமையும், பிறன்மனை விழையாமையும், நன்மொழி பேசலும், மாறுபடா உண்மை பேசலும் நல்லொழுக்கமாம்.

———

வைகாசிமீ உகஉ

ஒழுக்கம்—Good manners.

புண்ணிய நன்னீராடல் கடவுளர் பூசை யாற்ற
லுண்ணிறை மகிழ்ச்சி வேத பாரகர்க் கூட்டறீய
கண்ணியவாமை கள்ளா தொழுகுதல் கடுஞ்சொல்லின்மை
யெண்ணிய விவைகணன்கு குலத்திற்கு மியைந்தவாமால்.

-கூர்ம புராணம்.

———

வைகாசிமீ உஉ உ

ஒழுக்கம்—Good manners.

புரிந்தபாவ மறையாது புகறல் வேண்டு மியாவருக்கும்
வருத்தின்றுக விலைவனகள் செயல்வேண்டு மகிழ்தந்தை
திருந்து மொழுக்கந் திறம்பாம னிற்றல் வேண்டுமடகெனினும்
விருந்தினோடு நுகர்வதலால் வாளாநுகர்தல்விடல்வேண்டும்.

கூர்ம புராணம்.

———

வைகாசிமீ உகஉ

ஒழுக்கம்- Good manners.

காமவெகுளி மயக்கமுதற் றீமையெவையுங் கடிந்திடித
லோமச் செந்தீ யூட்டி யன்றி யுண்ணு தொழிதருய் தந்தை (ள்
தோமில்பசுகாண்மறைக்கிழவர்ப்போற்றித் தொழுதறுய்ப்பனக
பாமாண்டிளைஞர்மகிழ்சிறப்பவரை யாதென்றும்பார்த்தருந்தல்

—கூர்ம புராணம்.

———

வைகாசிமீ உசஉ

ஒழுக்கம்—Good manners.

அல்லல்புரிந்து பொருளீட்டல் காமந்துய்த்த லினையராக
வெல்லும் வகையி னறமியற்றுங் காலத்துன்ப முற்றிடினும்
புல்லுந்தருமம் விடாதொழுக புசலுமுயிர்களனைத்தினுக்கு
நல்லசெய்க கடவுளரை மறைய யிகழ்த னவையாமால்.

-கூர்மபுராணம்

———

வைகாசிமீ உநிஉ

ஒழுக்கம்—Good manners.

ஒன்றென் றிருதெய்வமுண்டென் றிருவுயர் செல்வமெல்லா
மன்றென்றிரு பசித்தோர் முகம்பார் நல்லறமூ நட்பு
நன்றென் றிருநடு நீங்காமலே நமக்கிட்டபடி
யென்றென் றிருமன மேயுனக்கே யுபதேச மிதே.

-பட்டினத்தடிகள்.

(க-ரை) மனமே கடவுள் ஒருவன்என்று கருதியிரு, உண்டென்று இரு. உயர்ந்த -செல்வங்களெல்லாம் உயிருக்குத் துணை பாவதல்ல என்று இரு. பசியால் இளைத்தவர்களுடைய முகத்தைப் பார்த்துக் கருணையாய்க் கொடு. தூறவுமும் நல்லாரோடு உறவாடுதலும் உயிர்க்கு நன்மை தருவனவென்று நம்பியிரு. நடுவு நிலைமையினின்று நீங்காமலே கடவுள் நமக்கு விதித்ததுவும் இளமையிலோ மூப்பிலோ என்று கருதியிரு. உனக்கு உபதேசமிதுவே.

———

வைகாசிமீ உசூஉ

ஒழுக்கம்—Good manners.

பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்
றெய்வக் தெளிவின தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமி
னுயி ணுண்டுறமினுயிர்க் கொலை நீங்குமின்
றுனஞ்செய்மின தவம்பல தாங்குமின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மி
னறவோ ரவைக்கள மகலா தணுகுமின்
பிறவோர வைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி ரோம்புமின்
அறமனை காமி னல்லவை கடிமின்
கள்ளுங் களவும் காமமும் பொய்யும்
வெள்ளோக் கோட்டியும் விரகினி லொழிமி
னிளமையுஞ் செல்வமும் யாக்கையு நிலையா
வுளநாள் வரையா தொல்லுவ தொழியா து
செல்லுந் தேஎத்துக் குறுதணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென.

—சிலப்பதிகாரம்.

வைகாசிமீ உஎஉ

ஒழுக்கம்—Good manners.

அறிவ தறிந்தடங்கி யஞ்சுவதஞ்சி
யுறுவதலகுவப்பச் செய்து—பெறுவதனு
லின்புற்று வாழு மியல்புடையா ரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்த லரிது.

—நாலடியார்.

(க-ரை) அறியவேண்டியவை யெல்லாம் அறிந்து பொறு மைக்குணமுடையராய் அஞ்சத்தக்க பழி பாவங்களுக்குப் பயந்து தாம் செய்யுல் காரியத்தை யெல்லாம் உலகத்தவர் மகிழும்படி செய்து அதனாற் பெறும் பயன்களால் இன்ப மடைந்து வாழ்கின்ற தன்மையை யுடையவர் எப்பொழுதும் துன்பமடைந்து வாழ்தல் இல்லை.

வைகாசிமீ உஅஉ

ஒழுக்கம்—Good manners.

பிறர்மறை யின்கட் செவிடாய்த்திறனறிந்
தேதிலா ரிற்சட் குருடனாய்த் தீய

34099

புறங்கூற்றின் மூங்கைபாய் நிற்பானேல் யாது
மறங்கூற வேண்டா வவற்கு.

—நாலடியார்.

(க-ரை) ஒருவன் நல்லொழுக்கத்தின் வகையை உணர்ந்து அயலாரது இரகசியங்களைக் கேட்பதிற் செவிடனாகியும் அய லாரது மனைவியரைக் காதலோடு காண்பதிற் குருடனாகியும் ஒருவர் மேல் தீய சொற்களை அவர்களைக் காணுதவிடத்துச் சொல்லுவதில் ஊமையாகியும் நிற்கமாட்டுவானாயின அவனுக்கு எந்தத் தருமமும் பிறர் உபதேசிக்க வேண்டியதில்லை.

வைகாசிமீ உகூஉ

ஒழுக்கம்—Good manners.

அறிமி னறநெறி யஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ் சொற்போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயா கேண்மை யெஞ்ஞான்றும்
பெறுமின் பெரியார் வாய்ச் சொல்

—நாலடியார்.

(க-ரை) எப்பொழுதும் தருமமார்க்கத்தை அறியுங்கள். இயமனுக்குப் பயப்படுங்கள். அயலார் சொல்லும் வன்சொற் களைப் பொறுத்துக்கொள்ளுங்கள். வஞ்சனையாகிய குணத்தை உம்மிடம் வராதபடி தடுத்துப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். தீச் செயல்களையுடையவரது சிநேகத்தை வெறுத்து விடுங்கள். பெரியோரது வார்த்தைகளைக் கேட்டு அங்ஙனமே ஒழுகுங்கள்

வைகாசிமீ நுஅஉ

ஒழுக்கம்—Good manners.

ஒழுக்கமுடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப் பாய் விடும்.

—குறள்.

(க-ரை) தத்தம் வருணத்திற்கு ஏற்ற ஆசாரம் குலமு டையது. அவ்வாசாரத்தினின்று தவறுவது தாழ்ந்த வருண மாய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசிமீ நகவ

ஒழுக்கம்—Good manners.

ஒழுக்கத்தினெல்கா ரூவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து. —குறள்.

(க-ரை) பெரியோர் இழுக்கத்தால் இழிகுலமாவதை அறிந்து ஒழுக்கத்திற் குறையார்.

——

ஆனிமீ கவ

ஒழுக்கம்—Good manners.

ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். —குறள்.

(க-ரை) நல்லொழுக்கமுள்ளவர் தீய சொற்களைச் சொல்லார்.

———

ஆனிமீ உவ

கயமை—Baseness.

வாதுக்குச் சண்டைக்குப் போவார் வருவார் வழக்குரைப்பார்
தீதுக் குதவியுஞ் செய்திடுவோர் தினந் தேடியொன்று
மாதுக் கழித்து மயங்கிடுவோர் விதி மாழுமட்டு
மேதுக் கிவர்பிறந் தாரிறை வாகச்சி யேகம்பனே.

—பட்டினத்தடிகள்.

(க-ரை) வாக்கு வாதத்துக்கும் கைச்சண்டைக்கும் போவார் மீண்டு வருவர். தமது வழக்கைப்பிறர் கேட்கச்சொல்வார். பொல்லாங்குக்குத் துணையுஞ் செய்வார். தமது ஊழ் நசிக்குமளவும் ஒப்பற்றதாகிய சுவர்ணத்தை நாள்தோறும் ஈட்டி வைத்துத் தம்மால் விரும்பப்பட்ட பெண்ணின்பொருட்டு அறிவழிந்து மயங்குவார்கள். இப்படிப்பட்ட குணங்களையுடையவர் எதற்காகப் பிறந்தார்களோ? இறைவாகச்சி யேகம்பனே.

———

ஆனிமீ நகவ

கயமை—Baseness.

கடுஞ்சொல்லின் வம்பரை யீனரைக் குண்டரைக் காமுகரைக்
கொடும்பவ மேசெயு நிர்மூடர் தம்மைக் குவலயத்து
ணெடும்பனைபோல வளர்ந்து நல்லோர்தந் நெறியறியா
விடும்பரை யேன் வகுத்தா யிறைவாகச்சி யேகம்பனே.

—பட்டினத்தடிகள்.

(க-ரை) கடுஞ் சொற்களையுடைய வம்பர்களையும், இழிந்தாரையும், பிசாசரி புத்திரரையும், தூர்த்தரையும், கொடிய பாவத்தையே செய்கிற நிர்மூடரையும் உலகத்தில் நெடிய பனை மரம்போல வளர்ந்து இருந்தும் நல்லோர்களுடைய வழியை உணராத துஷ்டரையும் ஏன்படைத்தாய் இறைவா கச்சியே கம்பனே.

———

ஆனிமீ சவ

கயமை—Baseness.

ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்ப ருற்றப்பெற்ற
தாயாரை வைவர் சதியாயிரஞ் செய்வர் சாத்திரங்க
ளாயார் பிறர்க்குப காரஞ்செய் யார்தமை யண்டினர்க்கொன்
றீயாரிருந்தென்ன போயென்ன காண்கச்சி யேகம்பனே.

—பட்டினத்தடிகள்.

(க-ரை) இடையருமற் பொய்சொல்வார்கள் நல்லோர்களை நிந்திப்பார்கள். கருப்ப நோய் முதலியவைகளை யடைந்து நின்ற அன்னையரை வைவர்கள். ஆயிரம் வஞ்சனை செய்வார்கள். அறிவு நூல்களை ஆராய்ந்திலர். பிறருக்குஉபகாரமுஞ்செய்யார். தம்மை அடித்தவர்களுக்கு ஒரு பொருளையும் கொடார். இப்படிப்பட்டவர் உலகில் இருந்தால் என்னலாபம்? இறந்தொழிந்தால் என்ன நஷ்டம்? கச்சி யேகம்பனே.

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனிமீ நுஉ

கயமை—Baseness.

அறிவுடையா ரன்றி யதுபெறூர் தம்பாற்
செறிபழியை யஞ்சார் சிறிதும்—பிறைதுதால்
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சுமோ விருளைக் கண்டு. —நன்னெறி.

(க-ரை) பிறைபோலும் நெற்றியை யுடையவளே! அறிவுடையவரே யல்லாமல் அவ்வறிவைப் பெறுத மூடர் தம்மிடத்திலே நெருங்கி வரும் பழிக்குச் சிறிதும் அஞ்சார். அழகு செய்கின்ற ஒளியையுடைய சண்களே யல்லாமல் ஒளி மறைந்த குருட்டுக் கண்களானவை இருட்டைக் கண்டு அஞ்சுமோ? அஞ்சாத.

ஆனிமீ சுஉ

கயமை—Baseness.

செழும்பெரும் பொய்கையுள் வாழினு மென்றும்
வழும்பறக்க கில்லாவாக் தேரை—வழும்பில்சீர்
நூல்கற்றக் கண்ணு நுணுக்கமொன் றில்லாதார்
தேர்கிற்கும் பெற்றி யரிது. —நாலடியார்.

(க-ரை) தவளைகள் எந்நாளும் செழிப்பான நீர் நிறைந்த பெரிய குளத்தில் வாழ்ந்தாலும் தன் உடம்பின் மேலுள்ள வழுவழுப்பான அழுக்கை நீக்கிக்கொள்ள மாட்டாவாம். அதி போல நுட்ப புத்தி சிறிதும் இல்லாதவர் குற்றமில்லாத சிறப்பையுடைய சாஸ்திரங்களைக் கற்றுப் பழகினாலும் அந்நூல்களின் உண்மைப் பொருளை ஆராய்ந்தறியுந் தன்மை அவர்க்கு இல்லையாம்.

ஆனிமீ எஉ

கயமை—Baseness.

கோடேந் தகலல்குற் பெண்டிர்தம் பெண்ணீர்மை
சேடியர் போலச் செயறேற்றூர்—கூடிப்

புதுப் பெருக்கம் போலத்தம் பெண்ணீர்மை காட்டி
மதித்திறப்பர் மற்றை யவர். —நாலடியார்.

(க-ரை) குலமகளிர் அலங்காரங்களினால் தம்மை மதிக்கச் செய்து பிறரிடத்துப் பொருள் பறிப்பதில்லை. வேசையரோ அவ்வாறு செய்யார். அதுபோல யோக்கியர் தமது நற்குணங்களை வெளிக்குக் காட்டி வியக்கச் செய்யாமல் அடங்கியிருப்பார்கள். அயோக்கியரோ மிக்க மேன்மை யுள்ளவர் போலத் தம்மைத் தாமே வெளிக்கு நடித்துக்காட்டி வஞ்சித்துப் பிறரிடம் பொருள் பறித்துக் கொள்வார்கள்.

ஆனிமீ அஉ

கயமை—Baseness.

ஒருநன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர்—கயவர்க்
கெழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயி
னெழுநூறுந் தீதாய் விடும். —நாலடியார்.

(க-ரை) பெரியோர் தமக்கு முன்னே ஒரு நன்மை செய்தவர் பின்னே பல தீமைகளைச் செய்தாலும் முன் செய்த ஒரு நன்மையைக் கருதிப் பல தீமைகளையும் பொறுப்பர். அற்பரோ வெனின் அவ்வாறன்றி ஒரு தீமையைக் கருதிப் பல நன்மைகளையும் மறப்பர். அவர்களுக்குச் செய்த நன்மைகளும் தீயனவாகவே தோன்றும்.

ஆனிமீ கஉ

கயமை—Baseness.

வேங்கை வரிப்புலிகோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரங்
கல்லின்மே லிட்ட கலம். —மூதுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) வரிகளையுடையவேங்கைப்புலிக்குருஞ்சு நோயைத் தீர்த்த விஷவைத்தியன் அப்போழுதே அப்புலிக்கு இரையா னற்போலத் தான் அழியுந் தன்மையை ஆலோசித்து அறியா மல் அற்ப புத்தியுடையவருக்குச் செய்த உபகாரமும் கல்லின் மேலே போடப்பட்ட மட்பாத்திரம் போலே அழிந்துபோம்.

ஆனிமீ கஅவ

கயமை—Baseness.

பூவாதே காய்க்கு மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலு நன்றுகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்று துணர்வு. —நல்வழி.

(க-ரை) பூவாமலே காய்க்கின்ற மரங்களும் உண்டு. அது போல மனிதர்களுள்ளும் ஏவாமலே இருந்து தாமே யறிந்து வல்லவரும் உண்டு. தூவி விரைத்தாலும் முளைத்துப் பயன் படாத விதைபோல மூடனுக்குளதித்துவிளங்கச் சொன்னாலும் அதனை அறியும் அறிவு அவனிடத்து உண்டாகாது.

ஆனிமீ கஉவ

கயமை—Baseness.

உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ். —குறள்.

(க-ரை) கீழ்மகன்பிறருண்டாலும் உடுத்தாலுங் கண்டாற் பொறாமை கொள்வான்.

ஆனிமீ கஉவ

கயமை—Baseness.

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லாதவர்க்கு. —குறள்.

(க-ரை) கீழ்மக்க ளிரப்பவர்க்குக் கொடார் வருந்து வோர்க்குக் கொடுப்பர்.

ஆனிமீ கஊவ

கொல்லாமை—Non-killing.

கொல்லா விரதங் குவலமெல்லா மோங்க
வெல்லார்க்கும் சொல்லுவதென் னிச்சை பராபரமே.

—தாயுமானவர்.

(க-ரை) பராபரமே இப் பூவுலகின் கண்ணே உயிர்வதை செய்யாத விரதம் ஓங்கி வளரச் செய்யும்படிக்கு எல்லாருக்கும் சொல்லுவது என்னுடைய விருப்பம்.

ஆனிமீ கசவ

கொல்லாமை—Non-killing.

கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ வறியேன் பராபரமே.

—தாயுமனவர்.

(க-ரை) பராபரமே உயிர்வதை செய்யாத விரதத்தைக் கைக்கொண்டு நடப்பவர்களே நல்லவர்கள். மற்றவர்கள் யாரோ எனக்குத் தெரியவில்லை.

ஆனிமீ கஙவ

கொல்லாமை—Non-killing.

கொலையிலா னுதவு மன்னங் கூறிற்பே ரமுதமாகுங்
கொலையுளா னுதவு மன்னங் கூறில்வல் விடமதாகும்
புலையர்த மனையி லுண்போன் புலையனு மாறுபோலக் (றே
கொலைஞர்த மனையி லுண்போன் கொலைஞனேயாவனன்

—பதிபசுபாச விளக்கம்.

(க-ரை) பார்க்கும் இடத்து, கொலையென்னும்பாதகத்தைச் செய்யாதவன் கொடுக்கும் அன்னம்தேவாமிர்தமாகும். கொலைப் பாவத்தைச் செய்பவன் கொடுக்கும் அன்னம்விஷம் பொருந் திய விஷமதாகும். புலையருடைய வீட்டிலே உண்பவன் புலைய னவதுபோலக் கொலைப் பாதகத்தைச்செய்பவன்வீட்டில் உண் பவன் கொலைசெய்கிறவனுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனிமீ ரகூஉ

கொல்லாமை—Non-killing.

உண்ண வூணை விரும்பி யுயிர்க்கொலை
யெண்ணு வான்கொலை கண்டிரங் கான்கொலை.
பண்ணு வாரைத் தடுத்துப் பகர்கிலா
னண்ணு வானிவ ரோடெனு நால்வரும்.

—சிவதருமோத்தரம்.

(க-ரை) ஊனைப் புசிக்க விரும்பிக் கொலை செய்ய எண்ணுகிறவன், கொலை செய்யக் கண்டும் இரங்காதவன், கொலை செய்பவர்களுக்குக் கொலை செய்யப்படாதென்று தடுத்துச் சொல்லாதவன் இப்படிப்பட்டவர்களோடு சேர்ந்து இருப்பவனுமாகிய நால் வகுப்பினரும் பாவிகளே.

ஆனிமீ கஎஉ

கொல்லாமை—Non-killing.

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. —குறள்.

ஆனிமீ கஅஉ

கொல்லாமை—Non-killing.

உயிருடம்பி னீக்கியா ரெண்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். —குறள்.

(க-ரை) பார்க்கக் கூடாத நோயுடம்புடனே வறுமையோடு கூடிய இத்தொழில் வாழ்க்கை யுடையவர்களே முற்பிறப்பிலே உயிர்களை அவைநின்ற உடம்புகளில் இருந்து நீக்கினவர்களென்று அறிவுடையோர் சொல்லுவர்.

ஆனிமீ ககூஉ

கொல்லாமை - Non-killing.

கொல்லாமற் கொன்றதைத் தின்னுமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவரோ டிணங்காமற் கனவினும் பொய்

சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றேகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

—பட்டினத்தடிகள்.

(க-ரை) உயிர்களைக்கொல்லாதிருக்கவும், கொன்றவைகளை உண்ணாதிருக்கவும், வஞ்சனையையும், கோள் மூட்டுதலையும் களவாடுதலையும் கல்லாதிருக்கவும், பொய்யரோடு இணங்காதிருக்கவும், சொப்பனத்திலும் பொய் சொல்லாது இருக்கவும் பிறர் சொல்லும் பொய்ச் சொற்களைக்கேளாதிருக்கவும், மாதர் மயக்கிற் செல்லாதிருக்கவும், மேலாகியசெல்வத்தைத் தந்தருள் வாயாக சிதம்பர தேசிகனே.

ஆனிமீ உ0உ

புலால் மறுத்தல்—Abstinence from Meat-eating.

சடக்கடத் துக்கிரை தேடிபலவுயிர் தம்மைக் கொன்று
விடக்கடித் துக்கொண் டுறுமாந் திருந்து மிகமெலிந்து
படக்கடித் தின்றுழல் வார்கடம் மைக்கரம் பற்றிநம
னிடக்கடிக் கும்பொழு தேதுசெய் வார்கச்சி யேகம்பனே.

—பட்டினத்தடிகள்.

(க-ரை) சடரூபமாகிய சரீரத்தின் பாதுகாப்புக்காக உணவைத் தேடிப் பல உயிர்களைக் கொலைசெய்து அவற்றின் தசையைப் பிடுங்கிக்கொண்டு செருக்கடைந்திருந்து மிகவும் மெலிந்து வருந்தும்படி கடித்துத்தின்று உழல்வோரை இயமன் கையாற் பிடித்துக்கொண்டு வருத்தப் படுத்தும்போது இவர்கள் என்ன செய்வார்கள் கச்சி யேகம்பனே.

ஆனிமீ உகூஉ

புலால் மறுத்தல்—Abstinence from Meat-eating

எவ்வுயி நம் பாபரண்சந் நிதியதாகு
மிலங்கிழுயி ருடலினைத்து மீசன் கோயி
லெவ்வுயிரு மெம்முயிர்போ லென்று நோக்கி
யிரங்காது கொன்றருந்து மிழிவி னுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவ்வியம தூதரருந் தண்டஞ் செய்து
வல்லிரும்பை யுருக்கியவர் வாயில் வார்த்து
வெவ்விய தீயெழு காகில் வீழ்த்தி மாறு
வேதனை செய்திடுவரென வோது நூலே.

—சிவஞானதீபம்.

ஆனிமீ உஉ

புலால் மறுத்தல்—Abstinence from Meat-eating.

பிணங்கிடக்க நானுகரே னென்றுநீ பேசுங்
குணங்கிடக்க வேண்டியதென் கூறுய்—பிணத்தை
கலத்திலே யிட்டுக் கலந்துகா வாரப்
புலத்தினுற் றின்றுப் புகல். —தனிப்பாடல்.

(க—ரை) பிணம் இருக்கும்பொழுது நான் உண்ணமாட் டேனென்று சொல்லுகிற தன்மைக்குக் காரணமென்ன? நீ புலா லாகிய பிணத்தைக் கலத்திலே வைத்துப் போகிய அளவுக்கு உன் முழு விருப்பத்தோடும் சாப்பிடுகின்றுயே.

ஆனிமீ உசு

புலால் மறுத்தல்—Abstinence from Meat-eating.

பறையரைப் பறையரென்று பறைந்திடு மனிதர் கேளீர்
பறையர்தம் மலத்தைத் தின்ற பன்றியைப் புசிப்ப தென்னே
கறையதே யாகுமந்தக் கறிதனைக் கலத்தினிட்டு
மறையவே வைத்துத் தின்னு மனிதரே பறையர் கண்டீர்

—தனிப்பாடல்.

(க—ரை) பறையரைப் பறையரென்று அழைத்திடும் மனி தரே கேளீர்; பறையருடைய மலத்தை உண்ணும் பன்றியை நீவிர் புசிப்பது யாது காரணம் பற்றியோ குற்றமுடையதாகிய அந்தப் புலாற்கறியைக் கலத்தில் இட்டு மறைவில் வைத்து உண்ணும் மனிதரே பறையர்.

ஆனிமீ உசஉ

புலால் மறுத்தல்—Abstinence from Meat-eating.

அக்கேபோ லக்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுகோ யெழுபவே—பக்கா
லலவணைக் காதலித்துக் காண்முறித்துத் தின்ற
பழவினை வந்தடைக்தக் கால். —நாலடியார்.

(க—ரை) முற்பிறப்பில் நண்டை விரும்பி அதன் காலை யொடித்துத் தின்றதனாலாகிய பழைய தீவினை பிற்பிறப்பில் வந்து சேர்ந்தால் அத்தீவினை செய்தவர், சங்குமணிபோல அசங்கை மாத்திரம் நிற்க விரல்கள் அழுகிப்போய் மிக்க துன் பத்திற்கு இடமான குஷ்ட வியாதி உண்டாகப் பெறுவர்.

ஆனிமீ உடுஉ

புலால் மறுத்தல்—Abstinence from Meat-eating.

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதா னுண்பானெங்
ணனமாளு மருள். —குறள்.

(க—ரை) தன்னுடம்பை வளர்த்தற் பொருட்டுத் தான்மற் றொன்றி னுடம்பைத் தின்பவன் எவ்வகையாற் கிருபையுடைய வனுவான்.

ஆனிமீ உசுஉ

புலால் மறுத்தல்—Abstinence from Meat-eating.

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல். —குறள்.

(க—ரை) அருளானது எதுவென்றால், கொலை செய்யாமை அருளல்லாததானது, எது வென்றால், கொல்லுதல்; ஆகலால் அக்கொல்லுதலால் வந்த ஊனைத் தின்னுதல் பாவமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனிமீ உஎ

புலால் மறுத்தல்—Abstinence from Meat-eating.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிரும் தொழும். —குறள்.

(க-ரை) ஒருயிரையும் கொல்லாதவனுமாய், புலாலையு முண்ணாதவனை எல்லாவுயிர்களும் கைதொழித்து வணங்கும்.

ஆனிமீ உஅ

கள்ளுண்ணாமை—Abstinence from alcohol

கள்ளிலை பகர்வோர் கள்ளினை நுகர்ந்தோர்கள்ளருந்துதற்குடன்
[படுவோர்
கள்ளருந்தினரை மிழுஞர் நரகிற் கற்பகாலங்கிடந்தழுந்திருந்து
யெள்ளுறுந் நீப மலப்புழுவாகிமலத்தினை நுகர்ந்துபின்னிற(பர்
வின்)ள்ளருங்கொடியரௌரவநரகின் மீட்டுமீட்டுழன்றுகள்கழிப்
—கூர்ம புராணம்.

(க-ரை) கள்ளை விற்பவர்களும், கள்ளை உண்பவர்களும், கள்ளை உண்பதற்கு உடன்படுபவர்களும், கள்ளை உண்டவர்களை மகிழ்ந்து பாராட்டுகிறவர்களும், கற்பகாலம் வரையும் நரகத்திற் கிடந்து அழுந்தி வெறுக்கப்படுகின்ற நீயமலப் புழுவாய்ப் பிறந்து, மலத்தினை உண்டு இறந்து சொல்லுதற்கரிய ரௌரவ நரகில்மீட்டுமீட்டும்வீழ்ந்துவாழ்நாளைக் கழிப்பர்.

ஆனிமீ உகூ

கள்ளுண்ணாமை—Abstinence from alcohol.

அறிவையழிக்குஞ் செயலழிக்கு மழியா மானத்தையழிக்குஞ்
செறியு மறிஞர் மதியாத செருக்கை விலைக்கு மீண்டுரை
முறியும்வெறுப்பு மிகவிலைக்கு முனிவு விலைக்கும்பகையஞ்சாக்
குறிகள் விலைக்கு நகைவிலைக்குங் கொள்ளேல் கள்ளுண்டலை
[மைந்தா
—விநாயகபுராணம்.

(க-ரை) கள்ளானது அறிவைக்கெடுக்கும். செயலைக்கெடுக்கும் மானத்தைக்கெடுக்கும் சிறப்புப் பொருந்திய அறிவாளிகளை மதிக்காத செருக்கை உண்டாக்கும். பெற்ற தாயாருக்கும் அதிக வெறுப்பை உண்டாக்கும் கோபத்தை உண்டாக்கும். பகையை அஞ்சாத குணத்தை உண்டாக்கும். மற்றவர்கள் கள்ளுண்டவனைப் பார்த்து நகைக்கச் செய்யும். ஆனபடியால் நீ கள்ளை உண்ணாதிருப்பாயாக.

ஆனிமீ கூ0

கள்ளுண்ணாமை—Abstinence from alcohol.

நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற் றத்தார்க்கு. —குறள்.

(க-ரை) மதுவென்று சொல்லப்படுகின்றயாவரும் இகழும் மிகுந்த குற்றத்தையுடைய கள்ளை உண்பவர்கள், நாணமென்னுங் குணம் இல்லாதவர்கள்.

ஆடிமீ கஉ

கள்ளுண்ணாமை—Abstinence from alcohol.

கையறியாமை யுடைத்தே பொருள் கொடுத்து
மெய்யறி யாமை கொளல். —குறள்.

(க-ரை) ஒருவன் விலையைக் கொடுத்துக் கள்ளாலே தனக்குப் பொய் மறதியைக் கொள்ளுதல் அவன் பழவினைப் பயனாகிய அறிவில்லாமையைக் காரணமாக உடையது.

ஆடிமீ உ0

கள்ளாமை—Against Fraud.

உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கொள்வே மெனல். —குறள்.

(க-ரை) குற்றங்களைத் தமது நெஞ்சினாலே நினைத்தலும் பாவங்களே யாகும். ஆதலால், பிறனது பொருளை அவனறி

தமிழ்ச் சங்கம்
நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத வகையினாலே வஞ்சித்துக் கொள்வோம் என்று நினையா திருப்பாயாக.

ஆடிமீ சுஉ

கள்ளாமை—Against Fraud.

களவினு லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும். —குறள்.

(க-ரை) களவு செய்தலினால் உண்டாகிய பொருளானது வளர்வதுபோலத் தோன்றி, தனது எல்லைபைக் கடந்து அழியும்.

ஆடிமீ சுஎ

கள்ளாமை—Against Fraud.

கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளா துபுத்தே ளுலகு. —குறள்.

(க—ரை) களவிலே பழகுவோர்க்கு தம்மின் வேறல்லாத உடம்பும் தவறும். அதாவது நரகம் அடைவர். களவிலே பழகாதவர்க்கு மெடுத்தூரமாகிய தேவர் உலகமும் தவறாது.

ஆடிமீ நுஉ

கற்பு—Chastity.

கொண்ட கணவன் குரூபியே யானாலும்
பண்டுதான் செய்த பலனெனவே—கண்டுகொண்டு
குற்றமென வெண்ணிமனங் கோணு தவன்பணியைப்
பற்றிமிகச் செய்வார் பரிந்து. —தனிப்பாடல்.

(க—ரை) தான் விவாகம் பண்ணிக்கொண்டகணவன் மிகக் கொடியவனானாலும் அதுதான் முற்பிறவியிற் செய்த வினைப் பலன் என்று தெரிந்து கொண்டு குற்றம் என்று எண்ணி மனம் கோணுமல் அவனுக்கு வேண்டிய பணிவிடைகளை அன்போடு குறைவுபடாமற் செய்பவர்களே கற்புடைய ஸ்திரீகளாவர்.

ஆடிமீ சுஉ

கற்பு—Chastity.

குடநீரட் டண்ணு மிடுக்கட் பொழுதுங்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையாருக் கொள்ளு படமொழி
மாதர் மனமாட்சி யாள். —நாலடியார்.

(க—ரை) குடத்து நீரையே யன்றி உண்பதற்கு உரிய பொருள் ஒன்றும் அகப்படாத வறுமைத் துன்பம்வந்த காலத்தும், கடலின் நீரை வற்றும்படி உண்ணத்தக்க மிகப் பெருங் கூட்டமான சுற்றத்தார் வந்தாலும் தனது கடமையாகிய குணங்களையே ஒழுக்க நெறியாகக் கொள்ளுகின்ற இரசமான இன் சொற்களையுடைய பெண்ணே இல்லற வாழ்க்கைக்குத் தக்க பெருமையுடையவளாவாள்.

ஆடிமீ எஉ

கற்பு—Chastity.

எறியெனி றெதிர்நிற்பாள் கூற்றஞ் சிறுகாலை
பட்டில் புகாதா ளரும்பிணி—யட்டதினை
யுண்டி யுதவாதா ளில்வாழ்பே யிம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை. —நாலடியார்.

(க—ரை) தனது கணவன் கோபம் கொண்டபோது என்னை அடி என்று சொல்லி எதிர்த்து நிற்பவள் அவனுக்கு இறுதியைத் தரும் இயமன்போல்வாள். உதயகாலத்தில் மடைப் பள்ளியிற் சமையல் செய்ய துணையாதவள் மருந்தினால் தனித்தற்கு முடியாத நோய்போல்வாள். தான் சமைத்த பொருள்களை உணவாகக் கணவனுக்கு இடாமல் தானே உண்பவள் வீட்டில் வசிக்கின்ற பேய்போல்வாள். இந்த மூவரும் தம்மைக் கொண்ட கணவரை உயிர் வாங்கும் ஆயுதம் போன்றவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிமீ அஉ

கற்பு—Chastity.

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. —குறள்.

(க—ரை) தெய்வத்தை வணங்காளாகித் தனது தெய்வமாகிய கணவனைத் தொழுது நித்திரை விட்டு எழுந்திருப்பவள் பெய்யென்று சொல்ல மழையானது பெய்யும்.

ஆடிமீ கூஉ

கற்பு— Chastity.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுங்
திண்மை யுண்டாகப் பெறின். —குறள்.

(க-ரை) கற்பென்னுங் கலங்கா நிலையை அவளிடத்தே உண்டாயிருக்கப் பெற்றால், ஒருவன் பெறுதற்குரிய பொருள்களுள் மிகையாளினும் உயர்வாகிய பொருள்கள் எவை இருக்கின்றன?

ஆடிமீ கஅஉ

கல்வி—Education.

நில்லா நிலைமை நிலைபாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்க
ளெல்லா வுயிர்க்கு மிறைவனே யாயினுங்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவெண் ணுதே.

—திருமந்திரம்.

(க-ரை) நிலையற்றதாகிய வாழ்வை நிலையுள்ள தென்றும் நிலையற்றதாகிய உடம்பை நிலையுள்ள தென்றும், நெஞ்சத்தில் எண்ணுகிறமனிதர்களே! உலகத்தில் சிருட்டிக்கப்பட்ட எல்லா உயிர்களுக்கும் ஈசுவரன் இருக்கிறாயினும் கல்வி இல்லாதவருடைய இருதயத்திலே அவர் தோற்றப்படுகிறதில்லை.

ஆடிமீ கஉஉ

கல்வி—Education.

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றெவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணெக்குமோ காண்.

—நன்னெறி.

(க—ரை) இலக்குமியைப் போன்றவளே! பொன்னாலாகிய ஆபரணத்தை அணியும் அரசர் ஆபரணங்களை அணியாத பெரிய கல்விப்பொருள் நிலைபெற்ற விவேகிகளுக்கு ஒப்பாவர். விளங்குகின்ற ஆபரணத்தை அணிந்து கொள்கின்ற கைகால் முதலிய மற்றை அவயவங்களானவை அதனை அணியாமற்பார்க்கின்ற கண்களுக்கு ஒப்பாகுமோ ஒப்பாகா. அதாவது வித்வான்களுக்கு அரசரும் ஒப்பாகார்.

ஆடிமீ கஉஉ

கல்வி— Education.

கலையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அலையல்ல நல்ல மரங்கள்—சலமகிலே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். —மூதுரை.

(க-ரை) கல்வியில்லாதவனும் ஒருவருடைய குறிப்பை அறியாதவனும் ஆறறிவுடைய மனிதராய்ப் பிறந்தாராயினும் ஓரறிவுடைய மரத்தினும் கடையாவர்.

ஆடிமீ கஙஉ

கல்வி—Education.

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்றேச மல்லாற் சிறப்பில்லே கற்றேற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு.

—மூதுரை.

(க-ரை) அரசனேயும் குற்றந்தீரக்கற்ற வித்துவானேயும் ஆராய்ந்து பார்த்தால், அரசனிலும் வித்துவானே சிறப்பை உடையவனுவான். அரசனுக்கு அவனுடைய தேசத்தில் அல்லாமல் அன்னிய தேசங்களிலே சிறப்பு இல்லே வித்துவானுக்கு அவன்போன தேசங்களெல்லாவற்றினும் சிறப்பு உண்டாகும்.

——

ஆடிமீ கசவ

கல்வி—Education.

குஞ்சி யழகுங் கோடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்பா மென்னு நலவு நிலேமையாற்
கல்வி யழகே யழகு. —நாலடியார்.

(க-ரை) மயிர்முடியின் அழகும், மடிப்புள்ள ஆடையினது கரையின் அழகும், கலவைப் பூச்சினது அழகும் அழகாக மாட்டா. மனததில் யாம் நற்குணமுடையோமென்று கோணுதலில்லாத தன்மையால் படிப்பினுல் உண்டாகும் அழகே அழகாம்.

———

ஆடிமீ கடுவ

கல்வி—Education.

இம்மை பயக்குமா லீயக் குறைவின்றூற்
றம்மை விளக்குமாற் ருழுளாக் கேடின்ரு
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து.

—நாலடியார்.

(க-ரை) கல்வியானது இப்பிறப்பின் பயனுகிய தத்துவ ஞானத்தைத் தரும். பிறர்க்குக கொடுக்கச் செல்வம்போற் குறைவுபடாது. தம்மைப்புகழால் விளங்கச்செய்யும். தாங்கள்

உயிருள்ளவராக வாழுமளவும் அழிதலில்லே. ஆதலால் கல்வி போல் அறியாமையாகிய நோயை யொழிக்கின்ற ஒரு மருந்தை எத்தன்மையான உலகத்திலும் காண்கின்றுமில்லே.

———

ஆடிமீ கசுவ

கல்வி—Education.

களர்நிலத்துப் பிறந்த வுப்பினேச் சான்ரோர்
விளேநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந்தோரைக்
தலேநிலத்து வைக்கப்படும். —நாலடியார்.

(க-ரை) இழிவாகிய உவர் நிலத்தில் உண்டான உப்பைப் பெரியோர், விளேகின்ற நல்ல நிலத்திலேதோன்றிய நெல்லினுஞ் சிறந்ததாகக் கொள்வார்கள். அதபோலவே இழிவான சாதியிற் பிறந்தவர்களானுலும் நூல்களேக் கற்று அவற்றின் பொருளே அறிந்தவர்களே மேன்மையான இடத்தில் வைத்துக் கௌரவிக்க வேண்டும்.

———

ஆடிமீ களவ

கல்வி—Education.

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலோன்
றுற்றழியும் கைகொடுக்குங் கல்வியினுங் கில்லே
சிற்றுயிர்க் குற்ற துணே.

—நீதிநெறி விளக்கம்.

(க-ரை) கல்வி தருமத்தையும், செல்வத்தையும் இன்பத்தையும், மூக்தியையும் கொடுக்கும் பிற இடங்களிலே கல்ல கீர்த்தியையும் உண்டாக்கும். எதாவது வில்லங்கங்கள் உண்டாதருணத்திலும் உதவியாய் இருக்கும். ஆனபடியால் மானிடர்க்குக் கல்வியைப் போற் சிறந்தது வேறு ஒன்றும் இல்லே.

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிமீ கஅஉ

கல்வி—Education.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர். —குறள்.

(க-ரை) கற்றவரே கண்களுடையவர் என்று உயர்த்திச் சொல்லப்படுவர். கல்லாதவர் முகத்தினிடத்து இரண்டு புண் களையுடையவர்.

———

ஆடிமீ ககூஉ

கல்வி—Education.

உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றூர்
கடையரே கல்லா தவர். —குறள்.

(க-ரை செல்வர்முன்னேவறியவர்போல் ஏக்கற்று நின்றும் கற்றவர் உயர்ந்தவராவார். கல்லாதவர், எப்பொழுதும் இழிந் தவரே யாவர்.

———

ஆடிமீ உ0உ

கல்வி—Education.

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர் செறின்வவ்வா
ரெச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற —நாலடியார்.

(க-ரை) கல்வி வைக்கப்பட்ட இடத்தில் பிறரால் கவரப் படமாட்டா. கொள்பவர் தக்கவராகக் கிடைத்து அவர்க்குக் கொடுத்தாற் குறைதல் இல்லை. மிகுதியான சிறப்பினாலே அர சர்கள் பொறுமை காரணமாகக் கோபித்தாலும் அபகரிக்க மாட்டார்கள். ஆதலால் ஒருவன், ஆக்கமென்றதனது பிள்ளை களுக்குச் சேர்த்து வைக்கத்தக்கவை கல்விப் பொருளேயாம்; செல்வம் பொருள் அல்ல.

———

ஆடிமீ உகஉ

கல்லாமை—Illiteracy.

நல்லார்கட் பட்டவறுமையி னின்னுதே
கல்லார்கட் பட்ட திரு. —குறள்.

(க-ரை) கல்லாதவரிடத்து உண்டாகிய செல்வமானது கற்றவரிடத்து உண்டாகிய வறுமையினும் துன்பம் செய்வதே யாகும்.

———

ஆடிமீ உஉஉ

கல்லாமை—Illiteracy.

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்தங்
கற்றா ரனைத்திலர் பாடு

(க-ரை) கல்லாதவர்கள் உயர்ந்த சாதியிலே பிறந்தாரா யினுந் தாழ்ந்த சாதியிலே பிறந்திருந்தும் கற்றவரது பெருமை போல் பெருமை இல்லாதவர்கள் ஆவார்கள்.

———

ஆடிமீ உஙஉ

சிற்றினம் சேர்தல்—Low Society.

ஆயிரஞ் சொன்னலு மறியாத வஞ்ச நெஞ்சப்
பேயரொடு கூடிற் பிழைகாண் பராபரமே.

-தாயுமானவர்.

(க-ரை) எவ்விதமாகச் சொன்னபோதிலும், அறியாமை யுள்ள வஞ்சக நெஞ்சுடைய பேயர்களோடு சகவாசம் கொள் வது எப்பொழுதும் கேடாய் முடியும்.

———

ஆடிமீ உசஉ

சிற்றினம் சேர்தல்—Low Society.

மனத்தான் மறுவில ரேனுந் தாஞ் சேர்ந்த
வினத்தா லிகழப்படுவர்—புனத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறிகமழ் சந்தனமும் வேங்கையும வேமே
யெறிபுனற் தீப்பட்டக் கால்' —நாலடியார்.

(க-ரை) மனிதர்கள் தம்மனத்திற் குற்றமில்லாதவர்களா யினும், தாங்கள் சேர்ந்த கூட்டத்தின் தீமையால் நிந்திக்கப் படுவார். அது எதுபோல எனின், வெட்டப்பட்ட மரச்செறி வில் நெருப்புப் பற்றினால் அக்காட்டி லுள்ள வாசனை வீசுகின்ற சந்தன மரமும் வேங்கை மரமும் வெந்துபோம்.

ஆடிமீ உருஉ

சிற்றினம் சேர்தல்—Low Society.

நிலகலத்தா னந்திய நெல்லே போற் றத்தங்
குலகலத்தா லாகுவர் சான்றோர்—கலகலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினஞ் சேரக் கெடும்.

—நாலடியார்.

(க-ரை) வீளை நிலத்தினது கல்ல வளத்தால் வளர்ந்த நெற்பயிர்போல, மனிதர்கள் தாங்கள் தாங்கள் சேர்கிற கூட்டத்தின் நன்மையால் மேன்மக்களாவர். மரக்கலத்தினது வலி மையைக் கடுங்காற்று நெருக்கலால் அக்கலம் கெடுவதுபோல ஒருவரது மேன்மை தீக்குணமுள்ள கூட்டத்தைச் சேர்தலி னால் அழியும்.

ஆடிமீ உசுஉ

சிற்றினம் சேர்தல்—Low Society.

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே-தீயார்
குணங்க ளுரைப்பதுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது. —மூதுரை.

(க-ரை) தீயவரைக் கண்களாலே காணுதலும் தீயதே தீயவருடைய பயன் இல்லாத சொல்லைக் காதுகளினாலே கேட்

குதலும் தீயதே. தீயவருடைய தீக்குணங்களை வாயினாலே பேசுதலும் தீயதே. அத்தீயவரோடு கூடியிருத்தலும் தீயதே.

ஆடிமீ உஎஉ

சிற்றினம் சேர்தல்—Low Society.

சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும.

—குறள்.

(க-ரை) பெரியோரின் இயல்பு சிறிய வினத்திற்கு அஞ்சும். சிறியோரின் இயல்பு சிறிய வினத்தைச் சுற்றமாகக் கொள்ளும்.

ஆடிமீ உஅஉ

சிற்றினம் சேர்தல்—Low Society.

மனத்தானு மாந்தர்க் குணர்ச்சி யினத்தானு
மின்ன னெனப்படுஞ் சொல்.

—குறள்.

(க-ரை) மனிதர்களுக்குப் பொது அறிவானது தம் மனத்தினாலே உண்டாகும. அதுபோல ஒருவன் சேர்ந்த இனத்தினாலே அவன் இன்னனென்று எண்ணப்படுவான்.

ஆடிமீ உகூஉ

நல்லினஞ் சேர்தல்—Good Society.

நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பது நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று.

—மூதுரை.

(க-ரை) நல்லாரைக் கண்களினாலே காணும் நல்லவருடைய பயன் நிறைந்த சொல்லைக் காதுகளினாலே கேட்டலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவருடைய நற்குணங்களை வாயினுலே பேசுதலும், அந்த நல்லவரோடு கூடி யிருத்தலும் நல்லது.

ஆடிமீ ஈ0ஆ

நல்லினஞ் சேர்தல்—Good Society.

அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி
நெறியல்ல செய்தொழுகி யவ்வு—நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயின் முருகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு.

—நாலடியார்,

(க-ரை) அறிவுடைய ராகாதிருந்த இளம் பிராயத்திலே, அடக்கமில்லாத அயோக்கியர்களோடு சேர்ந்து சன்மார்க்கமல்லாத பாவ காரியங்களைச் செய்து நடந்த குற்றங்களும், நல்வழியை உணர்ந்த நல்ல பெரியோர்களைச் சேர்தலால், புல்லைச் சேர்ந்திருந்த பனித்துளி வெயில் மிகுதலால் விட்டாற்போல அழியும்.

ஆடிமீ ஈகஉ

நல்லினஞ் சேர்தல்—Good Society.

பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றுதா—தேரிற்
சிறியார் சிறுமையுந் தோன்றுதா நல்ல
பெரியார் பெருமைபைச் சார்ந்து.

—காலடியார்.

(க-ரை) பாலுடனே கலந்த நீரானது அந்தப்பாலாய்த் தோன்றுமே யல்லாது, நீராய்த் தன் நிறம் விளங்கிக் காணப்படாது. அதுபோல ஆராயுமிடத்து நற்குணமுடைய பெரியோர்களது மகிமையைச் சேர்தலினுல் அற்பர்களது கீழ்மைக் குணமும் வெளிப்படாது.

ஆவணிமீ சஉ

நல்லினஞ் சேர்தல்—Good Society.

நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு

—குறள்.

(க-ரை) நீரானது தான் சேர்ந்தநிலத்தினது இயல்பினுலே திரிந்து தனது தன்மை வேறுபட்டு அந்நிலத்தினது தன்மையதாகும். அதுபோல மனிதர்களது அறிவானது தாம் சேர்ந்த இனத்தினது இயல்பினுலே தனது தன்மை வேறுபட்டு அவ்வினத்தினது தன்மையாகும்.

ஆவணிமீ உஉ

குடிமை—Nobility.

கள்ளார்கள் ஞண்ணர் கடிவ கடிந்தொரீஇ
யெள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்-தள்ளியும்
வாயிற்பொய் கூறார் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்.

—காலடியார்.

(க-ரை) குற்றமற்ற அறிவுடைய மேண்மக்கள் பிறர் பொருளைக் களவு செய்ய மாட்டார். மதுபானஞ் செய்யார். நூல்களால் விலக்கப்பட்ட தீச்செயல்களை வெறுத்துச் செய்யாதொழிவர். பிறரை அவமதித்து நிந்தித்துப் பேசார். மறந்தும் வாயினுற் பொய் சொல்லார். தமக்கு வறுமை முதலியவற்றுல் தளர்ச்சி நேர்ந்த காலத்தும் வருத்தமடையார்.

ஆவணிமீ ஈஉ

குடிமை—Nobility.

கடித்துக் கருப்பினைக் கண்டகர நூறி
யிடித்து நீர்கொள்ளினு மின்சுவைத்தே யாகும்
வடுபட வைகுறைத்துக் கண்ணுங் குடிப்பிறந்தார்
கூறார் தம் வாயிற் சிதைந்து.

—நாலடியார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) கரும்பை வாயாற் கடித்தும் கணுக்கள் கொருங் கும்படி ஆலையிற் போட்டுச் சிதைத்தும் உலக்கை கல்முதலிய வற்றால் கொருக்கியும் இரசதத்தைக் கொண்டாலும், அக்கருப் பஞ்சாறு இனிய உருசியை யுடையதேயாம். அதுபோலக் குற்றம் தோன்றும்படி தம்மைப்பிறர் திட்டிப்போன விடத்தும் உயர் குடியிற் பிறந்தவர்கள் தமது நல்ல நிலைமை கெட்டுத் தங்கள் வாயினால் தீய சொற்களைச் சொல்ல மாட்டார்கள்.

ஆவணிமீ சஉ

குடிமை—Nobility.

நலத்தின்க ணூரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்கணையப் படும். -குறள்.

(க-ரை) குலமுடையவனும் வருகின்ற வினிடத்தே அன் பில்லாமை உண்டாமாயின், உலகம் அம்மனிதனைக்குலப்பிறப்பு உடையவனே என்று சந்தேகப்படும்.

ஆவணிமீ நுஉ

மானம்—Honour.

இறந்தவரினு மல்லா லிடுக்கலெனுன் முறினும் தம்பாற்
பிறந்திடு மானந் தன்னை விடுவரோ பெரிய ரானோர்
சிறந்திடு மிரண்டு நாளைச் செல்வத்தை விரும்பி யானுக்
குறந்திடேன் பிடித்தகொள்கைகூரனென்றொருபோர்பெற்றேன்.
-கந்தபுராணம்.

(க-ரை) இறக்க நேரிட்டாலும், அல்லது இடுக்கண்நேரிட் டாலும் பெரியோர் தமக்குண்டான மானத்தை விடவே மாட் டார். அதுபோற் சூரன் என்று பெயர்படைத்தான் நிலையற்ற செல்வத்தை விரும்பி, நான் பிடித்த கொள்கையை விட மாட்டேன்.

ஆவணி மீ சுஉ

மானம்—Honour.

திருமகளை யாகத் திறனிலார் செய்யும்
பெருமிதங் கண்டக் கடைத்து-மெரிமண்டிக்
கானந் தலைப்பட்ட தீப்போற் கனலுமே
மானமுடையார் மனம். —நாலடியார்.

(க-ரை) தம்மிடத்திற் செல்வம் வலிமையுடையதாக அச் செருக்கினால், தக்க நற்குணமில்லாதவர்கள் செய்கின்ற வரம்பு கடந்த நடத்தையைப் பார்த்தபொழுது, மானத்தை உடை யவர்களுடைய நெஞ்சம், காட்டிற் பற்றிபெழுந்த அக்கினிச் சுவாலைபோலக் கொதிக்கும்.

ஆவணிமீ எஉ

மானம்—Honour.

என்பா யுகினு மியல்பிலார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தம்முடையார்-தம்பா
டுரையாமை முன்னுணரு மொண்மை யுடையார்க்
குரையாரோ தாமுற்ற நோய். -நாலடியார்.

(க-ரை) தமது மானத்தைத் தாம் காக்கும் இயல்புடைய வர், பொருள் இல்லாமையால் உணவு கிடையாமல் தம்உடம்பு எலும்பு மாத்திரமாகிச் சிதைவதா யிருந்தாலும் நற்குணமில் லாத செல்வரது பினனே போய்த் தமது வருத்தத்தைக் கூறார். தாம் சொல்லாமலிருக்கையிலே குறிப்பினால் அறிந்து உதவத் தக்க கூரறிவுடையவர்களுக்குத் தாம் அடைந்த துன்பத்தைக் கூறுவர்.

ஆவணிமீ அஉ

மானம்—Honour.

உற்றவிடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ—கற்றாண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கிற்
குளர்ந்து வளையுமோ தான்். —மூதுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) கல்லுக் கம்பமானது பெரிய பாரத்தைத் தாங் கினற் பிளந்து ஒடிவதல்லாமல், தான் தளர்ந்து வளையாது. அதுபோலத் தமக்கு ஆபத்து வந்தவிடத்தே தம்முயிரைவிடும் குணமுடையவர் தம்பகைவரைக் கண்டால் வணங்கார்.

ஆவணிமீ கூஉ

மானம்—Honour.

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை—சீச்சி
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர் விடுகை சால வுறும். —நல்வழி.

(க-ரை) ஆராய்ந்து சொல்லுமிடத்துப் பிச்சை எடுத்து உண்டலினும் இழிவிற் பெரியகுடிவாழ்க்கையாவது, பலவாகிய இச்சைகளைப் பேசி ஒருவரை நெருக்கி வாங்கி உண்ணுதலாம். இது என்ன செய்கை! வயிற்றை வளர்த்தற் பொருட்டு மானங் கடாமல் உயிரை விடுதலே மிகப் பொருந்தும்.

ஆவணிமீ கoஉ

மானம்—Honour.

மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்ன
ருயிர் நீப்பர் மானம் வரின். -குறள்.

(க-ரை) தன் மயிர் நிரளில் ஒரு மயிர் தானும் நீங்கினும் உயிர் வாழாத கவரிமானுக் கொப்பானவர் தம் மானம் கெட வரின் தம் உயிரை விட்டு விடுவர்.

ஆவணிமீ ககஉ

மானம்—Honour.

இன்றி யமையாச் சிறம்பின வாயினுங்
குன்ற வருப விடல். -குறள்.

(க-ரை) மிகவும் சிறப்புடையவை யாயினும் தம் குடியைத் தாழ்த்தத் தக்கதான செயல்களை ஒருவன் விடக்கடவன்.

ஆவணிமீ கஉஉ

புறங்கூறல்—Slander.

உண்டு குணமிங் ஒருவர்க் கெனினுங் கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டு மலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி. —நன்னெறி.

(க-ரை) இவ்வுலகத்திலே ஒருவர் நற்குணங்கள் நிறைந்த வராய் இருந்தாலும், கீழ்மக்கள் அவருடைய குற்றங்களையே எடுத்துப் பேசுவர். செழுமையாகிய சோலையிடைத்தே யுள்ள பூவாகிய மெத்தையைவண்டுகள் விரும்பும். வேப்பம்பழமன்றே காக்கைகள் விரும்பும் பழம்?

ஆவணிமீ கஉஉ

புறங்கூறல்—Slander.

கணமலை நண்ணுட கண்ணின் றெருவர்
குணனேயுங் கூறற் கரிதாற்-குணனழுங்கக்
குற்றமுழை நின்று கூறுஞ்சிறியவர்கட்
கெற்று லியன்றதோ நா. —நாலடியார்.

(க-ரை) கூட்டமாகிய மலைகளையுடைய நல்ல நாட்டின் அரசனே! எதிரில் இல்லாமல் புறத்தில் இருந்து புறரொருவ ரது நற்குணத்தையும் எடுத்துச் சொல்வதற்கு நா வெழுதல் அருமையாய் இருக்கும். அவ்வாறு இருக்க ஒருவரது எதிரில் நின்றுகொண்டு அவரது நற்குணங்கள் அழியும்படி குற்றங் களையே எடுத்துப்பலர் அறியக்கூறுகின்ற அற்பப் புத்தியை யுடைய கீழோர்க்கு நாக்கு தசையினல் அல்லாமல் எப்பொரு ளாற் செய்யப்பட்டதோ அறியோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணிமீ கசஉ

புறங்கூறல்—Slander.

அறங்கூ றனல்ல செயினு மொருவன்
புறங்கூ றனென்ற லினிது. —குறள்.

(க-ரை) ஒருவன் தருமங்களைச் செய்யாமல், பாவங்களையே செய்யினும், பிறனைக் காணுதவிடத்தே இகழ்ந்து பேசான் என்று உலகத்தோராலே சொல்லப்படுதல் நல்லது.

ஆவணிமீ கடுஉ

புறங்கூறல்—Slander.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூ றுமாக்கந் தரும். -குறள்.

(க-ரை) பிறனைக் காணுத விடத்தே இகழ்ந்து, அவனைப் புகழ்ந்து ஒருவன் உயிர் வாழ்தலினும் அது செய்யாமல் உயிர் விடுதல் அவனுக்கு தரும நூல்களிலே சொல்லப்பட்ட பயனைக்கொடுக்கும்.

ஆவணிமீ கசஉ

வெஃகல்—Excessive desire

நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும். -குறள்.

(க—ரை) பிறர்குரிய பொருளைக் கொள்ளுதல் நமக்கு அறம் அல்லவென்றும், நடுவு நிலைமை யில்லாமல் அவரது நல்ல பொருளை அபகரித்தற்கு விரும்பினால், அவ்விருப்பம் அவன் குடியைக் கெடுத்து பல குற்றங்களையும் அப்போதே அவனுக்குக் கொடுக்கும்.

ஆவணிமீ கஎஉ

வெஃகல்—Excessive desire.

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். -குறள்.

(க-ரை) குறைந்து போகும் தன்மையையுடைய செல்வம் குறையா திருத்தற்குக் காரணம் எதுவென்றால், அது பிறன் விரும்புகின்ற கைப்பொருளைத் தான் வேண்டாமையாம்.

ஆவணிமீ சஅஉ

வெஃகல்—Excessive desire.

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். —குறள்.

(க-ரை) ஒருவன் பொருளுக்குப் பிறன் உரியவனல்ல வென்றும், நடுவு நிலையல்லாமைக்கு அஞ்சுவோர், பிறர் பொருளை வௌவுதலினாலேதமக்கு வரும் பயனை விரும்பி, பழியினிடத்தே பொருந்தும் செயல்களை செய்வார்.

ஆவணிமீ கசஉ

வெகுளி—Anger.

நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோ—ரோர்த்ததனை
யுள்ளத்தா னுள்ளியுரைத் தூராயூர் கேட்பத்
தள்ளித் தூண் மூட்டுமாங் கீழ். —நாலடியார்.

(க—ரை) தமக்கு ஒப்பாகாதவர் அதாவது கீழ் மக்கள் எதிர்த்து, சொல்லத் தகுதியல்லாத சொற்களைச் சொன்னால், சிறந்த பெரியோர் மனம் புழுங்கி கோபியார். கீழ்மக்களோ வென்றால் அந்த நிந்தைச் சொல்லை மனத்தாற் சிந்தித்து ஆராய்ந்து ஊரிலுள்ளவ ரெல்லாரும் கேட்கும்படி பலரோடும் சொல்லி எழும்பிக் குதித்துத் தூணில் மூட்டிக்கொள்வர்.

ஆவணிமீ உ0உ

வெகுளி—Anger.

காவா தொருவன் றன்வாய் திறந்து சொல்லுஞ் சொ
லோவாதே தன்னைச் சுடுதலா லோவாதே

யாந்தமைந்த கேள்வி யறிவுடையா ரெஞ்ஞான்றுங்
காய்ந்தமைந்த சொல்லார் கருத்து. —ஔவையார்.

(ர-ரை) பிற னொருத்தன் தனது வாயைக் காத்துக்கொள் ளாமல் அதனைத் திறந்து கூறும் கடுஞ்சொல் தமக்குத் துன்பத் தைத் தருதலையே திருஷ்டாந்தமாகக் கொண்டு தாம் கூறும் கடுஞ்சொல்லும் இங்ஙனமே பிறரை வருத்து மென்றுணர்ந்து விவேகிகள் சினந்து பிறர் விஷயத்திற் கடுஞ் சொற்களைக்கூறார்.

ஆவணிமீ உகஉ

வெகுளி—Anger.

வெகுளியே யுயிர்க்கெலாம் விளைக்குந் தீவினை
வெகுளியே குணந்தவம் விரதமாய்க்குமால்
வெகுளியே யறிவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறொன் றில்லையால்.

—காஞ்சிப்புராணம்.

(க-ரை) கோபம் உயிர்எல்லாவற்றிற்கும் கெடுதி செய்யும் குணத்தையும் தவத்தையும் விரதத்தையும் கெடுக்கும், அறி வைக் குறைக்கும். வெண்மையாகிய கோபத்தைப்போல்உலகத் தில்கொடிய பகை உள்ளது வேறு ஒன்றும் இல்லை.

ஆவணிமீ உஉஉ

வெகுளி—Anger.

இளையா னடக்க மடக்கங் கிளைபொரு
ளில்லான் கொடையே கொடைப்பய-னெல்லா
மொறுக்கு மதுகை யுரனுடையாளன்
பொறுக்கும் பொறையே பெரை. —ஔவையார்.

(க-ரை) வயதில் முதிர்ந்தவன் வலிமையில்லாமையால் அடங்கியிருத்தாலும் அளவிறந்த செல்வமுடையவன் தனது செல்வத்தின் மிகச்சிறிதொரு பகுதியைப் பிறர்க்கு கொடுத்த லும், பிறர்மேற் கோபங்கொண்டு அவரை வருத்துதற்குவேண் டும் வல்லமை இல்லாதவன் பொறுத்து இருத்தலும் இயல்பே

ஆகலால் அவை விசேஷ குணமென்று கொண்டாடத் தக்கன வல்ல. பொறிகளை வெல்லுதற்கரிய இளமைப்பருவ முடைய வன் கோபியாதிருத்தலும், எவரையும் அழிக்கவல்ல தபோபல முடையவர் கோபம் கொள்ளா தொழிதலும் அரிது.

ஆவணிமீ உஙஉ

வெகுளி—Anger.

மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனன் வரும். —குறள்.

(க-ரை) கோபத்தால் பாவம் வருதலால், கோபம் கொள் ளாதிருக்கக் கடவன்.

ஆவணிமீ உசஉ

வெகுளி- Anger.

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென். —குறள்.

(க-ரை) தன் கோபத்தை அது பலிக்கு மிடத்து எழும் பாமல் தடுப்பவனை அருளுஞலை தடுப்பவனுவான். பலியாத விடத்து அதனைத்தடுத்தால் என்ன தடுக்கா விட்டால் என்ன பயனில்லை.

ஆவணிமீ உஙஉ

உபகாரம்—Service.

நன்றி யொருவர்க்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொலென வேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத
தலையாலே தான் தருதலால். —மூதுரை.

(க-ரை) நிலைபெற்றுச் சேராமல் வளர்கின்ற தென்னைம ரமானது தன் அடியினுலை உண்டவெறு நீரைத் தன் முடியி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞலே மதுரமாகிய இளநீராக்கித் தானே தருதலினுல் நற்குண மூடைய ஒருவனுக்கு ஒரு உபகாரத்தைத செய்தால் அந்த உபகாரத்தை அவன் எப்பொழுது செய்வானே என்று சந்தேகிக்க வேண்டுவதில்லை

ஆவணிமீ உகூ

உபகாரம்—Service.

கல்லா ரொருவற்குச் செய்த வுபகாரங்
கன்மே லெழுத்தப்போற் காணுமே—யல்லாத
ரமிலா நெஞ்சத்தார்க் கிந்த வுபகார
நீர்மே லெழுத்திற்கு நேர். -மூதுரை.

(க-ரை) நற்குண மூடையவராகிய ஒருவர்க்குச் செய்த உபகாரமானது கல்லின்மேல் எழுதப்பட்ட எழுத்தைப்போல என்றும் நிலைபெற்று விளங்கும். மற்ற அன்பில்லாத மனமுடையவர்க்குச் செய்த உபகாரமானதுசலத்தின்மேல் எழுதப்பட்ட எழுத்துப்போல் அப்பொழுதே அழிந்து விடும்.

ஆவணிமீ உஎஉ

உபகாரம்—Service.

வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானற்போல்—டாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரங்
கல்லின் மேலிட்ட கலம். -மூதுரை.

(க-ரை) வரிகளையுடைய வேங்கைப்புலிக்கு நஞ்சுநோயைத் தீர்த்த விஷவைத்தியன் அப்பொழுதே அப்புலிக்கு இரையானற்போலத் தான் அழியுந்தன்மையை ஆலோசித்து அறியாமல் அற்ப புத்தியையுடையவருக்குச் செய்த உபகாரமும், கல்லின் மேலே போடப்பட்ட மட்பாத்திரம் போல அழிந்துபோம்.

ஆவணிமீ உஅஉ

உபகாரம்—Service.

தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறாஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்-திங்கள்
கறையிருளை நீக்கக் கருதாதலகில்
நிறையிருளை நீக்குமே னன்று. -நன்னெறி.

(க-ரை) மேலோர் தமது குறை நீங்குதலே நினையாராகி பிறருக்கு வந்த வெவ்விய குறையை மனந்தளர்ந்து நீக்குவார். சந்திரனுவன் தனது களங்கமாகிய இருளை நீக்குதற்கு நினையாமல் ஆகாயத்திலே நின்று உலகத்து நிறைந்த இருளை நீக்குவான்.

ஆவணிமீ உகஉ

செய்ந்நன்றி யறிதல்—Gratitude.

ஒன்றெரு பயன்றரினு யுதவினோர் மனங்
கன்றிட வொருவினை கருதிச் செய்வரெற்
புன்றொழிலவர்க்கு முன்புரிந்தநன்றியே
கொன்றிடு மல்லது கூற்றும் வேண்டுமோ.
-கந்தபுராணம்.

(க-ரை) எவனுவது தனக்குப் பயன்படக்கூடிய ஒரு உபகாரத்தைச் செய்தவருடைய மனம் வருத்தப்படும்படியாக யாதொரு தீவினையைச் செய்வானேல் அப்படிப்பட்டவனுக்கு, முன் அவனுக்குச் செய்யப்பட்ட உபகாரமே இயமனுக வந்து அவனைக் கொல்லும். அவனுக்கு வேறு இயமன் வேண்டியதில்லை.

ஆவணிமீ கூ0உ

செய்ந் நன்றி யறிதல்—Gratitude.

அரவமல்கிய பதாகையாய் மதியமைச்சரா யரசழிப்பினுங்
குரவர் நல்லுரை மறுக்கினும் பிறர்புரிந்த நன்றியதுகொல்லினு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொருவர் வாழ் மணையிலுண்டு பின்னுமவருட னழன்று பொர
(வுண்ணினு
மிரவியுள்ளளவு மதியமுள்ளளவு மிவர்களே நரகிலெய்துவார்.
—வில்லிபாரதம்.

(க-ரை) அரவக்கொடியுடைய அறிவுவாய்ந்த அரசாளும் அரசராயினும், பெரியாருடைய சற்போதனைகளை மறுக்கிறவர் களும், மற்றவர்கள் செய்த செய்ந்நன்றியை மறக்கிறவர்களும், ஒருவருடைய இல்லத்திற் சென்று அவரிடம்அன்னத்தையுண்டு பின்பு அவருடன் கோபித்துச் சண்டையிடுவோரும் சூரியர் சந்திரர் உள்ளவரைக்கும் கொடிய நரகத்துக்கு ஆளாவார்.

ஆவணிமீ கூகஉ

செய்ந்நன்றி யறிதல்—Gratitude.

தினையனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டாற்
பனையனைத்தா யுள்ளுவர் சான்றோர்-பனையனைத்
தென்றாலுஞ் செயினு மிலங்கருவி நன்னுட
நன்றில நன்றறியார் மாட்டு. -நாலடியார்.

(க-ரை) விளங்குகிற மலையருவிகளையுடைய சிறந்த பாண் டியநாட்டையுடைய அரசனே! தினையென்னும் சிறிய தானி யத்தின் அளவேயாயினும் ஒருவன்செய்த உபகாரத்தைத் தாம் அனுபவித்தால், அதனைப் பெரியோர் பனைமரத்தவ்வளவு பெரி தான உபகாரத்தைச் செய்தாலும், செய்ந்நன்றி யறியாதவர் களிடத்தில் அவ்வுபகாரங்கள் சிறப்பில்லாதனவாம்.

புரட்டாசிமீ கூ

செய்ந் நன்றி யறிதல்—Gratitude.

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. -குறள்.

(க-ரை) தனக்குமுன் ஒரு உதவியும் செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு ஈடாக மண்ணுலகத் தையும் விண்ணுலகத்தையும் கொடுத்தாலும் ஒத்தல் அருமை.

புரட்டாசிமீ உ

செய்ந் நன்றி யறிதல்—Gratitude.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. -குறள்.

(க-ரை) ஒருவன் முன்செய்த நன்மையை மறந்துவிடுவது தருமமன்று. அவன் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது தருமமாம்.

புரட்டாசிமீ கூஉ

செய்ந்நன்றி யறிதல்—Gratitude.

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. -குறள்.

(க-ரை) எவ்வகைத் தருமங்களை அழித்தவர்களுக்கும் ஈடேறும வழியுண்டாம். செய்ந்நன்றியை மறந்தவர்களுக்கு ஈடேறும் வழியில்லை.

புரட்டாசிமீ சஉ

விருந்தோம்பல்—Hospitality.

வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் லின்று. -குறள்.

(க-ரை) தன்னை நோக்கித்தினந்தினம்வரும் விருந்தினரைக் காப்பாற்றுபவனுடைய இல்வாழ்க்கை யானது ஒருபொழுதும் வறுமையினுற் குறைவுபடாது.

புரட்டாசிமீ டுஉ

விருந்தோம்பல்—Hospitality.

அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில். -குறள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) முகமினியனுய்த் தகுந்த விருந்தினரைக் காப்ப வனது வீட்டினிடத்தே திருமாதானவள் மனமகிழ்ந்துவாழ்ந்து கொண்டிருப்பாள்.

புரட்டாசிமீ கூ

விருந்தோம்பல்—Hospitality.

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு. —குறள்.

(க-ரை) தன்னிடத்திலே வந்த விருந்தை உபசரித்துப்பின் வரும் விருந்தை எதிர்நோக்கித் தான் அதனோடு உண்ணவிருப் பவன் மறுபிறப்பில் தேவனுய் வானிலுள்ளவருக்கு நல்லவிருந் தாவான்.

புரட்டாசிமீ எ

விருந்தோம்பல்—Hospitality.

மாதர்மென் முல்லையின்ற வான்முகை யனைய மூரல்
கோதறு கருணை நீபால் கொழுங்கனி யிவற்றினேடும்
ஆதலர் யாவரென்ன வதிர்குரன் முரசிற் சாற்றி
வேதியர்க் கருத்திப் பின்னர் விருந்தொடு நுகர்வர்மாதோ
—கைடதம்.

(க-ரை) யாசகர் யாவரென்ன அதிர்கின்றஓசையையுடைய மூரசினுலே வினவி வருவித்துச் சோறும் குற்றமற்ற பொறிக் கறியும், இதமிப்பாகிய பாலும், செழிய பழமும் ஆகிய இவற் றோடு மற்ற மற்றைய உணவுகளையும், அந்தணருக்கு முன்னே உண்பித்து பின் தாமும் சுற்றத்தவரும் விருந்தினரும் உண் பார்கள்.

புரட்டாசிமீ அ

சூது—Gambling.

அடியுமாண்மையும்வலிமையுஞ்சேனையுமழகும்வென்றியுந்தத்தங்
குடியுமானமுஞ்செல்வமும்பெருமையுங்குலமுமின்பமுந்தேசும்

படியுமாமறை யொழுக்கமும்புகழுமுன்பயின்ற கல்வியுஞ்சேர
மடியுமான்மதியுணர்ந்தயர்சூதினைமேல்வைப்பரோமனமையார்
—விதிபாரதம்.

(க-ரை) வமிசவழி, ஆண்மை, வலிமை, சேனை, அழகு, வெற்றி, குடிமை, மானம், செல்வம், பெருமை, குலம், இன்பம் தேசு, நல்லொழுக்கம், புகழ், கல்வியாகிய இவைகளெல்லாம் சூதினுல் ஒருங்கே கெட்டுப்போமாகையால் அறிவுடையவர்கள் சூது விளையாடலை விரும்பார்.

புரட்டாசிமீ கூ

சூது—Gambling.

சிலநற் றருமமெய் சிதைக்குந் தெண்டிரை
வேலைமூற் றிருநிலக் கிழமை வீழ்த்திடு
மாலுறத் திடுங்கவ றுடன் மன்னகேள்
கோலிழுக் கரசர்தங் கொள்கைத் தென்பலே.
—கைடதம்.

(க-ரை) அரசனே கேள்! சூதாடலானது ஒழுக்கத்தையும் நல்ல தருமத்தையும் சத்தியத்தையும் கெடுக்கும். தெள்ளிய அலைகளையுடைய கடலினுல் சூழப்பட்ட பெருமை பொருந்திய அரசாட்சியைத் தள்ளிவிடும். மயக்கம்செய்விக்கும். சூதாடுதல் கொடுங்கோலச் செலுத்துகிற அரசர்களது கோட்பாட்டை யுடையதென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

புரட்டாசிமீ கூ

சூது—Gambling.

ஐயநீ யாடுதற் கமைந்த சூதமற்
றெய்துதல் குரவினுக் கியைந்த தூதுவெம்
பொய்யினுக் கருந்துணை புன்மைக் கின்றதாய்
மெய்யினுக் குறுபகை யென்பர் மேலையோர்.
—கைடதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) ஐயனே! நீ ஆடுகிறதற்குச் சம்மதித்த சூதானது தானே வருதற்குரிய தரித்திரத்திற்குநல்லதூதனும். வெவ்விய பொய்க்கு நல்லசகோதரமாகும். கீழ்தொழிலுக்குப் பெற்ற தாயாகும். சத்தியத்திற்கு மிகுந்த பகையாகுமென்று சொல்லுவார்கள் பெரியோர்கள்.

புரட்டாசிமீ ககஉ

சூது—Gambling.

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன்றில். —குறள்.

(க-ரை) முன்னில்லாத துன்பங்கள் பலவும்செய்து உள்ள புகழையும் கெடுக்கும் சூதுபோல் வறுமையைக் கொடுக்க வல்லது வேறொன்று மில்லை.

புரட்டாசிமீ கஉஉ

சூது—Gambling.

அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட்டார். -குறள்.

(க-ரை) தனது பெயர் சொல்லல் மங்கலமல்லாமையாற் சூது என்று வேறுபெயர் சொல்லப்படுகிறமூதேவியால் விழுங்கப்பட்டவர் இம்மையிலேவயிறுநிறையப் பெறார். மறுமையிலே நரகத்துன்பம் அனுபவிப்பர்.

புரட்டாசிமீ கஙஉ

சூது—Gambling.

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. -குறள்.

(க-ரை) தான் வெல்லும் வலிமையுடையவனுயினும் சூதாடுதலை விரும்பாதிருக்கக் கடவன். வென்றபொருளும்தூண்டில் இரும்பை மீன் விழுங்கியதுபோலும்.

புரட்டாசிமீ சசஉ

வஞ்சனை—Deceit.

நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறஞ்சிடக்கு நீர்ப்பாம்பு—நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத்தவர். —மூதுரை.

(க-ரை) நல்லபாம்பு தான் விஷமுடையதா யிருத்தலை அறிந்து ஒளித்துக் கொண்டிருக்கும். தனனிடத்தில் விஷமில்லாத நீர்ப்பாம்பு அஞ்சாமல் வெளியிலேஇடக்கும். அவைபோல மனத்தினுள்ளே வஞ்சனையை யுடையவர் தம்மைத் தாமே மறைப்பார். வஞ்சனையில்லாத மனத்தையுடையவர் அப்படித் தம்மை மறைக்க மாட்டார்.

புரட்டாசிமீ கஙஉ

வஞ்சனை—Deceit.

நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலர்க் கென்றுந்
தருஞ் சிவந்த தாமரையா டான். —நல்வழி.

(க-ரை) வஞ்சனை செய்யாதவர்க்குச் செந்தாமரை மலரில் இருக்கின்ற சீதேவியானவள் நீர்வளத்தையும், நிழல்வளத்தையும் நிலத்திலே நிறையும் நெற்போரையும், பேரையும் கீர்த்தியையும் பெரிய வாழ்வையும் ஸ்ரீமதனதையும் வளருகின்ற செல்வத்தையும் நிறைந்த ஆயுளையும் எந்நாளும் கொடுத்தருள்வள்.

புரட்டாசிமீ கஙஉ

அழுக்காறு—Envy.

விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின். —குறள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) ஒருவன் பாவரிடத்தும் பொறுமை இல்லாமையைப் பெறுவானுகில் அதைவிட மேலான பேறு ஒன்றுமில்லையாம்.

புரட்டாசிமீ களவ

அழுக்காறு—Envy.

அறனுக்கம் வேண்டாதா னென்பான் பிறனுக்கம்
பேணு தழுக்கறுப் பான். —குறள்.

(க-ரை) மறுமைக்குத் தருமத்தையும், இம்மைக்குச் செல்வத்தையும் வேண்டாதவனென்று சொல்லப்படுவோன் பிறனது செல்வத்தைக் கண்டவிடத்து மகிழாமற் பொறுமைப்படுவோன்.

புரட்டாசிமீ கஅவ

அழுக்காறு—Envy.

அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னுர்
வழுக்கியுங் கேடீன் பது. -குறள்.

(க-ரை) பொறுமையானது, பகைவரிலும் பார்க்க ஒழிந்திருந்து கேட்டைத்தரும். ஆதலால், அப்பொறுமையுடையவர்க்குக்கேட்டைத்தருவதற்குப் பகைவர்வேண்டாம். அதுவே போதும்.

புரட்டாசிமீ ககக

அழுக்காறு— Envy.

அவ்வித் தழுக்கா றுடையாணை செய்யவ
டவ்வையைக் காட்டி விடும். —குறள்.

(க-ரை) பிறர் செல்வம் கண்டவிடத்தே பொறுமை உடையவனை இலக்குமிதேவி தானும் பொறுமைப்பட்டு அவனைத் தனது தமக்கைக்குக் காண்பித்து விட்டுத் தான் நீங்குவாள்.

புரட்டாசிமீ உ0வ

செல்வச்செருக்கு—Pride of wealth.

தொலைபாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால்
இரைக்கும்வண் டேமலர்நீர்ங்கோதாய் மேரு
வரைக்கும் வந்தன்று வளைவு. —நன்னெறி.

(க-ரை) ஒலிக்கின்ற வண்டுகள் ஊதுகின்ற பூக்களாலாகிய குளிர்ச்சி பொருந்திய மாலையை யுடையவளே! தலைமையாகிய அறிவுடையவர், எக்காலத்தினும் அழியாத பெரிய செல்வத்திலே பிறந்திருக்கின்றே மென்று செருக்கு அடைதலில்லை. எக்காலத்தினும் அசைவற்றிருந்த மகாமேரு மலைக்கும் ஒருகாலத்தில் வளைவு வந்தது.

புரட்டாசிமீ உகவ

செல்வச்செருக்கு—Pride of wealth.

செல்வம் வந்துற்றகாலைத் தெய்வமுஞ் சிறிது பேணுர்
சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையுநோக்கார்
வெல்வதே நினைவதல்லால் வெம்பகை வலிதென்றெண்ணுர்
வல்வினை விளைவுமோரார் மண்ணின்மேல் வாழுமாந்தர்.
—வில்லிபாரதம்.

(க—ரை) இப்பூவுலகில் வாழும் மனிதர் தாம் செல்வராய் வருங்காலத்திற் றெய்வத்தை வழிபடார். தாம் பேசுவது என்னென்று அறிந்து பேசார். சுற்றத்தவரையும் துணையானவர்களையும் கவனிக்க மாட்டார். தாம் எக்காரியத்திலும் வெற்றியடைய வேண்டு மென்று நினைப்பதல்லாமல், கொடிய பகை வலிமை யுள்ளதென்று நினையார். வலியையான தீவினையின் பயன் என்னவென்றும் ஆலோசியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாசிமீ உஉ

செல்வச்செருக்கு—Pride of wealth.

சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம் வந்துற்ற ஞான்றே.
வறியபுன் செருக்கு மூடிவாயுளார் மூகராவர்
பறியணி செவியுளாரும் பயிறரு செவிடராவர்
குறிபெறு கண்ணுளாருங் குருடராய் முடிவரன்றே.

—குசேலோபாக்கியானம்.

(க-ரை) அறிவிற்குறைந்த மனிதர்கள் மதிக்கும் செல்வம் ஒருவனுக்கு உண்டான காலத்தில், இழிமைத்தனமுள்ள செருக்குடையவர்களாய் வாய்பேசத் தக்கவர்களும் ஊமைகளாவர். செவியுடையவர்களும் செவிடராவர். கண்ணுள்ளவர்களும் குருடராவர்.

புரட்டாசிமீ உகூ

வறுமை- Poverty.

தாயும் பகைகொண்ட பெண்டீர் பெரும்பகை தன்னுடைய
சேயும் பகையுற வோரும் பகையிச் சொல்லும்பகை
ஆயும் பொழுதி லருஞ்செல்வம் நீங்கிலிக் காதலினற்
றோயு மெஞ் சேமரு நீசர் பொறுப்பதெஞ் சுதந்திரமே.

(க-ரை) வறுமை வருங்காலத்திற்பெற்றதாயும்பகையாவள். கொண்ட பெனவியும் பெரும் பகையாவள். தன்னுடைய புதல்வனும் பகையாவன். உறவினரும் பகையாவர். இவ்வுலகமும் பகையாகும். ஆனபடியால்மனமே! மருநீசரது பொன்னடிகளே நமக்குச் சுதந்திரப்பொருளாகும்.

புரட்டாசிமீ உசஉ

வறுமை—Poverty.

காலாடி போழ்திற் கழிகிலைஞர் வாணத்தி
மேலாடி மீனிற் பலாவ—சேலா
விடரொருவ ருற்றக்கா லீர்ங்குன்ற நாட
தொடர்புடையே மென்பார் சிலர். —நாலடியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) குளிர்ந்த மலைகளையுடைய நாட்டையுடையவனே! ஒருவருக்குச் செல்வம வந்தகாலத்தில் ஆகாயத்திலே உயரச் சஞ்சரிக்கின்ற நக்ஷத்திரங்களிலும் அநேகர் அவருக்கு மிக்க உறவினராவர். அவ்வொருவரே தகாத துன்பத்தை அடைந்தால் அவரோடு நாம் உறவினரென்று முன் வந்து உதவுபவர் சிலரே.

புரட்டாசிமீ உநஉ

வறுமை-Poverty.

சொற்றரு கலையெலாந் தொடர்ந்து பற்பகல்
கற்றவராயினுங் கழி நிரப்பினு
லற்றவ ராவரே லாக்கம் வேண்டியே
பற்றலர் தம்மையும் பணிந்து நிற்பரால்.

—கந்தபுராணம்.

(க-ரை) சொல்லுதற்கரிய கலைக்ஞானங்கள் எல்லாவற்றையும் தேடிப்படிகள் கற்றவராயினும், உறவினருடைய பெருக்கத்தினால் வறுமையடைந்த காலத்தில் பொருள் வேண்டித் தம்முடைய பகைவரையும் பணிந்து நிற்பார்.

புரட்டாசிமீ உசஉ

வறுமை-Poverty.

இன்ன விளமை வறுமைவந் தெய்தியக்கால்
இன்ன வளவி லினியவு—மின்னுதா
நாளல்லா நாட்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு —மூதுரை.

(க-ரை) இன்பத்தைத் தாங்கின்ற இளமைப் பருவமானது வறுமை வந்தடைந்தால் துன்பத்தைத் தருவதாகும். இன்பத்தைத் தருகின்ற முதுமைப்பருவத்தில் இனியனவாகியபொருள்களும் துன்பத்தைத் தருவனவாம். அவைகள் சுபகாலமல்லாத காலத்திலேபூத்த நல்லபூவையும், அனுபவிப்பவனில்லாத மங்கைப்பருவத்தையுடையவளுக்கு உண்டாகிய அழகையும் போலும்.

புரட்டாசிமீ உஎஉ

வறுமை—Poverty.

சந்தன மென்குறடு தான்றேய்ந்த காலத்துங்
கந்தங் குறைபடா தாதலாற்—றந்தக்
தனஞ்சிறியராயினுந் தார்வேந்தர் கேட்டான்
மனஞ்சிறிய ராவரோ மற்று. —மூதுரை.

(க-ரை) மிருதுவாகிய சந்தனக் கட்டையானது தான் தேய்ந்துபோன காலத்திலும் தன்னுடைய பரிமளத்திற் குறையாது. ஆனபடியால் சேனையையுடைய அரசர்கள் கேட்டினாலே தங்கள் செல்வம் குறைந்தவரானாலும் மனவலிமையிற் குறைந்தவர் ஆகார்.

புரட்டாசிமீ உஅஉ

பிறனில் விழைதல்—Adultery.

அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்ரூர நச்சுவார்ச் சேரா—பிறன்ரூர
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோடிந்நாற்பொருள். —நாலடியார்.

(க-ரை) அயலானது மனையாளேவிரும்புவாரைத் தருமமும் கீர்த்தியும், சிநேகமும், கௌரவமும் ஆகிய இந்த நான்கு பொருள்களும் ஒருநாளும் சேராவாம். அயலானது மனைவியை விரும்புபவரைப் பகையும் பழியும், பாவமும் அச்சமும் ஆகிய இந்த நான்கு பொருள்களும் சேரும்.

புரட்டாசிமீ உகஉ

பிறனில் விழைதல்—Adultery.

காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையும்
மாணிண்மை செய்யுங்கா லச்சமா—நீணிரயத்
துன்பம் பயக்குமாற் றச்சாரி நீகண்ட
இன்ப மெனக்கெனைத்தாற் கூறு.

—நாலடியார்.

(க-ரை) பிறர்கண்டால் தன் குலத்துக்கு நிந்தையுண்டாம். அகப்பட்டுக் கொண்டால் கால் வெட்டப்படும். மாட்சிமையில்லாத அத்தீச் செயலைச் செய்யும்பொழுது பயம் தோன்றும். இவையேயன்றியும் நெடுங்காலம் அனுபவிக்கும்படியான நரகவேதனையை உண்டாக்கும். ஆகவே தீச்செய்கை செய்பவனே! நீ அதில் அனுபவித்த சுகம் எவ்வளவினது கூறு.

புரட்டாசிமீ கoஉ

பிறனில் விழைதல்—Adultery.

அறன்கடை நின்ரூரு ளெல்லாம் பிறன்கடை
நின்ரூரிற் பேதையாரில். —குறள்.

(க-ரை) காமம் காரணமாகப் பாவத்திலே நின்றவர் எல்லாருள்ளும், பிறனுடைய மனையாளை இச்சித்து நின்றவர் போல் மூடரில்லை.

ஐப்பசிமீ கஉ

பிறனில் விழைதல்—Adultery.

எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல் —குறள்.

(க-ரை) காம மயக்கத்தினாலே தினையளவும் தம் பிழையை நினையாமற் பிறனுடைய மனையாளிடத்தே செல்லுதல் எவ்வளவுபெருமை உடையவராயிருக்கினும், அவருடைய சிறப்பு அழியும்.

ஐப்பசிமீ உஉ

பிறனில் விழைதல்—Adultery.

பிறன்பொருளாட் பட்டொழுகும் பேதைமை ஞாலத்
திறப்பொருள் கண்டார்க ணில். —குறள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) பிறன் மனைவியை இச்சித்து நடக்கின்ற அறியாமையானது பூமியின்கண் அறநூலையும் பொருள் நூலையும் ஆராய்ந்து அறிந்தவரிடத்தே இல்லை.

ஐப்பசிமீ கூ

பெருமை—Greatness.

மூனினு நல்குவர் மூதறிஞ ருள்ளக்
கனியினு நல்கார் கயவர்—நனியினோவில்
காயினு மாகுங் கதலிதா னெட்டிபழுத்
தாயினு மாமோ வறை. —நன்னெறி.

(க-ரை) பேறிவுடையவர் கோபமுள்ள காலத்திலும் கொடுப்பர். மூடர் மனமகிழ்ச்சி உள்ள காலத்திலும் கொடார். வாழையானது மிக முற்றுதல் இல்லாத காயினுலும் பயன் படும். எட்டியானது பழுத்தாலும் பயன்படாது.

ஐப்பசிமீ சூ

பெருமை—Greatness.

உடற்கு வருமிடர்கெஞ் சோங்கு பரத்துற்றோர்
அடுக்கு மெருகோடி யாக—நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியா யஞ்சுமோ
மண்ணிற் புலியை மதிமான். —நன்னெறி.

(க-ரை) குளிர்ச்சி பொருந்திய சொல்லையுடையவளே! தம்மனம் உயர்ந்த பதியினிடத்தே அழுந்தப்பெற்ற ஞானிகள் தம்முடைய சரீரத்துக்குவரும் துன்பங்கள் ஒருகோடி யளவின வாக இருந்தாலும் அச்சமடையார். சந்திரனிடத்தில் இருக்கின்ற மானுனது பூமியில் இருக்கும் புலிக்குப் பயப்படாது.

ஐப்பசிமீ ஹ

பெருமை—Greatness.

பாலமு மேனைப் பழியும் படவருவ
சாயினுஞ் சான்றவர் செய்கலார் சாத

லொருநா ளொருபொழுதைத் துன்ப மவைபோ
லருவை யாற்றுத லின்று. —நாலடியார்.

(க-ரை) மறுமைக்குத் தீவினையும், இம்மைக்கு உலகநிந்தனையும் உண்டாகும்படி சேர்கிற காரியங்களைப், பெரியோர் தமக்கு மரணம் நேர்வதாயிருந்தாலும் செய்யமாட்டார்கள். ஏனெனில், இறத்தல், இறக்கிற ஒருநாளிலே இறக்கிற அவ் வொருபொழுதில் மாத்திரமே துன்பமாகும், அந்த இழிதொழில்கள்போல அருமையாகிய மிக்க துன்பங்களைச் செய்தலில்லை.

ஐப்பசிமீ சுஉ

பெருமை—Greatness

சுடையெலாங் காய்பசி யஞ்சுமற் றேனை
யிடையெலா மின்னுமை யஞ்சும்—புடைபரந்த
விற்புருவ வேனெடுங் கண்ணுப் தலையெல்லாஞ்
சொற்பழி யஞ்சி விடும். -நாலடியார்.

(க-ரை) பக்கங்களிலே பரவிய விற்போல் வளைந்த புருவங்களையும் வேலாயுதம்போன்ற நீண்டகண்களையு முடையவளே! அதமர்கள் யாவரும் வயிற்றை வருத்துகின்ற பசிக்குப் பயப்படுவார்கள். மத்திமர்கள் யாவரும் துன்பத்திற்குப் பயப்படுவார்கள். உத்தமர்களோ எனில் சொல்லால் வருகின்றபழிக்குப் பயப்படுவார்கள்.

ஐப்பசிமீ எஉ

பெருமை—Greatness.

சீரியர் கெட்டாலுஞ் சீரியரே சீரியர்மற்
றல்லா தார் கெட்டாலுங் கெஞ்ஞருஞ்—சீரிய
பொன்னின் குடமுடைத்தாற் பொன்னரு மென்னாகு
மண்ணின் குடமுடைந்தக் கால். —மூதுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) மேலோர் செல்வம் குறைந்த காலத்தும் மேலோராகவே மதிக்கப்படுவர். கீழோர், செல்வம்குறைந்தால் மதிப்பை இழப்பர். பொன்னாலாகிய குடம் உடைந்தால் பொன்னேயாகும். மண்ணாலாகிய குடம் உடைந்தால் அதற்கு என்ன மதிப்புண்டாகும்.

ஐப்பசிமீ அஉ

பெருமை—Greatness.

சாந்தனையுந் தீபனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம். —மூதுரை.

(க-ரை) மரங்களானவை மனிதர் தம்மை வெட்டுமளவும் குளிர்ச்சியாகிய நிழலையே கொடுத்து, வெயிலை அவர்மேற் படவொட்டாமல் மறைக்கும். அதுபோல, பெரியவர் தாம் இறந்து போகும் வரைக்கும் பிறர் தமக்குத் தீவினையைச் செய்தாலும் தாம் அவருக்குத் தம்மால் ஆகுமளவும் நன்மையையே செய்து காப்பர்.

ஐப்பசிமீ கூஉ

பெருமை—Greatness.

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றாற்றுப் பெருக்கா லுலகூட்டும்—எற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராஞலும்
இல்லையென மாட்டா ரிசைந்து. —நல்வழி.

(க-ரை) ஆற்றில் வெள்ளம் வற்றிப்போய் மணலானது அடியைச் சுடுகின்ற அக்காலத்திலும் அந்த ஆறானது ஊற்று நீர்ப் பெருக்கினால் உலகத்தாரை உண்பிக்கும். அதுபோல் நல்லகுடியிலே பிறந்தவர் வறுமையை அடைந்த காலத்திலும் இரந்தவருக்கு இல்லை யென்று சொல்லாது கொடுப்பர்.

ஐப்பசிமீ கoஎ

பெருமை—Greatness.

உள்ளக் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு —நன்னெறி.

(க-ரை) மனத்தைத் தன்வயத்தாக்கிக் கொண்டு எழுந்து வருகின்ற கோபத்தை அடக்கிக்கொள்ளுகின்ற குணமே பெரிய குணமென்று எண்ணுவாயாக. பெருகி வருகின்ற வெள்ளத்தைக் கரைகட்டித் தடுத்தல் அரியதோ முன்கட்டப்பட்ட கரையை உடைத்து விடுதல் அரியதோ?

ஐப்பசிமீ ககஉ

பெருமை— Greatness.

மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர். —குறள்.

(க-ரை) சிறியர் உயர்ந்த ஆசனங்களில் இருந்தாராயினும் பெரியவராகார். பெரியவர் தாழ்ந்த வேறு நிலத்திலிருந்தாராயினும் சிறியவராகார்.

ஐப்பசிமீ ஙகஉ

பெருமை— Greatness.

ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு. —குறள்.

(க-ரை) பிளவுபடாத மனத்தையுடைய கற்புள்ள மாதரைப்போலப் பெருமைக் குணமும் தன்னைத் தானே நிறையின் வழுவாமல் காத்துகொண்டு நிற்கிறவனிடம் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐப்பசிமீ கசுஉ

வேளாண்மை—Agriculture.

ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே-எற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. -நல்வழி.

(உ-ரை) ஆற்றினது கரையிலிருக்கின்ற மரமும், அரசன் அறிய அதிகாரஞ் செய்து சம்பாதித்துப் பெருமையாக வாழ்கின்ற வாழ்க்கையும், அழிந்து போமன்றே? ஆதலினல்உழுது பயிர்செய்து உண்டு வாழ்வதே உயர்வாகும். அதற்குச் சமானமில்லை. மற்றைத் தொழில் வாழ்க்கைகளுக்கெல்லாம் அழிவு உண்டு.

ஐப்பசி கசஉ

வேளாண்மை—Agriculture.

உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து. —குறள்

(க-ரை) வேளாண்மை செய்பவர்கள், அத்தொழில் அல்லாத பிறதொழில்களிலே செல்வோர் யாவரையும் தாங்குதலால் உலகத்தாராகியதேர்க்கு அச்சாணியாவர்.

ஐப்பசிமீ கஙிஉ

வேளாண்மை—Agriculture.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர். -குறள்

(க-ரை) எல்லாரும் உண்ணும்படி உழுதலைச் செய்து அதனல் தாமும் உண்டு வாழ்கின்றவரே வாழ்கின்றவர் மற்றவரெல்லாரும் பிறரைத் தொழுது அதனல் தாமும் உண்டு அவரைப் பின் செல்லுகின்றவர்.

ஐப்பசிமீ கசூஉ

வேளாண்மை—Agriculture.

இரவா நிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். -குறள்.

(க-ரை) தம் கையால் உழுதல்செய்து உண்ணுதலை இயல்பாக உடையவர், பிறரிடத்தில் இரக்கப்போகார். தமமிடத்தில் இரப்பவர்களுக்கு ஒளிக்காமற்கொடுப்பர்.

ஐப்பசிமீ களஉ

வேளாண்மை—Agriculture.

உழவினர் கைம்மடங்கி னிலலை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை. -குறள்.

(க-ரை) உழவருடைய கை மடங்குமாயின் யாவரும் விரும்பும் உணவும் கிடையா. துறந்தோமென்பார்க்கு அவ்வறத்திலே நிற்றலும் முடியா.

ஐப்பசிமீ கஅஉ

பலசமய ஒற்றுமை—Unity of Religious.

புண்ணியமாம் பாவம்போம் போனகாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்—ஏண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நண்மை செயல். -நல்வழி.

(க-ரை) புண்ணியமே செய்யத்தக்கது. பாவமே ஒழிக்கத்தக்கது. முற்பிறப்பிற்செய்த புண்ணிய பாவங்களே இப்பிறப்பில் அனுபவிக்கும் பொருளாகும். ஆராயுமிடத்து எந்தச்சமயத்தார் சொல்வதும் இந்தப்பொருளேயல்லாமல் மற்றொன்றுமில்லை. ஆதலினலே பாவத்தை நீக்கிப் புண்ணியத்தைச் செய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐப்பசிமீ கூஉ

சாதி—Caste.

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கு ளுள்ள படி நல்வழி.

(க-ரை) சொல்லுமிடத்துப் பூமியிலே உயர்வாகிய சாதி யென்றும், இழிவாகிய சாதியென்றும் இரண்டேயல்லாமல் வேறில்லை. நீதி தவறாத நல்வழியிலே நின்றுகொண்டு முறை மையோடு சற்பாத்திரருக்குக் கொடுத்தவரே உயர்வாகிய சாதி யார். கொடாதவர் இழிவாகிய சாதியார்.

ஐப்பசிமீ உ0கூ

குடிப்பிறப்பு—High Birth.

உடுக்கை யுறறி யுடம்பழிந்தக் கண்ணுங்
குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்ரு
நிடுக்கண் டலைவந்தக் கண்ணு மரிமா
கொடிப்புற் கறிக்குமோ மற்று. -நாலடியார்.

(க-ரை) உடுக்கப்படும் ஆடையும் கெட்டு உணவில்லாமல் உடம்பு மெலிந்து அழிந்துபோனாலும் உயர்குடியிற் பிறந்தோர் தமது குலத்துக்குரிய ஒழுக்கத்திற் குறைவுபடார் எப்படி பென்றால், பசியினாலாகிய துன்பம் மிகுதியாக உண்டாகும் பொழுதும் சிங்கம் கொடியாகப் படர்ந்திருக்கும் புல்லைத் தின்னாது.

ஐப்பசிமீ உகூ

குடிப்பிறப்பு—High Birth.

இருக்கை யெழுது மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டிணை—குடிப்பிறந்தார்
குன்ரு வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்ரு வினரற்பாற் றன்று —நாலடியார்.

(க-ரை) பெரியோரைக் கண்டால் உடனே தமது ஆச னத்தைவிட்டெழுந்து நிற்றலு , அவர்களை எதிர்கொண்டு சென்று அழைத்து வருதலும், இன்னமும் அவர்கள் மீளும் பொழுது விடைகொடுக்கத் தாம் அவரை விட்டுப்பிரிதலும் இத்தனமையான செயல்களை உயர்ந்த குடியிற் பிறந்தவர்கள் என்றும் இயற்கையான ஒழுக்கமாக வைத்துக்கொண்டார்கள். ஆதலால் அவர்களை மூடர்களுடனே ஒருதன்மையாகமதித்தல் தக்கதன்று.

ஐப்பசிமீ உஉ

குடிப்பிறப்பு—High Birth.

கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சஞ்
சொல்லாமை யுள்ளு மார் சோர்வச்ச—மெல்ல
மிரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம்
மாணக் குடிப்பிறந் தார். —நாலடியார்.

(க-ரை) தாம் படியாமைக்கு அஞ்சுதலும், கீழோர் செய் யும் இழிதொழில்களைச் செய்தற்கு அஞ்சுதலும், தீச்சொற களைச் சொல்லாமல் இருப்பதில் தவறிப்போமோவென்று அஞ் சலும், பலவற்றை இரப்பவர்களுக்கு யாதாயினுமொன்றைக் கொடுக்கக்கூடாமற் போனால் அதற்கு அஞ்சுதலும், உயர்குடி யிற் பிறந்தார்க்கே உள்ளன. ஆனபடியால் இவ்வுயர்குடியிற் பிறந்தவர்கள் மரக்கலத்தில் உள்ளார்போல எப்பொழுதும் அச்சமுடையார்.

ஐப்பசிமீ உகூ

சிக்கென வாழ்வு—Economical Life.

ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனே யெழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனே நாடு. —நல்வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) தனக்குக் கிடைத்த வருவாய்குச் செலவு அதிக மானவன், மானம்கெட்டு, அறிவு இழந்து, தான் ஓடிப்போன திசையிலும் எல்லார்க்கும் கள்ளனாகி, எழுவகைப்பிறப்புக்களி லும் பாவமுடையவனாகித் தன்னிடத்து அன்புவைத்த பெண் டிருக்கும் பொல்லாதவனுவான். இதை ஆராய்ந்து அறி.

ஐப்பசிமீ உசஉ

திருப்தி—Contentment.

உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்
எண்பது கோடி நினைந் தெண்ணுவன—கண்புதைந்த
மாந்தர்குடி வாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான். -நல்வழி.

(க-ரை) உண்பது ஒருநாழியரிசி அன்னமேயாகும். உடுப் பது நான்குமுழ வஸ்திரமேயாகும். அவர் எண்ணும் காரியங் களோ எண்பது கோடியாகும். மட்பாத்திரம் அழிந்தாற்போல அவர் சரீரம் அழியும் வரையும் துன்பமே விளையும். ஆனபடி யால் உள்ளதே போதுமென்று திருப்தியா யிருத்தல்வேண்டும்.

ஐப்பசிமீ உடஉ

பசிநோய்—Hunger.

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப் பறந்துபோம். —நல்வழி.

(க-ரை) பசிநோய் ஒன்று மாத்திரம் வந்தால், மானமும் குலமும், கல்வியும், வாய்மையும், அறிவுடைமையும், கொடை யும், தவமும், உயர்வும், தொழின்முயற்சியும் தேன் பெருக்குப் போலத் தோன்றுகின்ற சொல்லையுடைய மங்கையர் மேல் ஆசைவைத்தலுமாகிய இப்பத்தும் விட்டோடிப்போம்.

ஐப்பசிமீ உகஉ

ஈசுவர சித்தம்—God's Will.

ஒன்றை நினைக்கின் றதுவொழிந்திட் டொன்றுகும்
அன்றி யதுவரினும் வாஞ்செய்தும்—ஒன்றை
நினையாத மூன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல். —நல்வழி.

(க-ரை) ஒரு பொருளைப் பெற நினைத்தால் அப்பொருள் கிடையாமல் வேறுபொருள் கிடைத்தாலும்கிடைக்கும். அன்றி அப்பொருள் வந்து கிடைத்தாலும் கிடைக்கும். நினையாது இருக்க ஒரு பொருள் தானே வந்து நின்றாலும் நிற்கும். இவை எல்லாம் என்னை ஆண்டருளும் கடவுளுடைய செயல்.

ஐப்பசிமீ உளஉ

உலோபிகள்—Misers.

பெற்றூர் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்று நுகர்தா ரெனவேண்டார்—மற்றோர்
இரணங் கொடுத்தா லிடுவரிடாரே
சரணங் கொடுத்தாலுந் தாம். —நல்வழி.

(க-ரை) உலோபிகள் தமக்கு அகிதத்தைச் செய்யுங் கள்வர் முதலாயினோர்க்கன்றி இதத்தைச் செய்யும் தாய்தந்தை முதலாயினோர்க்குக் கொடார்.

ஐப்பசிமீ உஅஉ

சாதி-Caste.

கல்ல குலமென்றுந் தீயகுலமென்றுஞ்
சொல்வன வல்லாற் பொருளில்லைத்—தொல்சிறப்பி
னெண்பொருளொன்றே தவங்கல்வி யாள்வினை
யென்றிவற்றா னுதுங் குலம். —நாலடியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கு-ரை) உயர்ந்த குடியெனவும் தாழ்ந்த குடியெனவும் சொல்மாத்திரத்திலே யிருப்பதல்லாமல், அச்சொற்களுக்குச் சிறந்த பொருளில்லை ஏனெனில் பழமையான சிறப்பையுடைய சுத்தமான செல்வமென்று மாத்திரத்தாலோ தவமும், படிப்பும், முயற்சியும் என்று சொல்லப்பட்ட இக்குணங்களால் மேன்மையடையும். ஆகையால் நற்குணமுதலிய இருந்தால் நல்ல குலமென்றும், அவை இன்மையால் தியகுலமென்றும் சொல்லப்படும்.

ஐப்பசிமீ உகூஉ

முயற்சி—Industry.

ஆக்கமிங் கொருவரா லணுக வேண்டுமே
லூக்கமுண் டாவரே லுறுவரன்னது
நீக்கமில் கொள்கையி னிற்பரே யெனின்
மேக்குறு பெருந்திரு விரைவின் மேவுமால்.

—கந்தபுராணம்.

(கு-ரை) இவ்வுலகத்தில் ஒருவர் செல்வத்தையடைய வேண்டு மானால் முயற்சியுடையவரா யிருந்தால் அதை அடைவர். அவர் குற்றமற்ற நிலையில் நிற்பாராயின், விரைவிலே உயர்ந்த பெரிய செல்வத்தை யடைவர்.

ஐப்பசிமீ உடஉ

முயற்சி—Industry.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சா
ரெவ்வெவா றீமையு மேற்கொள்ளார்—செவ்வி
யருமையும் பாரா ரவமதிப் புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினர். —நீதிநெறிவிளக்கம்.

(கு-ரை) தம்முயற்சியிலே கண்ணாயிருப்பவர் தமக்கு நேரிடும் சரீர வருத்தத்தைப் பாரார், பசியைக் கவனியார். நித்திரை செய்யார் எவர் தீமைகளைச் செய்தாலும் அதைக்கவனியார் கஷ்டமும் பாரார். மற்றவர்கள் தம்மை அவமதித்தாலும் அதைக் கவனியார்.

ஐப்பசிமீ உசஉ

முயற்சி—Industry.

இசையாதெனினு மியற்றியோ ராற்ரு
லசையாது நிற்பதா மாண்மை—யிசையுங்காற்
கண்ட நிரையலைக்குங் கானலந் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழரோ மற்று. —நாலடியார்.

(கு-ரை) தாழையை அலைகள் அலையச்செய்கின்றகரைச்சோலையையுடைய அழகிய குளிர்ந்தகடற்றுறையையுடையபாண்டியனே! தொடங்கிய கருமம் எளிதில் முடியாதாயினும், விடாமல் முயற்சி செய்து ஒருவகையாலும்தளராமல் நிலைபெற்று நிற்பது ஆண்தன்மை அங்ஙனமன்றி எளிதில் எல்லாம் செய்வதாலுல் பெண்களும் மேன்மைபெற மாட்டார்களோ.

கார்த்திகைமீ கஉ

முயற்சி—Industry.

உறுபுலி யூனிரை யின்றி யொருநாட்
சிறுதேரை பற்றியுந் தின்னு—மறிவினுற்
காற்றெழி லென்று கருதற்க கையினுன்
மேற்றெழிலு மாங்கே மிகும். —நாலடியார்.

(கு-ரை) வலிமை பொருந்திய புலியானது இறைச்சியாகிய உணவில்லாமல் ஒருநாளத்திற் சிறிய தவளையையும் பிடித்துப் புசிக்கும். அதுபோல, தன் அறிவினுலே கிடைத்த தொழிலைக் காலாற் செய்யும் சிறுதொழிலென்று அலக்ஷியம் செய்யாதிருக்கக்கடவன். ஏனெனில் அச்சிறுதொழில் செய்து வருகையிலேயேகையாற் செய்தற்குரியமேலானசெய்கையும்உண்டாகும்.

கார்த்திகைமீ உஉ

முயற்சி—Irdustry.

தீங்கரும் பின்ற திரள்கா லுலையலரி
தேங்கமழ் காற்ற மிழந்தா அங்—கோங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
போரண்ணமயில்லாக் கடை. —நாலடியார்.

(க—ரை) மிக்க இன்சுவையுள்ள கரும்பிற்பிறந்தும் அதன் நுனியிலுள்ள மலர், குதிரையின் பிடரிமயிர் போலச் சிறப்பிலா திருப்பது போல உயர்குலத்திற் பிறந்தாலும் முயற்சியில்லாத வருக்குச் சிறப்பில்லை.

———

கார்த்திகைமீ ருக

முயற்சி—Industry.

தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும். —குறள்.

(க-ரை) முயற்சி செய்த தொழில் ஊழ்வகையால் நீங்கக் கப்பட்ட பயனைத் தாராதாயினும், முயற்சி தனக்கிடமாகிய உடம்பு வருந்திய வருத்தத்தில் கூலியளவு கொடுக்கும். பாழா காது.

———

கார்த்திகைமீ சக

முயற்சி—Industry.

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். —குறள்.

(க-ரை) முயற்சியானது ஒருவருடைய செல்வத்தை வளர்க்கும். அம்முயற்சியில்லாமை வறுமையை அடைவித்து விடும்.

———

கார்த்திகைமீ ருக

முயற்சி—Industry.

ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர். —குறள்.

(க-ரை) பயனை விலக்குவதாகிய ஊழையும் விலக்குவார் இடைவிடாது முயற்சி செயவோர்.

———

கார்த்திகைமீ கூக

முயற்சி—Industry.

மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
ஞுளுளா டாமரையி னுள். —குறள்.

(க-ரை) சோம்பலுடையவள் ஒருவனுடைய சோம்பலினிடத்தே இருப்பாள். சோம்பலில்லாதவனது முயற்சியினிடத்தே இருப்பா ளென்று அறிந்தோர் சொல்லுவர்.

———

கார்த்திகைமீ எக

ஊக்கம்—Perseverance.

உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். குறள்.

(க-ரை) ஒருவனுக்கு மனவெழுச்சி யுடைமையே நிலை பெற்ற உடைமையாம். பொருளுடைமை நிலைபெறாமல் நீங்கும்.

———

கார்த்திகை மீ அக.

ஊக்கம்—Perseverance.

ஆக்க மதர்வினைப்ச் செல்லு மனைசவிலா
வூக்க முடையா னுழை. —குறள்.

(க-ரை) அசைவில்லாத மனவெழுச்சி யுடையவனிடத்தே செல்வமானது வலியத்தேடி அடையும்.

———

கார்த்திகைமீ கூக

ஊக்கம்—Perseverance.

உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு. -குறள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) மனவெழுச்சி யில்லாதவர் இவ்வுலகத்தாருள் வண்மையையுடையமென்று தம்மைத்தாமே மதிக்கும் மதிப் பைப் பெரூர்.

கார்த்திகைமீ கoஉ.

பலசமய ஒற்றுமை— Unity of Religions.

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற்பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல். —நல்வழி-

(க-ரை) புண்ணியமே செய்யத்தக்கது. பாவமே ஒழிக் கத்தக்கது. மூற்பிறப்பிற்செய்த அந்தப் புண்ணியபாவங்களே, பூமியிற் பிறந்த மனிதர்களுக்கு வைத்த பொருளாகும். ஆராயு மிடத்து எந்தச் சமயத்தார் சொல்வதும் இந்தப் பொருளே யல்லாமல் மற்றொன்றுமில்லை. ஆகலினாலே பாவம் நீங்கப் புண் ணியத்தைச் செய்க

கார்த்திகைமீ கஉஉ

புகழ்—Fame.

ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு. -குறள்.

(க-ரை) வறியவர்க்குக் கொடுத்தலினாலே புகழுண்டாக வாழ்கடவர். அப்புகழல்லாமல் மக்கள் உயிர்க்கு வேறு பய னில்லை.

கார்த்திகைமீ கஉஉ.

புகழ்—Fame.

ஒன்று லகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில். -குறள்.

(க-ரை) தனக்கு இணையில்லையாக ஓங்கிய கீர்த்தி யல்லா மல் உலகத்திலே அழியாமல் நிலைபெறுவது வேறொன்றுமில்லை.

கார்த்திகைமீ கஉஉ.

புகழ்— Fame.

தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று. -குறள்.

(க-ரை) மனிதராய்ப் பிறந்தால் புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்கக்கடவர். அக்குணமில்லாதவர் மனித ராய்ப் பிறத்தலினும் பிறவாமை யிருத்தல் நல்லது.

கார்த்திகைமீ கசஉ.

வழக்கோரம்—Partiality in Justice.

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மற்றோரஞ் சொன்னர் மன்னே. -நல்வழி.

(க-ரை) தருமசபையிலே பட்சபாதம் சொன்னவரு டைய வீட்டிலே பேய்கள் வந்துசேரும். வெள்ளெருக்கு மூளைத்துமலரும். பாதாளமூலியென்னும் கொடி படரும். மூதேவியானவள் போய் நிலைபெற்று வாழ்வள். பாம்புகள் குடி யிருக்கும்.

கார்த்திகைமீ கருஉ.

இறந்தவர்மாட்டுத்துக்கம்— Grieffor the dead.

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலு
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
மமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் நிட்டுண் டிரும். -நல்வழி.

(க-ரை) இறந்தவர்பொருட்டு அழுகையினால் உடம்பிற் குத் தளர்ச்சியும், உயிருக்கு வருத்தமும் உண்டாகுமேயன்றிச் சிறிதும் பயனில்லாமையால் கவலையை யொழித்துச் சற்பாத் திரத்துக்குக் கொடுத்து வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகைமீ கசுவ.

நடுவுநிலைமை—Impartiality.

செப்ப முடையவ னுக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து. -குறள்.

(க-ரை) நடுவுநிலைமையை யுடையவனது செல்வமானது பிறர் செல்வம்போல் அழிதலின்றி அவன் சந்ததிபார்க்கும் உறுதியாதலை உடையதாம்.

கார்த்திகைமீ களவ

நடுவுநிலைமை—Impartiality.

நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல். -குறள்.

(க-ரை) தீங்கன்றி நன்மையே தரினும் நடுவு நிலைமை நீங்கலால் உண்டாகின்ற செல்வத்தை அப்பொழுதே நீங்கவிடக் கடவன்.

கார்த்திகைமீ கஅவ

நடுவுநிலைமை—Impartiality.

கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. -குறள்.

(க-ரை) தீவினையினுலே கேடும், நல்வினையினுலே பெருக்கமும் உண்டென்று அறிந்து மனதிலே நடுவு நிலைமையை யுடையவராயிருப்பதே அறிவால் நிறைந்தோர்க்கு அழகாம்.

கார்த்திகைமீ ககூவ

பயனில்சொல்—Idle Talk.

பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும். -குறள்.

(க-ரை) அறிவுடையோர் பலரும் கேட்டு வெறுக்கத்தக்க பயனில்லாத சொற்களைச் சொல்பவன் எல்லாராலும் இகழப் படுவான்.

கார்த்திகைமீ உ0வ

பயனில்சொல்—Idle Talk.

நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாரா
பண்பில் சொற பல்லா ரகத்து. -குறள்.

(க-ரை) பயனோடு பொருந்தாத குணமில்லாத சொற்களைப் பலரிடத்தே ஒருவன் சொல்லுவானுயின் அவை நீதியோடு பொருந்தாதவையாகி, நற்குணங்களில் இருந்து அவனை நீக்கும்.

கார்த்திகைமீ உகவ

பயனில்சொல்—Idle Talk.

பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். -குறள்.

(க-ரை) பயனில்லாத சொற்களைப் பலதரமும் சொல்லுவோனை மனிதனென்று சொல்லாதே. மனிதருக்குள்ளே பதர் என்று சொல்லக்கடவாய்.

கார்த்திகைமீ உஉவ

பயனில்சொல்—Idle Talk.

அருமபய னுயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல். -குறள்.

(க-ரை) அறிதற்கரிய பான்களை ஆராயவல்ல அறிவை யுடையோர் மிகுந்த பயனில்லாத சொற்களைச் சொல்வார்கள்.

கார்த்திகைமீ உஙவ

பொச்சாப்பு—Forgetfulness.

பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. -குறள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) மறதியானது ஒருவனது கீர்த்தியைக் கெடுக்கும். வித்திய வறுமையானது புத்தியைக் கெடுக்கும்.

கார்த்திகை மீ உசஉ

பொச்சாப்பு—Forgetfulness.

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. -குறள்

(க-ரை) பயமுடையவர்களுக்கு காவ்வகை அரணங்கள் இருந்தும் பயனில்லை. அதுபோல மறதியுடையவர்க்குச் செல்வங்களிருந்தும் பயனில்லை.

கார்த்திகைமீ உநுஉ

பொச்சாப்பு—Forgetfulness.

முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னு நிரங்கி விடும். -குறள்.

(க-ரை) வாராமற் காக்கப்படும் துன்பங்களை முற்பட அறிந்து காவாமல் மறந்திருந்தவன், பின்பு தன் குற்றத்தைக் குறித்து விசனப்படுவான்.

கார்த்திகைமீ உசுஉ

பொச்சாப்பு—Forgetfulness.

இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில். -குறள்.

(க-ரை) மறவாமையானது யாவரிடத்தும் எக்காலத்தும் ஒழிவில்லாமல் நேர்படுமாயின் அதனை ஒக்கும் நன்மையானது இல்லை.

கார்த்திகைமீ உஎஉ

தீவினை—Evil

தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும். -குறள்.

(க-ரை) இன்பத்தின் பொருட்டுச்செய்யும் தீவினைகள் பின்னே துன்பங்களைத் தருதலால் அப்படிப்பட்ட தீவினைகள் தீயினும் அதிகமாக அஞ்சப்படும்.

கார்த்திகைமீ உஅஉ

தீவினை—Evil.

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. -குறள்.

(க-ரை) ஒருவன் மறந்தும் பிறனுக்குக் கேட்டை நினைப்பானேயில் அவனுக்குத் தருமக் கடவுள் கேட்டை நினைக்கும்.

கார்த்திகைமீ உகஉ

தீவினை—Evil.

எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும். -குறள்.

(க-ரை) எவ்வகைப் பகைக்கும் ஒருவிதத்தால் தப்பலாம் தீவினைப்பகை தொடர்ந்து தப்பாது கொல்லும்.

கார்த்திகைமீ கூஅஉ

தீவினை—Evil.

தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால். -குறள்.

(க-ரை) ஒருவன் தன்னை விரும்புதலுடையவனாயிருந்தால் தீவினையாகிய பிரிவினுள் எவ்வளவு சிறிய தொன்றையாயினும் பிறரிடத்தே செய்யாதிருக்கக் கடவன்.

மார்கழிமீ கஉ.

பேதைமை—Ignorance.

மையலொருவன் களித்தற்றாற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின். -குறள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) ஒருவன் படியாதவனேயாயினும் அவன்கையிலே பொருள் மாத்திர மிருந்தால் அவனே யாவரும் போய் எதிர் கொண்டு உபசரிப்பர். படித்தவனேயாயினும் பொருள் இல்லாதவனை அவன் மனைவியும் விரும்பாள், அவனைப் பெற்று வளர்த்த மாதாவும் விரும்பாள். அவன் வாயிற் பிறக்கும் சொல்லானது பயன்படாது.

———

மார்கழிமீ அஉ

அகங்காரம்—Pride.

மழைத்தண்ணீர் மேட்டு நிலத்திலே தங்கி நிற்பதில்லை. பள்ளமான இடத்துக்கு ஓடிவந்து விடுகிறது. அதுபோல ஈசுவர கிருபையானது பெருமையும் கர்வமு முள்ளவர்களுடைய மனத்தில் தங்கி நிற்பதில்லை. பவ்யர்களின் மனத்திலேதான் தங்கி நிற்கும். —ஸ்ரீராமகிருஷ்ணர்.

———

மார்கழிமீ கூஉ

அகங்காரம்—Pride.

கர்வியாக இருப்பது கேவலம் தாழ்ந்த சுபாவம். காக்கையைப்பார்; தான் சாமர்த்தியமுள்ள பட்சியென அது நினைத்துக் கொண்டிருக்கிறது. ஒருபோதும் அது வலையில் அகப்படுவதில்லை. ஆபத்து வருமென்பதைச் சற்றுத் தெரிந்துகொண்டதும் பறந்தோடி விடுகிறது. வெகு தந்திரமாக ஆகாரத்தைத் திருடுகிறது. என்றாலும், மலம் தின்பதில் மட்டும் அதற்கு அருவருப்பு இல்லை. -ஸ்ரீராமகிருஷ்ணர்.

———

மார்கழிமீ கஅஉ

அகங்காரம்—Pride.

தண்ணீர் விழுந்ததும் சுவறச் செய்யும் சாம்பல் அல்லது குப்பைக் குவியலுக்குத் தற்பெருமையைச் சமானமாகச் சொல்லலாம். தற்பெருமை கொண்டவன் மனத்தில் செபதபங்கள் யாதொரு பலனையும் தருவதில்லை. —ஸ்ரீராமகிருஷ்ணர்.

———

மார்கழிமீ கஉஉ

மரணம்—Death.

செல்வத்தின் மிகுதிபாராள் தீரனனடிமை பாரான்
சொல்வைத்த துயரம் பாரான் சூக்குமப் புத்தி பாரான்
வெல்லித்த புகழைப்பாரான் வீசியே பாசக்காலன்
கொல்லிப்ப னுயிர்மேலன்பு கொண்டவர்தருமஞ்செய்மின்
—நீதிசாரம்.

(க-ரை) காலனுனவன் பெருஞ் செல்வனென்றும் தைரிய சாலி யென்றும், ஆளடிமை யுடையானென்றும், மனைவி மக்கள் நோய் முதலிய சகிக்காத் துயரமுடையானென்றும் சூக்குமப் புத்தி யுடையானென்றும் அஞ்சியும் இரங்கியும் இயலாமலும் விடமாட்டான். குறித்த வெல்லையில் விரைந்து கொல்லிப்பானதலால் சாரும் இடன் எல்லாம் தாங்கி மகிழ்விக்குந் தருமஞ் செய்மின்.

———

மார்கழிமீ கஉஉ

பொல்லாதவர்கள்—The evil-minded.

கருப்புரத் துதளாற் பாத்தி கட்டிகஸ் தூரிமஞ்ச
ளெருப்படச்செய்து பன்னீரென்பதா னனைத்துண்டாக்கி
விரைப்புறு வெள்ளை யுள்ளி மேலிடு தீயநாற்ற
மிருப்பது கெடுமோபொல்லானேதமற்றஞ்சஞ் செய்வான்
—நீதிசாரம்,

(க-ரை) நறுமணமுடைய கருப்பூரப் புழுதியினல் பாத்தியைக் கட்டிக் கஸ்தூரி மஞ்சளை எருவாகப் போட்டுப் பன்னீரினல் பாய்ச்சியுண்டாக்கிய வெள்ளை யுள்ளியானது தனது தீய நாற்றத்தை விடாதுவாறுபோல பொல்லாதவனும் என்ன உதவி செய்யினும் தனது தீக்குணம் விடான்.

———

மார்கழிமீ கஉஉ

பொல்லாதவர்கள்—The evil-minded.

வஞ்சகன் றனக்குக்கல்வி செல்வமல் விவேகமென்ப
விஞ்சுவீண் வழக்காஞ்சாரம் விசனமு முறையே செய்யுஞ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செஞ்சொனற் குணத்து கல்லோர்க் கவைமுறை சேர்ந்த
யெஞ்சிய வறிமையிகை தெளிவினை யெய்துமன்றே. (காலே
—நீதிசாரம்.

(க-ரை) பொல்லாதவன் பெற்ற கல்வியானது, வீண் வழக்
கிற்கும், செல்வமானது வீண் அகங்காரத்தக்கும், விவேகமா
னது வீணை பிறரை வருத்துதற்கும் இடமாகும். பெரியோர்
பெற்ற கல்வியானது தருமத்துக்கும், செல்வமானது கொடுத்தற்
கும், விவேகமானது தெளிவடைவித்தலுக்கும் இடமாகும்.

மார்கழிமீ கசஉ

லோபிகள்—Misers

சிந்திய தானிபத்தைச் சேர்த்திடுங் துஷ்டப்புமன்ன
தந்திடும் பயனைக்கொள்ளாத் தண்மைபோலுலோப ராசை
யுந்திட வருந்தித் தேடுமொன்பொருட்பயனைக்கொள்ளார்
வந்திடும் விதியினுர்க்கே வருந்திக் காத்திடுவர் மூடர்.
—நீதிசாரம்.

(க-ரை) சிந்திய தானியத்தைச் சேர்க்கும் விளக்குமாறு
அந்தத் தானியப் பயனை அடையாமைபோல உலோபிகளும்
பேராசையாற் பொருளை வருந்தி அதன் பயனுகிய எவ்வித
தருமத்தையும் செய்யாமல் விதியுடையாருக்கே வைத்துக்
காப்பர்.

மார்கழிமீ கடுஉ

லோபிகள்—Misers

பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை பிறந்து மண்மே
லிறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச்செல்வஞ் சிவன்றந்ததென்று கொடுக்கறியா
திறச்சுங் குலாமருக் கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே,
—பட்டினத்தடிகள்.

(க-ரை) பிறக்கும்பொழுது கொண்டுவந்ததில்லை பிறந்து
மண்மேல் இறக்கும்பொழுது கொண்டு போவதுமில்லை. இடை
யாகிய காலத்தில் வந்துசேரும் இந்தச் செல்வமானதுவெரு
மானுல் இருபை செய்யப்பட்ட தென்றறிந்து வறியவர் முதலா
னவர்களுக்குக் கொடுக்கவறியாமல் அந்தச் செல்வத்தை விட்டு
இறந்து போகின்ற கீழ்மக்களுக்கு என்ன இதத்தைச் சொல்
லுவேன்! கச்சியேகம்பனே.

மார்கழிமீ கசஉ

லோபிகள்—Misers

நயாய்ப் பிறந்திடினல்வேட்டையாடி கயம்புரியும்
தாயார் வயிற்றினராய்ப் பிறந்துபின் சம்பந்தராய்க்
காயாமரமும வறளாங்குளமுங் கல்லாவு மென்ன
வீயாமனிதரை யேன்படைத்தாய் கச்சியேகம்பனே.
—பட்டினத்தடிகள்.

(க-ரை) நாயாய்ப் பிறந்தாலும் நல்ல வேட்டையாடித்
தன்னை வளர்ப்பவனுக்குப் பிரயோசனத்தைச்செய்யும் அன்னை
வயிற்றில் மானிட சென்மமாகப் பிறந்து பிறகு செல்வமுள்ள
வர்களாகி, காயாமரத்தையும் நீர் வறண்டுபோன குளத்தையும்
கற்பகவையும் போலத் தமக்கும் பிறர்க்கும் யாதொன்றையும்
கொடாத மனிதரை இவ்வுலகில் என்ன காரியத்திற்காகப்
படைத்தனை? கச்சியேகம்பனே.

மார்கழிமீ களஉ

தருமம்—Dharma.

தருமத்தை யொருவன் செய்யிற் சாருமெப்ப் பொரு
ளாங் கல்வி, திருவொடு மனை தவங்கள் சிறுவர்களொழுக்கம்
நல்ல, உருவரு ளிரக்கம் வாய்மை யுயர்குல மன்பொ டுகை,
பெருமைநல் வீரந் தானம் பிரஞானத்திலுடே. —நீதிசாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க-ரை) முற்பிறப்பிலே தருமஞ் செய்தவன் வரும் பிறவிகளிலே கல்வி, செல்வம், மனை, தவம, குழந்தைகள், நல்லொழுக்கம், அழகு, அருள், இரக்கம், வாய்மை, உயர்குலம், அன்பு, சுகை, பெருமை, நல்வீரப், தானம், பிரமஞானமாகிய பதினேழு நன்மைகளையு மடைவன்.

மார்கழிமீ கஅஉ.

தருமம்—Dharma.

மரித்திடும் பொழுது செல்வ மனைவியும் வீடு மட்டே
யுரித்தவ ரிட்டார் பாலர் சுடலையி னளவே யுண்மை
விரித்திடு மறம்பா வங்கள் விட்டுயிர் போகப் பின்னே
யுரித்துடன் சமந்து போகி யுறும்பய னீயு மன்றே.
—நீதிசாரம்.

(க-ரை) இறக்கும்பொழுது கட்டிய மனைவியும், தேடிய செல்வமும் வீடளவிலும், உறவரும், இட்டரும், புத்திரரும் சுடலையளவிலும் நீங்குவர். புண்ணிய பாவங்கள் உடம்பை விட்டு உயிர்மீபாகத்தாமே சுமந்து சென்று தம்பயனுகிய சுகதுக்கங்களைக் கொடுக்கும்.

மார்கழிமீ கஉஉ.

தருமம்—Dharma.

பஞ்சத்தி லன்ன மிட்டோன்பரிந்துயிர் நோய் தணிப்போ,
னெஞ்சத்தி னறிவு றுத்தி நிலைதவ ருதுகாத்தோ, னுஞ்சிடக்
கல்வி தன்னை யூட்டினை னிந்த நால்வர், கஞ்சத்தாள் பணிதல்
யார்க்குங் கடனென வியாதன் சொன்னன். —நீதிசாரம்.

(க-ரை) பஞ்சகாலத்தில் அன்னமிட்டவனும், நோயாளர்களுக்கு உண்டி, மருந்து, உறையுளாதிய கொடுத்து ரட்சிப்போனும், அறிவு உபதேசித்த குருவும், உபாத்தியும் ஆகிய இந் நால்வரும் எப்போதும் எவராலும் வணங்கத் தகுதியுடையவராவர்.

மார்கழிமீ உoஉ

தருமம்—Dharma.

நீர்நிறை தடாகங் கூப நிழன்மர மாவு நிஞ்சி
சீர்பெற வமைதல் கல்வி சேரிட மடங்கள் சத்திரங்
கார்பயில் சோலை கோயில் கட்டிவைத் தோனுமூவேழ்
பேர்பெறு குலமும்வாழ்த்தப் பெறுவனென் றிராமன்
[சொன்னன்.
நீதிசாரம்.

(க-ரை) நீர்நிறைந்த தடாகங்கள் கிணறுகளை யுண்டாக்கலும், நிழலையுண்டாக்கும் மரங்களையும் ஆவுரிஞ்சிகளையும் நடுதலும், கல்விச்சாலைகள் மடங்கள் சத்திரங்கள் கட்டுதலும், நந்தவனம்வைத்தலும், ஆலயமியற்றிச் சேவைசெய்தலுமாகிய கருமங்களை எவன் செய்வானோ அவன் மூவேழ் சுற்றத்துடன் வாழ்த்தப்பெறுவன்.

மார்கழிமீ உஉஉ.

புல்லறிவாண்மை—Ignorance.

அருளி னறமுரைக்கு மன்புடையார் வாய்ச்சொற்
பொருளாகக் கொள்வர் புலவர்—பொருளல்லர
வேனை யதனி யிகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூனை சுவையுணரா தாங்கு. நாலடியார்.

(க-ரை) உயிர்களிடத்திற் கருணையினால், தருமங்களை எடுத்துச் சொல்லுகிற அன்புள்ளவர்களது வாயில் இருந்துவரும் சொல்லை அறிவுடையோர் பயன் தருவதாக ஏற்றுக்கொள்ளுவர். அச்சொல்லை, ஒருபொருளாக மதிக்கப்படாத சிற்றறிவுடையவன் பாற்சோற்றினது உருசியை அகப்பை அறியாதது போல தூஷித்துப் பேசுவான்.

மார்கழிமீ உஉஉ.

புல்லறிவாண்மை—Ignorance.

தாமேயு மின்புறூர் தக்கார்க்கு நன்றூற்று
மேமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார்—தாமயங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னிடம் ஈசுவர விசுவாசம் அற்பமாக இருக்கும்போது துர்ச்சகவாசத்தினாலும் உலகப் பற்றினாலும் அதற்குக் கெடுதியுண்டாகாதபடி காப்பாற்றவேண்டும். திடசம்பிக்கை ஏற்பட்ட பிறகு உலகப்பற்றும் கெட்ட எண்ணமும் உன்னிடம் வரப் பயப்படும். உனது பரிசுத்த சகவாசத்தினால் அநேகம் கெட்டவர்கள்கூட ஈசுவராம்சம் உடையவர்களாவார்கள்.

-ஸ்ரீ ராமகிருஷ்ணர்

மார்கழிமீ உஅ

சாதனமார்க்கம்—Religious practice.

அவிழ்த்துவிடப்பட்ட யானையானது மரங்களையும் செடிகளையும் வேரோடு பிடுங்கிக்கொண்டு போகிறது. ஆனால் அதன் பாகன் அங்குசத்தால் அதன் தலையிற் குத்தினதும் அது சாந்தமாகிவிடுகிறது. அதுபோல, அடக்கியாளாத மனம் வீண் எண்ணங்களில் ஓடுகின்றது. விவேகம் என்ற அங்குசத்தால் இடிக்கப்பட்டதும் அது சாந்தமாக அமைகின்றது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்

மார்கழிமீ உகூ

பெரிது—The Great.

பெரிது கேட்கி னெரிதவம் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன்படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரியமாலோ அலைகடற் றுயின் றோன்
அலைகடல் குறுமுனி யங்கையு ளடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கோர்தலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர்பாகத் தொரு பக்கம்

இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

-ஔவை.

மார்கழிமீ உ0உ

அரிது—The Rare.

அரியது கேட்கின் நெடியவெவ்வேலோய், அரிதரிதுமானிடராதலரிதுமானிடராயினுங்கூன்குருடுசெவிடுபேடுநீங்கப்பிறத்தலரிது. பேடுநீங்கப் பிறக்தகாலையும் ஞானமும்கல்வியும் நயத்தலரிது, ஞானமும் கல்வியும் நயந்தகாலையும் தானமுந் தவமும்தான்செய்தலரிது, தானமும் தவமும் தான்செய்வராயின், வானவர்நாடு வழிதிறந்திடுமே.

-ஔவை

மார்கழிமீ உகஉ

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெங்கும்.

முற்றுப்பெற்றது.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
34099 நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org